மஞ்சரி

விஜய - பங்குனி

மார்ச், 1954

ஹிட்லரின் குழந்தையா?

வேர்வை விடும் மணி

சாவுக்கு அஞ்சாத மக்கள்

அம்மா (கன்னடக் கதை)

கும்ப மேளா (புத்தகச் சுருக்கம்)

-6-
அணா

வெற்றி வேண்டாம்

வெற்றிதான் சச்சரவுக்கு வேர். ஏனென்றால், தோற்றவனுடைய உள்ளத்தில் அவமானம் முள்ளாக உறுத்துகிறது. அவன் தூங்குவதில்லை; உலகத்தையும் இன்பமாக இருக்க விடுவதில்லை.

—பகவான் புத்தர்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாலைக ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் | கி. தாமோதரன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ. | கி. சாவித்திரி அம்மாள்
த. நா. ஸேனாபதி | சீதா தேவி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி | 'ஆர்வி'
கௌரி அம்மாள் | மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: :: மார்ச் 1954 [இதழ் 3

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

பல மாதங்களுக்கு முன் ஏதோ ஒரு கிராமத்தில் திடீரென்று ஏராளமான ஜனங்களுக்குப் பைத்தியம் பிடித்ததாக ஒரு செய்தி வந்தது நண்பர்களுக்கு ஞாபகம் இருக்கும். அரிசியோடு ஊமத்தம் விதை கலந்திருந்ததாம். அறியாமல் அதை வாங்கித் தின்றவருக்கெல்லாந்தான் பைத்தியம் பிடித்தது. 'சோற்றிலே விஷம் கலப்பதுபோல' என்று உதாரணத்துக்குச் சொல்லுவார்கள். உண்மையிலே இந்தப் பாதகத்தைப் புரிந்தவர் யார் என்று சர்க்கார் விசாரித்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் உள்ள சில வியாபாரிகள்தான் இப்படிச் செய்து, விஷ விதை கலந்த அரிசியை நமக்கு அனுப்பிவிட்டதாக விளங்கியது. இந்தக் குற்றத்துக்குப் பொறுப்பான ஆசாமிகள் 23 ஆஸ்திரேலியக் கம்பெனிகளும் இன்ஸ்பெக்ஷன் ஏஜெண்டுகளுந்தானாம். அவர்கள்மீது வழக்குத் தொடரும்படி, ஆஸ்திரேலிய சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம். ஆஸ்திரேலிய சர்க்கார் இதைச் சிறு விஷயம் என்று அசட்டை செய்யாமல் கடுமையான நடவடிக்கை எடுப்பதே நியாயம். இத்தகைய விஷயங்களே ஒரு நாட்டின் பெயரைக் கெடுக்கும்.

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா, பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் அயல் விவகார மந்திரிகளும் பெர்லின் நகரில் கூடிப் பேசியதில், முக்கியமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நான்கு வல்லரசுகளுடன், கம்யூனிஸ்ட் சீனா, வட கொரியா, தென் கொரியா இவைகளையும் சேர்த்துக்கொண்டு, ஜெனிவா நகரில் 'கொரியா' விவகாரத்தை ஆராய ஏப்ரல் 26-ஆம் தேதி ஒரு மகாநாடு கூட்ட, பெர்லினில் அயல் விவகார மந்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் 'கொரியா' மகாநாட்டுக்குப் பின், வியட்நாம், லாவோஸ், கம்போடியா, வேறு சில ஆசிய நாடுகள் இவற்றின் விவகாரங்களையும், சம்பந்தப்பட்ட நாடுகளைச் சேர்த்துக்கொண்டு இதே போல மகாநாடு கூட்டி ஆராய்வார்களாம். இந்த ஒப்பந்தம் மிகவும் மகிழ்ச்சிக்குரியதே. சிங்மன் ரீ போன்றவர்கள் இடையிலே என்ன விஷமம் செய்தாலும், அதை லட்சியம் செய்யாமல் குறிப்பிட்ட மகாநாடுகளைக் கூட்டினால் உலகத்துக்கே நன்மை விளையும்.

மேற்கு வங்காளத்தில் அகில-வங்காள வாத்தியார்கள் சங்கம் சென்ற வருஷம் ஒரு கோரிக்கையைச் சர்க்காருக்குச் சமர்ப்பித்தது. சர்க்கார் நடத்தாத ஸெக்கண்டரி பள்ளிக்கூடங்களின் வாத்தியார்களுக்கும், சர்க்கார் வாத்தியார்களுக்கு அளிப்பது போலவே மாதம் ரூ. 35 பஞ்சப்படி அளிப்பதுடன், ஸெக்கண்டரி கல்விபோர்டு சிபார்சு செய்துள்ள சம்பள விகிதங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் கோரிக்கை. "சர்க்கார் பள்ளிக்கூடங்களின் வாத்தியார்கள் கண்டிப்பான விதிகளுக்கு உட்படுகிறார்கள். காலேஜில் படித்துப் பட்டம் பெற்றவர்களையே சர்க்கார் வாத்தியார்களாக நியமிக்கிறோம். அவர்கள் 'பிரைவேட் டுவிஷன்' வைத்துக்கொள்ளக் கூடாது. இதே விதிகளுக்கு நீங்கள் உட்பட்டால், உங்களுக்கும் சர்க்கார் பள்ளிக்கூட வாத்தியார்களைப் போலவே பஞ்சப்படி கொடுக்க உதவுகிறோம். இதற்கிடையில் கோரும் பஞ்சப்படியில் பாதியைத் தரப் பள்ளிக்கூட நிர்வாகிகள் ஒப்புக்கொண்டால், மறு பாதியை நாங்கள் தருகிறோம்" என்று சர்க்கார் சொன்னார்கள். இது பிடிக்கவில்லை வாத்தியார்களுக்கு. கம்யூனிஸ்டுகள் போன்ற அரசியல்வாதிகள் இதுதான் சமயம் என்று, வாத்தியார்களுக்கு ஒத்தாசை புரிய வந்தார்கள். வாத்தியார்களின் வேலைநிறுத்தம் தொடங்கியது. அமளி ஏற்பட்டு, கல்கத்தாவில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும் வரைக்கும் விஷயம் முற்றிவிட்டது. இந்த நிலையிலாவது வாத்தியார்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, சமரசத்துக்கு வந்திருப்பது நல்ல காரியம்.

* * *

பிரயாகையில் இந்த வருஷம் கும்பமேளா வைபவம் மிகவும் பிரமாதமாய் நடந்தது. சுமார் நாற்பது லட்சம் ஜனங்கள் அங்கே கூடிப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார்களாம். ஆயினும், ஒரு துயர சம்பவம் நேர்ந்துவிட்டது. இவ்வளவு பிரம்மாண்டமான ஜனக் கூட்டத்தைச் சமாளிப்பதற்காகச் சர்க்கார் செய்த ஏற்பாடுகள் பெரிதும் வெற்றி பெற்றிருந்தும், அந்தச் சம்பவம் நேர்ந்துவிட்டது. நாகா ஸ்வாமியார்களின் ஊர்வலம் வந்தபோது, ஜனக் கூட்டம் அலங்கோலமாயிற்று. பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளுமாக 316 பேர் மிதிபட்டும் சேற்றில் அழுந்தியும் மாண்டு போனார்கள். தேசமே திடுக்கிட்டது, இந்தச் செய்தி கேட்டு. இதைப்பற்றிச் சர்க்கார் கமிட்டி ஒன்று விசாரணை தொடங்கியிருக்கிறது. இந்த மாதிரி விபத்துக்கள் எதிர்பாராதவை. இனி இந்த மாதிரி நிலைமைகளை எப்படிச் சமாளிப்பது என்று இதிலிருந்து அறிந்துகொண்டு வழிதுறைகளை வகுப்பதற்கே முக்கியமாக முயல வேண்டும். அதற்கான விசாரணையைச் சர்க்கார் செய்துகொண்டிருக்கும்போதே, சர்க்காரைப் பொறுப்பின்றிச் சில அரசியல்வாதிகள் குறை கூறுவது முறையல்ல.

குழந்தைக்கு அது வரவில்லையே, இது வரவில்லையே என்று ஆத்திரப்படலாமா?

தாயின் அவசரம்

ஜோன் மாரிஸன்

குழந்தை பிறந்ததுமே அதற்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். 'எந்த வேளையில் பசிக்க வேண்டுமோ அந்த வேளையில் அதற்குப் பசிக்க வேண்டும்; எப்போது நடக்க வேண்டுமோ, அப்போது அது நடக்க வேண்டும்; எந்த வயதில் எப்படிப் பேச வேண்டுமோ அந்த வயதில் அப்படி எல்லாம் அது பேசவேண்டும்' என்று எதிர்பார்க்கிறார்கள் அநேகம் பெற்றோர்கள். அடுத்த வீட்டுக் குழந்தையைக் காட்டிலும் தங்கள் குழந்தை இந்த விஷயங்களில் தாமதமாய் இருப்பதை இவர்கள் பொறுக்கவே மாட்டார்கள். ஆனால் நம் வீண் பெருமைக்குக் குழந்தையைப் பொறுப்பாக்குவதா? குழந்தை அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே என்று நாம் அவசரப்படுவது குழந்தைக்கே கெடுதல். தேக வளர்ச்சி, மன வளர்ச்சி இரண்டும் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரேமாதிரி இருப்பதில்லை; ஒரு குழந்தை செய்வதுபோல ஒரு குழந்தை செய்யாது. அப்படி நாம் எதிர்பார்ப்பது நியாயமல்ல.

எல்லாருக்குந்தான் அவரவர் குழந்தைகளைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்ள வேண்டும்போல் இருக்கிறது. ஆயினும் குழந்தை சீக்கிரம் நடப்பதிலும் பேசுவதிலும் என்ன தனி விசேஷம் இருக்கிறது? அவசரப்பட்டுக் குழந்தையைச் சீக்கிரம் நடக்கும்படி செய்வதில் கெடுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அடிக்கடி விழுந்து, அதனால் நடப்பதிலேயே அதற்குப் பயம் உண்டாகக் கூடும். அதற்கு நடக்க வரும்போது நடக்கட்டும் என்று விட்டுவிடுவதே நல்லது. பத்து வருஷத்துக்குப் பிறகு குழந்தை எந்த மாதத்தில் நடந்தது, 12 மாதத்திலா அல்லது 14 மாதத்திலா என்றால், நமக்கு ஒன்றும் நினைவிராது.

'நம் குழந்தை ரொம்ப மெதுவாயிருக்கிறது; அதற்கு இன்னும் ஒன்றும் தெரியவில்லையே' என்று எத்தனை பெற்றோர்கள் கவலை கொள்ளுகிறார்கள்! "மிக்கிக்கு ஒரு வயது நிரம்பி மேலே மூன்று மாதமும் சென்றுவிட்டன. இன்னும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அடுத்த வீட்டுக் குழந்தை இந்த வயதில் எவ்வளவு நன்றாகப் பேசிக்கொண்டிருந்தது! மிக்கிக்கு ஏதாவது கோளாறு இருக்குமோ?" என்று அநாவசியமாய்ப் பயப்படுகிறார்கள். ஒன்பது மாதத்துக்குமேல் பன்னிரண்டு மாதத்துக்குள் குழந்தை முதல் வார்த்தை பேசும். அதற்கப்புறம் மேலே வார்த்தைகள் வேகமாக வரும் என்று சொல்லுவதற்கில்லை. நடப்பது, ஓடுவது போன்ற காரியங்களை வேகமாகச் செய்யும்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: அக்டோபர் '53), சிக்காகோ.

குழந்தைக்குப் பேச்சு வரச் சற்றுத் தாமதமாகலாம். சில சமயம் காது சற்று மந்தமாக இருந்தாலும் குழந்தைக்குப் பேச்சு வரத் தாமதப்படும். பெற்றோர்கள் ஓயாமல் பேசுவதால், முதல் குழந்தைகள் சில சமயம் சீக்கிரமாய்ப் பேசுவதும் உண்டு. பேச்சு வருவதற்கு ரொம்ப நாளைக்குமுன்பே குழந்தை நாம் பேசுவதைக் கவனித்துக் கேட்டு ஒருவாறு தெரிந்துகொள்ளும். தாய் பேசாமல் இருந்தால் குழந்தைக்குப் பேச்சு வேகமாய் வருவது சிரமந்தான். எனவே, குழந்தைக்குப் பதில் சொல்லத் தெரியாமல் இருந்தால், அதனுடன் பேசுவது நல்லது. பேச்சுக் காதில் படாமலே இருந்தால் அது எப்படிப் பேசக் கற்றுக்கொள்ளும்?

சாதாரணமாய் ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகளே சீக்கிரம் பேசக் கற்றுக்கொள்ளுகின்றன; அதோடு நாம் பேசுவதை வேகமாயும் புரிந்துகொள்ளுகின்றன. சில குழந்தைகள் வெகு சீக்கிரம், 'அம்மா, அப்பா, தாத்தா!' என்று ஒவ்வொரு வார்த்தை பேசுகின்றன. ஆனால் முதலில் தாமதமாக இருப்பது போல் தோன்றும் குழந்தைகள், சில சமயம் பேச ஆரம்பிக்கும் போதே முழு வாக்கியங்களாகப் பேசுவதைப் பார்க்கிறோம் அல்லவா? குழந்தை விரும்பியதெல்லாம் நடந்தால்கூட அதற்குப் பேசவேண்டிய அவசியமே இல்லாததால் சீக்கிரம் பேச்சு வராமல் போகலாம். குழந்தை வேகமாய்ப் பேசவில்லையே என்று கவலைப்படும் தாய் கீழே சொல்லியபடி நடந்தால் பலன் ஏற்படும்:

1. குழந்தை ஒவ்வொன்றிலும் நம்மைப் பார்த்து அப்படியே செய்வதால் அதனுடன் பேச வேண்டும்.

2. குழந்தை அர்த்தம் இல்லாமல் ஏதாவது மழலையாகக் கூறினாலும், நாம் அது என்னது என்று கேட்க வேண்டும். அப்போதுதான், அது பேச முயலும்.

3. குழந்தைக்கு வேண்டியதைக் கவனித்து உடனே நாம் செய்துவிடக் கூடாது. அது பொம்மையைத் தூர விட்டெறிந்தால், அதை உடனே எடுத்துக் கொடுக்க வேண்டியதில்லை. குழந்தை வாய் திறந்து கேட்கட்டுமே என்று விட்டுப் பார்க்கலாம்.

எல்லாவற்றையும் விட முக்கியம் இதுதான்: குழந்தை பேசவில்லையே என்று நாம் அதிகமாய்க் கவலைப்படக் கூடாது. குழந்தைக்கு அது தெரிந்தால், அதுவும் கவலை கொள்ளும். 'பாப்பிக்கு இன்னும் தானாக ஓர் அடி எடுத்து வைக்க வரவில்லையே! என் பெரிய பிள்ளை ஒரு வயதிலேயே நன்றாக நடந்தானே!' என்று ஒரு தாய் கவலைப்படுகிறாள். நடப்பது என்ன லகுவான காரியமா? ஆடாமல் சரியாய் நின்ற பிறகு அல்லவா அடி எடுத்து வைக்க முடியும்? ஆகவே, நாம் அவசரப்படுவது தவறு. ஒன்பது மாதத்தில் நடக்கும் குழந்தையும் உண்டு; மூன்றரை வயதுக்குப் பிறகு நடக்கும் குழந்தையும் உண்டு. இதற்கெல்லாம் காரணம் கேட்பதில் பயனில்லை. நல்ல பருமனை குழந்தை சிறிது மெதுவாகத்தான் நடக்கும். கால் நீளமான குழந்தை சீக்கிரம் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். அடிக்கடி உடம்புக்கு வரும் குழந்தை பலவீனத்தால் தாமதமாய் நடக்கலாம். குழந்தை தட்டித் தடுமாறி நடக்கும்போது

எங்கேயாவது விழுந்துவிடப் போகிறதே என்று தாய் ரொம்பக் கவலைப்பட்டுப் பார்த்துக்கொண்டால், குழந்தைக்கு அது தெரிந்துவிடும். அப்புறம் பயத்தினால் அது நடப்பதற்கே முயலாது. 'குழந்தை இரண்டொருதரம் கீழே விழுந்து எழுந்தால் என்ன' என்று எண்ணித் தாய் அதிகக் கவலைப்படாமல் இருப்பதே நல்லது. நடக்க வரும் சமயத்தில் திடீரென்று அம்மாவை விட்டுப் பிரிய நேர்ந்தாலும், அல்லது வேறு வீட்டுக்கு மாற்றிப் போனாலும், புதிய மனிதர்கள், புதிய இடம் காரணமாகக் குழந்தையின் முயற்சி தடைப்படும். சில சமயம் நடக்கத் தொடங்கிய குழந்தை அதை விட்டு மறுபடியும் தவழத் தொடங்கிவிடும்; இதற்கெல்லாம் தாய் கவலைப்படக் கூடாது. கீழே விழுந்ததனால் தனியே நடக்கப் பயப்படும் குழந்தைக்குப் பயம் தெளிய வைக்கவேண்டும் என்று அவசரப்படுவதும் பிசகு. நாளடைவில் அது தானாகவே பயம் தெளிந்து நடக்கத் தொடங்கும்.

"லிண்டாவுக்குப் பத்து மாதத்துக்குமேல் ஆகிவிட்டது. இன்னும் புட்டியில்தான் பால் சாப்பிடுவேன் என்கிறாள். இந்த மாதத்தில் அந்த வழக்கம் அடியோடு மாறிவிட வேண்டும் என்று என் அம்மா சொல்லுகிறாள். என்ன செய்கிறது?" என்று ஒரு தாய் கவலைப்படுகிறாள். குழந்தை வாயில் விரல் போட்டுக்கொள்கிறது என்றும் தாய் கவலைப்படுவதுண்டு. குழந்தைக்கு இந்த வழக்கம் இயற்கையிலேயே ஏற்பட்டது. விரலைச் சப்புவதில் அதற்கு அலாதி இன்பம் உண்டாகிறது. இப்படிப்பட்ட ஒரு செய்கை, பிறந்து சில மாதங்களுக்குள்ளேயே மாறவேண்டும் என்பது அவசியமில்லை. அநேகம் குழந்தைகளுக்கு இரண்டு வயது வரையிலும் வாயில் விரல் போட்டுக்கொள்ளும் வழக்கம் மாறாமல் இருக்கிறது. நாகரிகம் குறைவாக இருக்கும் சில சமூகங்களில் மறுபடியும் கர்ப்பமாகும் வரையில் தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள். நூறு வருஷங்களுக்கு முன்பு அமெரிக்கா, ஐரோப்பா, ஆகிய நாடுகளில் ஒன்றரை அல்லது இரண்டு வயது வரையிலும் தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் வழக்கம் இருந்தது. இப்போதெல்லாம் ஒரு வயதுக்கு முன்பே அந்த வழக்கத்தை மாற்றிவிடுகிறார்கள். ஆனால் அதை மெதுவாகவே மாற்றவேண்டும். திடீரென்று பால் கொடுப்பதை நிறுத்துவது தவறு. மெதுவாய்ப் பாட்டிலுக்கு மாற்றி, பிறகு தம்ளரிலிருந்து குடிக்கப் பழக்க வேண்டும்.

அவசரமாக எதையும் மாற்றலாகாது. பாட்டிலில் சாப்பிட்டுக்கொண்டிருந்த குழந்தையைத் திடீரென்று ஒரு நாள் 'தம்ளரில் பால் குடி' என்றால், அதற்கு எப்படி இருக்கும்? கெட்டி ஆகாரம் கொடுக்கும் விஷயத்திலும் நாம் நிதானமாகவே இருக்கவேண்டும். எல்லாக் குழந்தைகளும் ஒரே விதமாக இருக்க மாட்டா. சில குழந்தைகள் வெகு நாள் வரையிலும் பாலே போதும் என்று திருப்தியாக இருக்கும். சாதம் கொடுத்துப் பார்த்து, குழந்தைக்குப் பிடிக்கவில்லை யென்றால், 'இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும்' என்று விட்டுவிட வேண்டியது தான்.

ஹிட்லரின் மகனா?

★

ஜெர்மனியில் ஒரு புதிய ஸினிமா வந்திருக்கிறது: ஹிட்லரின் சரித்திரக் காட்சிகள். உண்மையான படங்கள். அந்த ஸினிமாவில் ஒரு சிறுவன் வருகிறான். அவன் ஹிட்லரின் மகனா, இல்லையா? இந்தக் கேள்வியை எழுப்பும் இந்த விவரத்துக்கு லண்டன் 'இல்லஸ்டிரேடட்'டில் உள்ள ஒரு கட்டுரை ஆதாரம்.

சென்ற சில வாரங்களாக மேற்கு ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் உள்ள பத்து முக்கியமான சினிமா கொட்டகைகளில் ஒரே படத்தைக் காட்டி வருகிறார்கள். இன்னும் 20 ஜெர்மன் நகரங்களிலும் ஏராளமான மக்கள் இதைப் பார்க்கக் கூடினார்கள். '12 மணி ஆகி 5 நிமிஷம்' என்ற படம் அது. இதைக் குறித்துச் சென்ற மாதம் ஜெர்மனியிலே பெரிய ஆர்ப்பாட்டமும் அமர்க்களமும் ஏற்பட்டன. மேற்கு ஜெர்மனியின் பிரதமரான டாக்டர் அடனார், முதல் முதலில் இதை மேற்கு ஜெர்மனியிலும் காட்டக்கூடாது, வெளி நாடுகளுக்கும் அனுப்பக் கூடாது என்று தடை விதித்தார். "இந்தப் படம் ஹிட்லரின் கொள்கைகளைப் பாராட்டுவது போல் அமைந்திருக்கிறது. அதனால் தான் தடை விதித்தேன்" என்றார் அடனார்.

பின் ஜெர்மானியர் ஏன் இதைக் குறித்துக் கிளர்ச்சி செய்தார்கள்? இந்தப் படத்தைப் பார்க்க அப்படிக் கூடுவானேன்?—இங்கே வெளியாகியுள்ள போட்டோக்களைப் பார்த்தால் விஷயம் தெரியும். பிரிட்டனில் சமீபத்தில் இந்தப் படத்தின் சில பிரதிகள் வந்திருக்கின்றன. அவற்றை இரண்டொரு வாரத்தில் பிரிட்டனில் காட்டப் போகிறார்கள். இதிலிருந்து எடுத்தவைதான் இங்குள்ள ஃபோட்டோக்கள்.

ஹிட்லர், அவர் காதலி இரண்டு பேரும்

சிறுவனை ஈவா குளிப்பாட்டி விடுகிறாள்

இந்தப் படம் 'டாகுமெண்டரி பிலிம்' என்ற வகையைச் சேர்ந்தது. அப்படி ஒன்றும் பிரமாதம் என்பதற்கு மில்லை. வந்த காட்சிகளே திரும்பத் திரும்ப வருகின்றன. ஏற்கனவே பார்த்த ஜெர்மன், ருஷியச் செய்திப் படங்களிலிருந்து எடுத்து ஒட்டிச் சேர்த்ததுதான். மகா யுத்த காலத்தில் ஹிட்லர் ஆத்திரத்தோடு பேசிய ஒரு பிரசங்கத்திலிருந்து எடுத்த வாக்கியந்தான் இதன் தலைப்பாக அமைந்திருக்கிறது. அதில் முதல் மகா யுத்தத்தில் ஜெர்மனியில் இருந்த கோழைகளான சில தலைவர்களைப்பற்றிக் குறை கூறியிருந்தார் ஹிட்லர். தாம் கடைசி நேரத்திலுங்கூடப் போரிட்டுக் கொண்டே இருக்கப் போவதாக அப்போது சொன்னார்.

இந்தப் படத்தில் யுத்தத்துக்கு முன் அவர் தம் கட்சிக் கூட்டத்தில் பேசியது, ஹிட்லரின் 'இளைஞர் முன்னணி' அணிவகுத்து அமர்க்களம் செய்வது, ஜெர்மன் சேனை வார்ஸா, பிராஹா, வியன்னா, ஸ்டாலின்கிராடு இந்த நகரங்களை நோக்கி முன்னேறுவது இந்த மாதிரி பழைய காட்சிகளும் இருக்கின்றன. கடைசியாக ஹிட்லர், 9 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவரின் படை ஒன்றைப் பார்வையிடும்போது மிகவும் சிரமப்பட்டுப் புன்முறுவல் செய்யும் காட்சியையும் இதில் காணலாம்.

இதில் புத்தம் புதிதாகச் சேர்த்திருப்பது ஈவாவும் ஹிட்லரும் பெர்ஷ்டெஸ்கடன் என்ற மலைவாச ஸ்தலத்தில் வசித்தபோது எடுக்கப்பெற்ற ஒரு காட்சிதான். அதைப் பார்க்கவே மக்கள் அப்படி ஏராளமாகச் சினிமாக் கொட்டகையில் கூடுகிறார்கள். ஹிட்லர் ஏரியில் குளிக்கச் செல்வதையும், கோயரிங் சிரித்துக்கொண்டே பார்க்க ஹிட்லர் குஷாலாக நாட்டியமாடுவதையும் காண ஜெர்மானியர்களுக்கு அவ்வளவு விருப்பம்.

ஈவா ஒரு நீர்வீழ்ச்சியின் கீழ் ஸ்நானம் செய்கிறாள். அந்தக் காட்சி ஹிட்லரைப் பாராட்டவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், ஈவா இப்படி ஸ்நானம் செய்துகொண்டிருக்கும் சமயம் சட்டென்று அடுத்தபடியாக ஆஷ்விட்ஸ் என்ற இடத்திலுள்ள பயங்கர 'காஸ் அறை'களைக் காட்டுகிறார்கள்.

ஈவா ஒரு குழந்தையுடன் சிரித்து விளையாடிக்கொண்டிருக்கிறாள். 'இது ஹிட்லரின் குழந்

தையா?' என்று ஜெர்மன் மொழியில் இதற்கான சுவரொட்டி விளம்பரங்களை எங்கும் காணலாம். இதைப் பார்க்கப் போகிற மக்களும் ஒருவரைப் பார்த்து ஒருவர் இதையேதான் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால் ஈவாவின் சகோதரியான கிரேட் ஃபீக்லன் என்பவள், "இல்லவேயில்லை. படம் பிடிக்கும்போது ஒரு குழந்தையும் இருந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் இதை ஒரு நண்பர் வீட்டிலிருந்து அழைத்து வந்தார்கள்" என்கிறாள்.

இவள்தான் இந்தக் காட்சிகளைப் படம் பிடித்தாள். ஹிட்லருடன் ஈவா ஆஸ்திரியாவுக்குப் போயிருந்தபோது இவளும் 16 மில்லிமீட்டர் மூவி காமிரா ஒன்றை எடுத்துக்கொண்டு போய் அவர்களைப் பல சந்தர்ப்பங்களில் படம் பிடித்தாள். இதைச் சில நண்பர்களுக்குமட்டுந்தான் காட்டி வந்தாள். இப்போது பொது மக்களுக்கும் காட்டுவதால் அவளுக்கு ஏராளமாக 'ராயல்டி' தொகை கிடைத்து வருகிறது.

இந்தக் காட்சிகளுக்குப் பின் ஏற்கனவே பார்த்து அலுத்துப் போன பழைய காட்சிகள் வருகின்றன. முடிவில் ஹிட்லரும் ஈவாவும் விஷம் தின்று இறந்த (நிலக்கரி கொட்டும்) அறையைக் காட்டுகிறார்கள். இதில்தான் கிரேட் ஃபீக்லனின் புருஷனை ஹிட்லர் சுட்டுக் கொன்றுவிட்டார். அவன் பெரிய நாஜி அதிகாரியாக இருந்தான். கடைசியில் அவன் தப்பி ஓடப் பார்க்கவே ஹிட்லர் இப்படிச் செய்தாராம்.

டாக்டர் அடனார் தடை விதித்ததே படத்துக்குப் பிரமாத விளம்பரமாக முடிந்துவிட்டது. இத்தனைக்கும் இந்தப் படம் தயாரிக்க ஒன்றும் அதிகமாகச் செலவாகவேயில்லை. குறிப்பிட்ட சில காட்சிகளை வெட்டினால்தான் தடையுத்தரவை நீக்குவேன் என்ற நிபந்தனையின் பேரில்தான் டாக்டர் அடனார் அதற்கு அநுமதி தந்தார். ஓர் இடத்தில் ஹிட்லர், வின்ஸ்டன் சர்ச்சிலை, "சோதாப் பயல், பைத்தியக்காரன், கழுவுக்கேற்ற பயல்!" என்றெல்லாம் திட்டுகிறார். இதையும், ஈவா நீந்தி முடிந்ததும் பாதி அம்மணமாக வெயிலில் நிற்கும் காட்சியையும் இப்போது வெட்டிவிட்டார்கள்.

ஜெர்மனிக்கு வெளியில் இந்தப் படத்தைக் காட்டும்போது மக்கள், "இது ஹிட்லரைப் புகழ்கிற மாதிரி அமைந்திருக்கிறது" என்றும், "சர்வாதிகாரத்தை அப்பட்டமாகக் காட்டி மக்களுக்கு அதன் மேல் வெறுப்பேற்படச் செய்கிறது" என்றும் இரண்டு விதமாகவும் அபிப்பிராயம் கொள்ளலாம். இருந்தாலும் மொத்தத்தில் ஈவாவைப் பார்க்கத்தான் அநேகம் பேர் போவார்கள் என்பதில் சந்தேகமே யில்லை.

ஒழிந்த எதிரி

சில நாளைக்கு முன் நாங்கள் ஓர் எதிரியை ஒழித்தோம். சாதாரணமாக இந்த மாதிரி விஷயத்தைக் குறித்துப் பெருமை அடித்துக்கொள்வது சரியல்லதான். ஆனால், இந்த எதிரியை நாங்கள் எங்கள் நண்பனாகச் செய்துவிட்டோம்.

—'சில்டன் கவுண்டி ந்யூஸ்'

செல்வம்

ஹிந்தியிலிருந்து தமிழாக்கியவர் : **ராஜம்**

'வழித்துணை' என்ற புதிய பத்திரிகையின் ஆசிரியர் வி. திருவேங்கடத்தையங்கார். இவர் வ. ரா. வின் சாட்சாத் சகோதரர். அவருடைய நடையின் சரளத்தையும் வேகத்தையும் இவரிடமும் காணலாம். இந்தப் பத்திரிகையில் ரசமான கதைகளும் கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன. குழந்தை படித்தால், நன்றாய்ப் புரிந்துகொள்ளும். பெரியவர் படித்தால், சுவையும் பொருளும் பெறுவர்.

நான் குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவத்தில் விளையாட்டுப் பொருள்; தின்பண்டம். நானே வாலிபர்களின் வாலிபத்துக்கு உயிர்நாடி. வயோதிகர்களின் வயோதிகத்துக்கு ஊன்றுகோலும் நானே. நான்தான் செல்வம்.

மனிதன் என் அடிமை. நான் அவனைப் பலவிதமாக ஆட்டிவைக்கிறேன். அநேகந் தடவை ஆட்டிவைத்திருக்கிறேன்; இனிமேலும் ஆட்டி வைப்பேன். உலகம் என்னைப் பணிகிறது. அதை மாற்ற எனக்கு வல்லமை உண்டு. பல தடவை மாற்றியிருக்கிறேன்; இனியும் மாற்றுவேன். மனித சுபாவம் எனக்கு அடிமை. அதை நான் ஆக்குகிறேன்; அழிக்கிறேன். நான்தான் செல்வம்.

இந்தப் பரந்த உலகத்தில் ஈசுவரன் ஒருவன் உண்டென்றால், அது நானே. தர்மமும் நான்தான்; அன்பும் நான்தான்; நானே சத்தியம். மங்களகரனும் நானே; அழகு செய்பவனும் நானே; நானே சச்சிதானந்த சொரூபி. இகலோகமும் நானே; பரலோகமும் நானே. ஆனந்தமும் நானே; துக்கமும் நானே. நான்தான் செல்வம்.

நான் குலுங்குவதால் ஏற்படும் இனிமை வீணா பாணியான சரஸ்வதியின் வீணையில் ஏது? மகா விஷ்ணுவின் பாஞ்சஜன்யத்தில் ஏது? குயிலின் இனிய குரலில்

மூலம்: வழித்துணை (தமிழ்: 27-1-'54), 13, மகாலட்சுமி தெரு, டி. நகர், சென்னை — 17. வருஷச் சந்தா ரூ. 2-8-0.

தான் காண முடியுமா? அழகிய பெண்மணியின் மிருதுவான குரலில் இருக்குமா? கண்ணனின் குழலில்தான் ஏது? ஜலதரங்கத்தில் ஏது? எங்கும் கிடைக்காதே! ஸ்வரமாவேன் நான். நானே செல்வம்.

கீதை படிப்பவர்களே! தேவி உபாசகர்களே! பாகவதத்தின் பக்தர்களே! சத்தியநாராயண கதையின் அன்பர்களே! ராமாயணத்தில் பிரேமை கொண்டவர்களே! மகாபாரதத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்களே! என் கீதையைப் படியுங்கள்; என்னை உபாசியுங்கள்; என் பக்தர்களாகுங்கள்; என் கதையைக் கேளுங்கள்; என்னிடம் அன்பு செலுத்துங்கள்; எனக்கு அடி பணியுங்கள். நானே பவசாகரத்தைத்தாண்டுவிப்பவன்; நானே தீனபந்து; நானே துக்கத்தைத் தொலைக்கும் மருந்து. நானே பரோபகாரத்தின் அவதாரம்; நானே புண்ணியம். நான்தான் செல்வம்.

எனக்கு அதிருப்தி உண்டு பண்ணிவிட்டு மீள முடியுமா? என் கோபத்திலிருந்து யாராவது தப்ப முடியுமா? முடியாது; ஒருவராலும் ஒருகாலும் முடியாது. நானே ஜமீன்தார்; நானே அரசன்; சக்கரவர்த்தியும் நானே. நானே கடவுள். நான்தான் செல்வம்.

இலங்கை எரிந்தது சீதாபிராட்டியின் விருப்பு வெறுப்பினுல் அல்ல; என் விருப்பு வெறுப்பினுலேயே. நான் விபீஷணனிடத்தில் அன்பு கொண்டேன். கௌரவர்கள் அழிந்தது திரௌபதியின் கோபத்தினுல் அல்ல; என் கோபத்தினுல்தான். நான் பாண்டவர்களிடம் பிரசன்னமாயிருந்தேன். ஜெர்மனி தோற்றது, பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் சாமர்த்தியத்தாலோ தந்திரத்தாலோ அல்ல; என் விஷமத்தினுலேயே. நான் பிரிட்டனிடத்தில் கருணை கொண்டேன். நான்தான் செல்வம்.

விநாயகர் பேசுவதில்லை; நான் பேசுகிறேன். நான் அவரைவிடப் பெரியவன். அவர் நடப்பதில்லை; நான் செல்கிறேன். அவரைவிட என் சக்தியே பெரிது. ஜனங்களுக்கு என்னிடமுள்ள பற்றுதல் தேவர்களிடமும் இல்லை. என்னிடமுள்ள ஒளியும் சக்தியும் ஈசுவரனிடத்திலும் காணக் கிடைக்காதவை. இன்றைய உலகம் தர்க்க உலகம்; பிரத்தியட்சப் பிரமாணம் விரும்பும் உலகம்;சக்திமான்களின் பக்கம் சாயும் உலகம். நான் பிரத்தியட்சமாக உள்ளவன்; கைமேல் பலனளிப்பவன். நானே தெய்வம்; தெய்வத்திலும் பெரியவன். நானே இன்றைய உலகம். நான்தான் செல்வம்.

என் அநுக்கிரகத்தைப் பெற்றபின் பாவம் செய்; நீ தேவர்களாலும் போற்றப்படுவாய். என்னிடம் வரம் பெற்றுக்கொண்டு ஒன்றல்ல, இரண்டல்ல, ஏழு கொலைகள் செய்தாலும் நீ தப்பிவிடுவாய். தேசங்களுக்கிடையே கலகமூட்டு; மனிதத்தன்மையை நாசம் செய்; உலகை நொண்டி முடங்களாலும் விதவைகளாலும் நிரப்பு. எது செய்வதானுலும் என் கிருபையைப் பெற்றுச் செய். நான் சர்வசக்தியும் பொருந்தியவன். உன்னை எந்த விதத்திலும் காப்பாற்றுபவன். தர்மங்களை உதறிவிட்டு, என்னைச் சரண் அடை. நான்தான் செல்வம்.

ரசிகர் டி. கே. சி.

தி. ஜ. ர.



இரண்டொரு வாரங்களுக்கு முன் காலஞ் சென்ற ஸ்ரீ டி. கே. சி. அவர்கள், தமிழுக்கும் கலைக்கும் பெரும் சேவை செய்தவர். கம்பன் விழாக்களுக்கு வழிகாட்டியவர்; பரதநாட்டியம் புத்துயிர் பெறச் செய்தவர்; தமிழிசை இயக்கம் வலுப் பெற உழைத்தவர். அவரை ஒரு முறை நேரில் சந்தித்துப் பேசிய விவரம் இது.

ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் பிறந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில், தாய்வழிப் பாட்டி வீட்டில். வளர்ந்தது இயற்கை வளம் நிறைந்த தென்காசியில்.

எழாம் வகுப்பு வரையில் தென்காசியில் இருந்த கலாசாலையில் அவர் பயின்றார். பின்னால் திருச்சி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் படித்தார். அப்புறம் சென்னைக் கிறிஸ்தவக் காலேஜில் வாசித்து, பி. ஏ பட்டம் பெற்றார். கடைசியில் லா படித்து, பி. எல். ஆனார்.

சுமார் முப்பது வயதாயிருக்கும் போதுதான் கம்ப ராமாயணத்தில் டி. கே. சி. க்கு முதல் முதலாக அதிகமான பற்றுதல் விழுந்தது. படிக்கத் தொடங்கினார். இந்த அநுபவத்தைப்பற்றி, அவரே சொல்கிறார்:

“முதலில் ஏதோ ஒரு படலத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிக உயர்வாயிருந்தன. வேறு சில பாகங்கள் மிக மட்டமாயிருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ள வேண்டியதையெல்லாம் தள்ளி, நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன். கதையின் கட்டுக்கோப்பு, பாட்டுக்களின் ஒழுங்கான கதி, பாவம் இவைகளெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவது மாதிரி இருந்தது. கம்பரின் அற்புதமான கவிதா சக்தி மனத்தில் பட்டுவிட்டது. ஆகவே, இதே

மூலம்: புகழ்ச்செல்வர் (தமிழ்க் கட்டுரைத் தொகுதி). பிரசுரித்தவர்: கார்த்திகேயினி பிரசுரம், ராமச்சந்திரபுரம். புதுக்கோட்டை. விலை ரூ. 3-0-0.

மாதிரி பல படலங்களையும்-தள்ளு வதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொண்டு - படித்தபோது, பொன் மயமானதொரு கோபுரம் போலக் கம்ப ராமாயணம் பிரகாசிக்கத் தொடங்கியது. ஆனல், இந்தக் கோபுரத்தில் பல பாகங்கள் இடிந் தும் தகர்ந்தும் போயின என்றும் தெரியவந்தது. காரணம், பல பாடல்கள் சிதைந்தும் விட்டுப் போனதுந்தான். இப்படியாகக் கம்பரை இனங் கண்ட பிறகு, கம்பரை **நாம்** கற்ருேமென்று சொல்ல முடியாது. **கம்பரே** தனித்த முறையில், தனித்த குரலோடு நம்மிடம் பேசுகிருர் என்ற உணர்ச்சி வந்தது.''

இப்படித் தமிழ்க் கவிதைச் சுவையில் - முக்கியமாகக் கம்ப னிடம் - வர வர அதிகமாய் ஈடு பட்ட டி. கே. சி. அவர்களுக்கு, சென்னையில் பல நண்பர்கள் ஏற் பட்டதற்கு, ஒரு சம்பவந்தான் காரணம். சுமார் 1930-க்குச் சற்று முன்னே பின்னே நடந்தது அது. அப்போது ஸ்ரீ டி. கே. சி. சென்னைச் சட்டசபை யில் ஓர் அங்கத்தினராக இருந் தார். அதாவது, எம். எல். ஸி. தமிழ் இலக்கியச் சங்கத்தில் கம் பன் கவிதையைப்பற்றி ஒரு பிர சங்கம். மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அதற்குத் தலைவர். ஸ்ரீ டி.கே.சி. யின் பிரசங்கம் முடிந்து ஸ்ரீ ஐயங்கார் வந்தனம் செலுத்தி ஞர். அவர் சொன்ன வார்த்தை கள் இவைதான்: ''கவிதை என் பது நம் மனத்திலே உணர வேண் டிய ஒரு விஷயம். அதைப் பிற ருக்கு நாம் உணர்த்த முடியாது. ஆனல், இன்ருே நம் முதலியா ரவர்கள், உணர்த்த முடியாததை நமக்கு உணர்த்தி வெற்றியும் பெற்றுவிட்டார். இன்னும் ஒரு விஷயத்தையும் அவர் சாதித்து விட்டார். 'ஆங்கிலக் கல்வியும் அரசியல் விவகாரங்களும் நம்மைச் சூழ்ந்திருந்துங்கூட, அவைகளை யெல்லாம் மீறி நாம் நம் புராதனக் கலைச் செல்வத்தை ரசிக்க முடி யும்; அதன் அண்டாத ஆழத்தை எட்ட முடியும்; அதைப் பிறருக் குப் படும்படி எடுத்துச் சொல்லவும் முடியும்' என்று ஸ்ரீ டி. கே. சி. நிரூபித்துவிட்டார்.''

இந்தப் பிரசங்கத்திலிருந்து, சென்னையில் பல நண்பர்களுக்கு ஸ்ரீ டி. கே. சி. யிடம் தனி மதிப்பு ஏற்பட்டது. இந்தக் காலத்தில் தான் ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டின் கமிஷனராகி, சில வருஷகாலம் அதை அவர் திறமை யுடன் நிர்வகித்தார். பதவி ஒரு புறம் இருந்தாலும், இலக்கிய ரசா நுபவத்தை அவர் விடுவதேயில்லை. மயிலாப்பூரில் வாரத்துக்கொரு முறை தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை, புரொப ஸர் கே. ஸ்வாமிநாதன், ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், ஸ்ரீ பி. ஸ்ரீ., சில எழுத்தாளர்கள், பத்திரிகாசிரியர்கள், மற்றும் பிரமு கர்கள் எல்லாரும் கூடுவார்கள். ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் விளக்கும் கம்ப ராமாயணச் சுவையை எல்லா ரும் பருகி மகிழ்வார்கள். இந்தக் கூட்டங்களுக்கு நானும் ஒரு முறை சென்றிருக்கிறேன். முதல் முதலாக ஸ்ரீ டி. கே. சி. அவர் களை நான் கண்டதும் அங்கே தான்.

இந்தச் சம்பாஷணைக்காக, அவரை நான் கண்டபோது, அந்த நாட்கள் எனக்கு ஞாபகம் வந்தன. இப்போது அவரிடம் இலக்கிய

உற்சாகம் சம்பந்தப்பட்ட மட்டில் எந்த வித மாறுதலையும் காணவில்லை. ஆனால், களைப்போடிருந்தார். எப்போதுமே சின்னஞ் சிறு குழந்தை போல் யாரிடமும் சரளமாய், அன்புடன் பேசும் வழக்கம் உடையவர். அவருடன் சுமார் நாற்பது நிமிஷம் வரையில் இந்தத் தடவை நான் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன்.

''கம்பனைத்தவிரப் பழைய இலக்கியங்களில் வேறு கவிகளையும் நீங்கள் ரசித்திருப்பீர்களே; அவைகளுக்குள்ளே எவை சிறந்தவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அதுவா? அது, பழைய உரையாசிரியர்களின் மேற்கோள் கவிதான்'' என்று தொடங்கினார்: ''உரையாசிரியர்களின் மேற்கோள் கவிகள் சிலவற்றை அங்கங்கே பார்க்க நேர்ந்தது. அதிலிருந்து பூர்வமான கவிப்பண்பு என்ன என்று கண்டேன். அதன் மேல், உரையாசிரியர்களின் மேற்கோள்களான நல்ல கவிகளையெல்லாம் தேடுவது என் வேலையாயிற்று. நான் பழைய கவிகளின் அற்புதத்தைக் கண்டது தொகை நூல்களில் அல்ல; இந்த உதிரிப் பாடல்களில்தான்'' என்று கூறிச் சற்று நின்றார்.

பிறகு, மேலும் தொடர்ந்து, ''நான் இந்த மாதிரி பாடல்களைப் பாராட்டியபோது, என்ன சொன்னார்கள் தெரியுமா? இவருக்கு ரொம்பப் பழைய பாட்டாயிருந்தால்தான் பிடிக்கும் போல் இருக்கிறது என்றார்கள். பின்னால், பாரதியார், ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியவர்களின் பாட்டுக்களை நான் வியந்தபோது, 'ஓகோ! இவருக்கு ரொம்ப எளிய பாட்டுக்களாயிருந்தால்தான் பிடிக்கின்றன' என்று சொன்னார்கள்! கவிதைப்பண்புதான் எனக்கு முக்கியமே தவிர, பழையது புதியது என்ற வித்தியாசங்களெல்லாம் கிடையாது'' என்றார்.

இன்று தமிழ் நாட்டில் பரத நாட்டியக் கலைக்குச் சிறிது புத்துயிர் வந்திருக்கிறது என்றால், அதற்குப் பெரிதும் ஸ்ரீ டி. கே. சி. காரணம் ஆவார். மயிலாப்பூரில் அவருடைய வீட்டில் தனிப்பட்ட நண்பர்களின் முன்னிலையில் பல தடவை பரத நாட்டியம் நடப்பதுண்டு. நாட்டியம் சம்பந்தமாகச் சில அபிநய பாவங்களைக் குறித்து அவர் எடுத்துச் சொல்லுவார். அவருடைய யோசனைகளைப் பின்பற்றி, அதனால் பயன் அடைந்தவர்களில், காலஞ் சென்ற வீணை தனம்மாளின் பேத்தியான ஸ்ரீமதி பாலசரஸ்வதியை முக்கியமாய்க் குறிப்பிடலாம்.

''பரத நாட்டியத்தை மேலும் வளர்க்க நீங்கள் என்னவாவது யோசனை சொல்ல முடியுமா?'' என்று கேட்டேன்.

''பரத நாட்டியத்தைத் தமிழர்கள் ஓர் இதிகாசமாக வளர்த்து வைத்திருக்கிறார்கள்; அது மிக அற்புதமானது'' என்று பெருமையோடு குறிப்பிட்ட அவர், மேலும் சொன்னார்: ''பரத நாட்டியக் கலையில் நாலு பக்கமும் விரிந்து வீசிப் பரந்த கொடிகள் அவ்வளவையும் முதலிலேயே குழந்தைகளுக்கு இந்தக் காலத்தில் சொல்லித் தரத் தொடங்கிவிடுகிறார்கள். படிப்படியாக ஏறினால், இமயமலைச் சிகரத்தையும் எட்டிப் பிடித்துவிடலாம். அப்படிச் செய்தால், பரத நாட்டியத்தின் எல்லாக் கிளைகளுக்குள்ளும் போய் வர முடியும். ஆரம்பத்

தில் குழந்தைகளுக்குச் சிறுசிறு நடனங்களையே கற்பித்து, கற்பிக்கும்போதே ஆனந்தத்தோடு ஆடுகின்றனவா என்று பார்த்துப் பார்த்து, மெல்ல மெல்ல மேலே போக வேண்டும். ஆனந்தத்தில் பிறந்த கலையைச் சித்திரவதைக் கருவியாகச் செய்துவிட்டால், பாத்திரத்துக்கு ஆனந்தம் எங்கே வரப் போகிறது? பாத்திரத்துக்குள் ஆனந்தம் இருந்தால்தானே, ஆனந்த வெளியீடாக அது உதிக்கும்; பார்ப்பவர்களுக்கு அந்த ஆனந்தத்தை ஊட்டும்?''

தமிழிசை இயக்கத்தில் ஸ்ரீ டி. கே. சி. பெரிதும் ஈடுபட்டவர். அதைப்பற்றிக் கேட்டேன்.

அவர் சொன்னார்: ''சாமான்யமாக ஜனங்களுக்கு இருதயத்தில் இசை ஒட்டுகிறதென்றால், பாடல்களோடு சேர்ந்துதான் ஒட்டும். நல்ல உணர்ச்சியோடு கூடிய தமிழ்ப் பாடல்களைப் பாவத்தோடு பாடினால், எந்தத் தமிழனையும் அது கவர்ந்துவிடும். இதற்கு எவனும் விலக்கல்ல என்றே தோன்றுகிறது. நீங்கள்தான் ஒரு தடவை மயிலாப்பூரில் என் வீட்டுக்கு வந்தீர்களே; அப்போது இதைக் கண்டிருப்பீர்களே! உணர்ச்சிப் பாடல்களைக் குழந்தைகள் உள்பட அனைவரும் கேட்டுக் கேட்டு வந்தால், பத்து வருஷத்தில் தமிழ்ப் பாட்டுக்களை எல்லாருமே முனங்கவாவது முடியும். அந்த நிலையில் தான் தமிழிசை இயக்கம் பூரண வெற்றி பெறும். இப்போது இயக்கம் ஓரளவு திருப்திகரமாகவே இருக்கிறது.''

ராஜாஜிக்கு ஸ்ரீ டி. கே. சி. நெருங்கிய நண்பர். தாமே ராஜீயத்தில் அழுத்தமான அபிப்பிராயங்களும் உடையவர். காந்திஜீ ஓர் உணர்ச்சிக் களஞ்சியம் என்பது ஸ்ரீ டி. கே. சி. யின் கருத்து. இப்படி அரசியலையும் தலைவர்களையும்பற்றிச் சொந்த முறையில் திட்டமான கருத்துக்கள் அவருக்கு உண்டானாலும், அரசியல் இயக்கத்தில் தீவிரமாய்க் கலந்துகொள்ள அவருக்கு விருப்பம் கிடையாது.

என் கேள்விகள் முடிந்தன. விடை பெறும் சமயம்.

''இந்தாருங்கள். இதைக் குறித்துக்கொள்ளுங்கள்'' என்று, ஏதோ மறந்துவிட்டதை ஞாபகப்படுத்திக்கொண்டவர் போல், பின்வரும் விஷயத்தைச் சொன்னார்: ''தமிழ் நாட்டுக்கு நிலையாய் உள்ள செல்வங்களாகப் பல கோயில்களும் கோபுரங்களும் இருக்கின்றன. அவைகள் தங்களிடம் பொதிந்து வைத்துள்ள பண்பாடு மிக அபூர்வமானது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக வந்த பண்பாடுகள் கல்லுகளுக்குள்ளே ஊறிக் கிடக்கின்றன. நம்முடைய கடமை, அந்தப் பண்பாட்டுச் செல்வங்களை (கல்ச்சர்) அந்தக் கல்லுகளுக்குள்ளிருந்து பிழிந்தெடுத்துப் பருக வேண்டியதுதான்.''

செல்லரித்த மதச் சம்பிரதாயங்களின் சிறைகளாகக் கோயில்களை நாம் மதியாமல், அவைகளைக் கலைச் செல்வப் பொக்கிஷமாகப் பாவித்து அநுபவிக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்து.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித் தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்யவேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்து கொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

கே. வி. நடராஜன், சென்னை.

கேள்வி: 'திருக்குறளில் 'மருந்து' என்ற அதிகாரத்தில் வரும் 'அற்றதறிந்து கடைப் பிடித்து மாறல்ல - துய்க்க துவரப் பசித்து' என்ற குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், 'நெய்யும் தேனும் கலந்துண் பவர் மரணம் எய்துவர்' என்று வரைகிறார். அதுமாதிரியே என் நண்பர் ஒருவர் சிறிது தேனுண்டு அரைமணி கழித்து, 4 'டீஸ்பூன்' நெய் உண்டு, வயிற்று வலி கண்டு வாந்தியும் செய்தார். ஆனால் வேறு ஒன்றுமில்லை. இதோடு அந்தப் பரீட்சையை விட்டுவிட்டார். தேனும் நெய்யும் சிறந்த உணவாக இருந்தும், இரண்டும் கலந்துண்ணும்போது ஏன் மாறுபாடு ஏற்படுகிறது? இதற்கு விஞ்ஞான ரீதியாக அல்லது வைத்திய ரீதியாகப் பதில் சொல்லவேண்டும். பரிமேலழகர் எழுதியது சரியா?

இதே மாதிரியாகச் 'சீவகசிந்தாமணி'யில் தேனைச் சுடவைத்து உண்டால் மரணம் ஏற்படும் என்று வரைந்திருக்கிறது.

தவிர, 'பச்சைத்தேன் உடலுக்கு நல்லது. சுட்ட தேன் விஷம்' என்றும் அதில் கண்டிருக்கிறது. இந்த மாறுதல் ஏன் ஏற்படுகிறது? 'கெமிக்கல் சேஞ்சஸ்' ஏற்படுவதால் குணம் மாறுபடுகிறதா? இதை ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா? ஆனால் இது விஷப் பரீட்சையாயிற்றே.

விடை: இந்தக் கேள்வி பெரிதாயிருப்பதால், இங்கே விரிவாகவே எழுத நேர்ந்தது. கேள்வி கேட்டவர், பரிமேலழகர் விஞ்ஞானப் பயிற்சி இல்லாதவர் என்றும் அதனாலே தவறாக எழுதியிருக்கலாமோ என்றும் சொல்வதாய்த் தோன்றுகிறது. குறளுக்கு எழுதிய உரைகளில் பரிமேலழகர் எழுதியதே உயர்ந்தது, ஈடற்றது என்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் விஞ்ஞானத்தையே இங்கே கொண்டு வராமல் இலக்கியத்தை விளக்கி, நம் திருவள்ளுவரையும் பரிமே

லழகரையும் 'காப்பாற்ற' முயலுகிறேன்.

அற்றதறிந்து - முன்னுண்டது அற்ற படியை அறிந்து; துவரப் பசித்து - பின் மிகப் பசித்து; மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க - உண்ணுங்கால் மாறு கொள்ளாத உணவுகளைக்குறிக்கொண்டு உண்க. இப்படிப் பிரித்து உரை சொல்லி விவரிக்கும்போது, கடைசியாக, 'தேனும் நெய்யுந் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம் பட்டவாற்ருற் றுய்ப்பின் அதனனே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்தென்ருர்'' என்று சொல்லுகிருர்.

'தேனும் நெய்யும்
தம்முள் அளவொத்து'

என்பதற்கு, கேள்வி கேட்டவர் சொல்வது கருத்தல்ல. போஷாக்கான தேனைப் பூரண ஆரோக்கியம் அளிக்கும் அளவுக்கு அருந்துவதோடு நெய்யையும் அதே அளவுக்கு அருந்தினல், அதிகப் போஷாக்கு ஏற்படாது; நஞ்சாகவே மாறும். இரண்டையும் சேர்த்து உண்ணுவதானல் அளவைக் குறைக்க வேண்டும்.

மேலே சொல்லிய உபதேசங்களை யெல்லாம் புறக்கணித்து இச்சைப்படி உண்டால் நோய் தோன்றும்; அதனல் மரணமும் ஏற்படும்.

தேனையும் நெய்யையும் கலவை செய்து உண்டால் உடனே நோயும் மரணமும் உண்டாகும் என்று பரிமேலழகர் கூறவில்லை. அதனல் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கு அவசியமில்லை. 'சீவக சிந்தாமணி'யில் தேனைப் பற்றி வரும் பாட்டுக்கும் இதேபோன்ற கருத்துத்தான் இருக்குமென்று நம்புகிறேன்.

மு. மந்திரம், சிவகிரி.

கே: கிராமங்களில் சிலர் மருந்திடுகிருர்களே; இதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? யாரையாவது தன் வசப்படுத்தவோ, இரண்டுபேரை ஒருவருக்கொருவர் ஆகாமல் செய்யவோ மருந்திடும் வழக்கம் கிராமங்களில் இருக்கிறது. நான் பார்த்த வரையில் மருந்திடப் பெற்ற ஆளின் செயல் முழுவதும் மாறியிருக்கிறது. பின்பு அந்த மருந்திருப்பதை அறிந்த சிலர் ஒரு குழலால் ஊதி மருந்தை எடுத்துவிடுகிருர்கள். பல உருண்டைகளாக அது வெளியே வருகிறது. நாளாகியிருந்தால் அதில் ரோமம் போன்று ஒரு வளர்ச்சி தெரிகிறது. தீராத வயிற்றுவலி, தொண்டைப் புகைச்சல் இவையெல்லாம் அந்த மருந்தால் உண்டாவதாகத் தெரிகிறது. இந்தமாதிரி ஒரு பையனின் வயிற்றிலிருந்து ஊதி எடுக்கப் பெற்ற மருந்தை நான் வைத்திருக்கிறேன். அதைத் தீயில் எரித்தால் நன்ருக எரிகிறது. அந்த மருந்து என்ன பொருள்களால் செய்தது என்று தாங்கள் கண்டு பிடித்துச் சொல்ல முடியுமா? இந்தமாதிரி மருந்திடப் பெற்றவர்களுக்குத் தற்கால வைத்திய முறையில் சிகிச்சை செய்து குணப்படுத்த முடியுமா?

வி: நண்பர் எழுப்பியிருக்கும் பிரச்னை மிகவும் ரசமானது. குழந்தைகளை வசமாக்க இனிப்பான பண்டம் கொடுத்தால் போதும். சில முதியோரும் திடமனம் இல்லாதவர்களாக இருந்தால், மருந்திடுபவர்கள் கொடுத்ததைச் சாப்பிட்டு அவர்களுக்கு

வசப்பட்டு நடந்துகொள்வார்கள். இதை ஒருவகை உள்ளக் கோளாருகவே கருதவேண்டும்.

இரண்டுபேரை ஒருவருக்கொருவர் ஆகாமல் செய்துவிட மருந்திட வேண்டியதில்லை. நண்பர் போல் வந்து உபதேசங்களைச் சொல்லியே ஆகாமல் செய்துவிடலாம். நாம் சொல்லும் சொற்களாலேயே ஓர் ஆளின் குணத்தை மாற்றிவிடலாமே! இதற்கும் மருந்து வேண்டாமே.

மருந்திடும்போது நண்பர் எப்போதாவது பக்கத்தில் இருந்து கண்ணுல் பார்த்தாரா என்று நேராகக் கேட்டால், நண்பர் இல்லையென்றுதான் சொல்வார். நேராகப் பார்க்க முடியாது. மருந்தை ஊதி யெடுப்பதும் நம்பிக்கையைப் பொறுத்தது. மருந்திடப் பெற்றதாக நினைக்கும் ஆளுக்குப் பீதி உண்டு. அந்த நிலையில், "இதோ பார், இந்த உருண்டையைத்தான் உன் வயிற்றிலிருந்து ஊதி எடுத்தேன்" என்று சிகிச்சை செய்பவர் சொன்னுல், அவன் நம்பிப் பயம் தெளிந்து குணம் அடைவான். பக்கத்தில் இருந்து பார்ப்பவர்களும் அதை எளிதில் நம்பக்கூடியவர்களாய்த்தான் இருப்பார்கள். இந்தக் கேள்வியைக் கேட்டவரும் அப்படிப்பட்ட ஒருவரே என்பதில் சந்தேகமில்லை.

மருந்திடுவதை நவீன வைத்திய நூல்களில் காண முடியாததால், அதற்குச் சிகிச்சை முறையும் தேட இயலாது.

வேலையை ஏன் விட்டான்?

ஒரு கம்பெனியில் வேலைக்கு மனுப் போட்டான் ஓர் ஆள்.

"என் இன்ஷ்யூரன்ஸ் பணத்தை நீங்களே கட்டுவீர்களா?" என்று மானேஜரை அவன் விசாரித்தான்.

"மாட்டோம். கட்டினுல் உன் சம்பளத்திலிருந்து அதைக் கழித்துவிடுவோம்" என்றுர் மானேஜர்.

"முந்தி நான் வேலை பார்த்த கம்பெனியிலே அவர்களே கட்டினுர்களே" என்றுன் ஆள்.

"அவர்கள் போனஸ் கொடுத்தார்களா?"

"ஆஹா! கொடுத்தார்கள்."

"இரண்டு மூன்று வார லீவு கொடுத்தார்களா?"

"கொடுத்தார்கள்."

"விசேஷ நாட்களில் இனும் கொடுத்தார்களா?"

"கொடுத்தார்கள்."

"பின்னே நீ ஏன் அந்தக் கம்பெனியை விட்டுவிட்டு வந்தாய்?"

"கம்பெனி திவால் ஆகிவிட்டது."

—'டெக்ஸாஸ் அண்டு பஸிஃபிக் டாப்பிக்ஸ்'

விருத்திரன் கதை

பரீட்சித்து மன்னன் சுகமுனிவரைப் பார்த்து, ''பிருகஸ்பதி தம் சிஷ்யர்களாக இருந்த தேவர்களை ஒரு சமயம் கைவிட்டதாகச் சொல்கிறார்களே! அது ஏன் என்று சொல்லியருள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான்.

சுக முனிவர் சொல்லலானார்:

''தேவேந்திரன் ஒரு சமயம் மருத்து, வசுக்கள், ருத்திரர், ஆதித்தியர், ரிபுக்கள், விசுவதேவர், வித்தியாதரர், அப்ஸரஸ்கள் முதலியவர்கள் சூழச் சபையில் இந்திராணியுடன் அமர்ந்திருந்தான். அப்போது தேவகுருவான பிருகஸ்பதி அங்கே வந்தார். கர்வமுற்றிருந்த இந்திரன் எழுந்து அவரை வரவேற்று உபசரிக்கவில்லை. அவர் தனக்கும் பிற தேவர்களுக்கும் குரு என்பதையும் மறந்திருந்தான். இதைப் பார்த்ததும் பிருகஸ்பதி உடனே அங்கிருந்து போய் விட்டார்.

''பிறகுதான் இந்திரன் தன் பிழையை உணர்ந்தான்; தன் அற்பத்தனத்தை நினைந்து வருந்தினான். 'தேவர்களுக்கு மன்னனாக இருந்தும் அசுரத்தன்மை என்னிடம் இருந்ததே' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். பிருகஸ்பதியின் காலில் தலைபட வணங்கி அவரைச் சமாதானப்படுத்த எண்ணினான்; அவருடைய இருப்பிடத்துக்குப் போனான்.

''ஞானதிருஷ்டியால் இந்திரன் வருவதை உணர்ந்த பிருகஸ்பதி யோகசக்தியால் மறைந்துவிட்டார். அதனால் இந்திரன் ஒன்றும் செய்யத் தோன்றாமல் தேவர்களோடு கலந்து ஆலோசித்தான். அப்படியும் வழி புலப்படவில்லை. தான் செய்த பிழையை எண்ணி எண்ணி மனம் புழுங்கினான். அசுரர்கள் இதுதான் சமயம் என்று தேவர்களோடு போரிட்டார்கள். கொடிய பாணங்களினால் கை கால் முறிந்து தேவர்கள் கடைசியில் பிரம்மாவிடம் சென்றார்கள்.

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

"அவர், 'நீங்கள் செய்தது பெருந் தவறு. நீங்கள் பிரம்மஞானியான பிருகஸ்பதியை அவமதித்ததால் தான் அசுரர்கள் சுக்கிராசாரியரை வழிபட்டு உங்களை வென்று விட்டார்கள். குருவைத் தெய்வமாக எண்ணி வழிபடுபவர்களுக்கு ஒரு குறைவும் வராது. போனது போகட்டும். இனி விசுவரூப முனிவரிடம் போய் அவரை வழிபடுங்கள். அவர் செய்யும் காரியங்களுக்குத் தடை சொல்லாமல் இருந்தீர்களானால் அவர் உங்களுக்கு நல்லது செய்வார்' என்றார். இதைக் கேட்டதும் தேவர்கள் கவலை நீங்கி மகிழ்ச்சியுற்றார்கள். பிறகு த்வஷ்டா என்பவரின் குமாரரான விசுவரூப முனிவரிடம் சென்று அவரை வணங்கினார்கள். 'நாங்கள் அதிதிகள் என்ற முறையில் உங்கள் ஆசிரமத்துக்கு வந்திருக்கிறோம். உங்களுக்கு க்ஷேமம் உண்டாக வேண்டும். நாங்கள் உங்களுக்குத் தந்தை போன்றவர்கள். அதோடு அதிதிகள் என்றால் தருமமே உருவாக வந்தவர்கள் என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். வயதில் சிறியவரானாலும் உங்களை எங்கள் புரோகிதராக ஏற்று வணங்கச் சித்தமாக இருக்கிறோம். உங்களுடைய தவ மகிமையினால் நாங்கள் பகைவர்களை வெல்ல வேண்டும்' என்றார்கள்.

"அதற்கு முனிவர், 'நீங்கள் சொல்வதை நான் எப்படி மறுப்பது? இருந்தாலும், தவத்தின் சக்தியைக் குறைக்கும் புரோகிதத் தொழிலை எப்படி ஏற்பது என்றுதான் தயங்குகிறேன். ஆனால் பெரியவர்களான நீங்கள் சொல்லும்போது மறுத்துப் பேச எனக்குத் தணிவில்லை' என்று கூறி இணங்கினார்.

"பிறகு 'விஷ்ணு வித்யை' என்னும் நாராயண கவசத்தின் மகிமையால் சுக்கிராசாரியரை வென்று தேவர்களுக்கு அவர்கள் ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தார். இந்திரனுக்கு நாராயண கவச மந்திரத்தையும் உபதேசித்தார்.

"விசுவரூபருக்கு மூன்று தலைகள் இருந்தன. ஒன்றால் சோமரசமும், மற்றொன்றால் சுரா என்ற

பானமும், இன்னொன்றால் அன்னமும் உட்கொள்வார். தேவருக்குப் புரோகிதராக இருந்தும் அசுரர்களுக்கு ஆதரவு காட்டி வந்தார். 'யாகத்தில் தேவர்களுக்குப் பாகம் கொடுக்க வேண்டும்' என்று வெளியில் சொல்லிக் கொண்டே ரகசியமாக யாக பாகத்தை அசுரர்களுக்குக் கொடுத்துவந்தார். இதைக் கண்டு இந்திரன் கோபமுற்று அவருடைய மூன்று தலைகளையும் வெட்டிவிட்டான். சோமபானம் செய்த அவருடைய முதல் தலை காடை என்ற பறவையாகவும், சுராபானம் செய்த தலை கலவிங்கம் என்ற பறவையாகவும், அன்னம் உட்கொண்ட தலை கரிச்சான் குருவியாகவும் ஆகிவிட்டன.

விசுவரூப முனிவரைக் கொன்ற பாவத்துக்குப் பிராயச்சித்தமாக இந்திரன் ஒரு வருஷம் கடுந்தவம் புரிந்தான். பிறகு அந்தப் பாவத்தை நான்காகப் பிரித்து, நிலம், நீர், மரம் இவைகளுக்கும் பெண்களுக்கும் கொடுத்துவிட்டான். இந்தப் பாவத்தை ஏற்றுக் கொண்டதால் பெண்களுக்கும் நிலம் நீர், மரம் முதலியவற்றுக்கும் ஒரு வரம் கிடைத்தது.

"விசுவரூபரின் தந்தையான த்வஷ்டா, மகனைக் கொன்ற இந்திரன்மேல் கடுங்கோபங் கொண்டார். இந்திரனைத் தோற்கச் செய்யும் ஒரு பகைவனை உண்டு பண்ண வேண்டும் என்று ஒரு ஹோமம் செய்யலானார். உடனே ஹோமத் தீயிலிருந்து பிரளய காலத்தில் கோபமுற்றுக் கிளம்பிய எமனைப்போல் பயங்கரமான ஒருவன் தோன்றினான். எரியும் மலையையும் அந்தி மேகத்தையும் ஒத்திருந்தான் அவன். அவனுடைய கண்கள் உச்சி காலத்துச் சூரியனைப்போல் கடுமையாக ஒளிர்ந்தன. குகைபோன்ற வாயும் அதிலுள்ள கோரப்பற்களும் பார்ப்பவரை நடுங்கி ஓடச் செய்தன. அவன் நாளுக்கு நாள் ஒரு பாணம் செல்லும் அளவு குறுக்கே படர்ந்து வந்தான். சில நாட்களில் உலகத்தையே அவன் சூழ்ந்துகொண்டு விட்டதால் 'விருத்திரன்' அல்லது 'வியாபித்தவன்' என்று அவனை அழைக்கலானார்கள்.

"தேவர்கள் தம் தம் ஆயுதங்களை ஏந்தி வந்து அவனை அடித்தார்கள். சிறந்த அஸ்திரங்களையும் செலுத்திப் பார்த்தார்கள். ஆனால் அவன் அவைகளை யெல்லாம் விழுங்கிவிட்டான். பிறகு தேவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி, பகவான் நாராயணரைப் போற்றினார்கள். அப்போது அவர்களின் முன்னே அவர் தோன்றினார்.

"பிறகு, 'மிகவும் சந்தோஷம். தேவேந்திரா, உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். முனிவர்களில் சிறந்தவரான ததீசியிடம் செல்லுங்கள். கல்வி, தவம், விரதம் இவைகளால் அவர் வலிமை பெற்று விளங்குகிறார். அவருடைய உடலைத் தரும்படி வேண்டுங்கள். அவர் அதைத் தருவார். அதை விசுவகர்மாவிடம் கொடுத்து ஓர் ஆயுதம் செய்யச் சொல்லுங்கள். அதில் என் தேஜஸையும் சேர்க்கிறேன். அதனால் விருத்திரனுடைய தலையை நீங்கள் வெட்டுங்கள். அப்போது அவன் விழுங்கிய ஆயுதமெல்லாம்

கிடைத்துவிடும்' என்று சொல்லி விட்டு மறைந்தார்.

''அப்படியே தேவர்கள் ததீசி முனிவரிடம் போய் அவருடைய உடலைத் தரும்படி கேட்டார்கள். அதற்கு அவர், 'யாருக்குத்தான் தன் உடலைக் கொடுக்க மனம் வரும்? பகவான் நாராயணரே வந்து கேட்டாலும் இதை நான் கொடுக்க மாட்டேன்' என்றார்.

''தேவர்கள், 'முனிவரே, மக்களிடம் அன்புள்ளவர் எதைத்தான் கொடுக்க மாட்டார்கள்? அதிலும், உங்களைப் போன்ற பெரியோர்களைப்பற்றிக் கேட்பானேன்!' என்று அவரைப் புகழ்ந்தார்கள்.

''முனிவர், 'நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்கத்தான் முதலில் அப்படிச் சொன்னேன். அழியும் இந்த உடலை அழிவற்ற தர்மச் செயலுக்காகக் கொடுக்க யார் மறுப்பார்?' என்று சொல்லிக்கொண்டே பகவானைத் தியானித்தபடி உடலை விட்டார்.

''பிறகு தேவர்கள் விசுவகர்மாவைக் கொண்டு முனிவரின் எலும்பினால் வஜ்ராயுதத்தைச் செய்தார்கள். இந்திரன் அந்த ஆயுதத்தை ஏந்தி யானையின்மேல் ஏறித் தேவர் படையுடன் விருத்திரனோடு போர் புரியக் கிளம்பினான்.

''நர்மதைக் கரையில் தேவர்களுக்கும் விருத்திரன் முதலிய அசுரர்களுக்கும் கொடிய போர் நிகழ்ந்தது. இரு படைகளும் விட்ட பாணங்கள் ஆகாயத்தை மறைத்தன. மரம், மலை, கல் இவைகளையும், சிறந்த பல அஸ்திரங்களையும் தேவர்களின் மேல் அசுரர்கள் ஏவினார்கள். ஆனால் விஷ்ணு சக்தி காத்ததால் தேவர்களை அவை ஒன்றுமே செய்ய முடியவில்லை. வேறு வழி இல்லாமல் அசுரர்கள் ஓடலானார்கள். அப்போது விருத்திரன் அவர்களைத் தடுத்து, 'பிறந்தவர் சாவது என்பது நிச்சயம். போரில் இறப்பது புகழைக் கொடுக்கும்; நம்மைப் பெரியவர்கள் வீரர்கள் என்று கொண்டாடுவார்கள். ஆகவே, திரும்புங்கள்' என்றான்.

''ஆனால் அசுரர்கள் இதைக் காதில் போட்டுக்கொண்டால் தானே? இதனால் விருத்திரன் தனியாகவே நின்று, 'தேவர்களே, போரில் உங்களுக்கு உண்மையிலேயே உற்சாகமும் மனத்தில் வீரமும் இருந்தால் என்னிடம் அவைகளைக் காட்டுங்கள், பார்க்கலாம். பயந்து ஓடுகிறவர்களைத் துரத்தாதீர்கள்' என்று கர்ஜித்தான். அதைக் கேட்டதும் தேவர்களில் சிலர் நடுநடுங்கித் தரையில் விழுந்தார்கள். விருத்திரன் அவர்களைக் காலால் மிதித்தான். அப்போது இந்திரன் கோபமுற்று அவன்மீது கதையை எறிந்தான். உடனே விருத்திரன் தன் கதையை இந்திரனை நோக்கி எறிந்தான். அது ஐராவதத்தின்மேல் பட்டது; அந்த யானை ரத்தம் கக்கிச் சற்றுப் பின் வாங்கியது. இந்திரன் அமிர்தம் உள்ள தன் கையினால் அதைத் தடவிக் கொடுத்தான். உடனே அது பழைய நிலைக்கு வந்தது. இந்திரன் மறுபடியும் விருத்திரன் மேல் கதையை எறிந்துவிட்டு அசையாமல் நின்றான்.

'''குருவைக் கொன்ற மகா பாவியே, இதோ இந்தச் சூலத்தால் உன்னைக் கொன்று தீர்த்து விடுகிறேன். இல்லாவிட்டால் நானாவது வஜ்ராயுதத்துக்கு இரையாகி வீர சொர்க்கம் போகிறேன்.

விஷ்ணுவின் அருள் உனக்கு இருப்பதால் வெற்றி உனக்குத்தான் கிடைக்கும்; பின் ஏன் வஜ்ராயுதத்தை என்மேல் எறியத் தயங்குகிறாய்? இது என்மேல் பட்டால் நான் பாவம் நீங்கி அவருடைய பாதாரவிந்தங்களை அடைவேன். கதையைப் போல் வஜ்ராயுதம் வீண் போகும் என்று எண்ணுகிறாயா, என்ன? நான் தோற்றால் பகவான் எனக்கு அருள் புரிந்தார் என்பது தெளிவாகும்' என்றான். இப்படிப் பக்தி மேலிட அவன் சொல்லும்போது பகவான் அவன் எதிரே தோன்றினார். விருத்திரன் மெய்மறந்து அவரைப் போற்றினான். 'நான் மது மாயையினால் கட்டுண்டு கிடக்கக் கூடாது. நல்லவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும்' என்று வேண்டினான். 'வெற்றியைவிடச் சாவு மேல்' என்று தீர்மானித்துச் சூலத்தைக் கையில் ஏந்தி இந்திரனை எதிர்த்து ஓடினான்.

"இந்திரன் உடனே விருத்திரனின் ஒரு கையை வெட்டினான். விருத்திரன் இந்திரனுடைய தாடையிலும் ஐராவதத்தின் மேலும் அடித்தான். இந்திரனுடைய கையில் இருந்த வஜ்ராயுதம் கீழே விழுந்தது. அதைக் கண்டு எல்லாரும் 'ஹா ஹா' என்று கத்தினார்கள். இந்திரன் வெட்கமுற்றுத் திகைத்துப் பேசாமல் நின்றான்.

"விருத்திரன் இந்திரனை நோக்கி, 'இந்திரா, ஏன் வெட்கப்படுகிறாய்? வஜ்ராயுதத்தை எடுத்துக் கொள். என்னை எதிர்த்துச் சண்டை செய். போரில் வெற்றி என்பது உண்மையில் எல்லாவற்றுக்கும் காரணமான பகவானுடைய செயலே. ஆகவே, நீ வருத்தமோ மகிழ்ச்சியோ அடைவதில் பயனில்லை. மரப்பாவை போலவும், யந்திரத்தால் இயங்கும் மான் போலவும் ஜீவன் சுயசக்தி அற்றவன். ஆகவே, பயனைக் கருதாமல் செயலைப் புரி. என்னைப் பார். ஆயுதம் இழந்தும் கை அறுந்தும் அதையெல்லாம் கவனியாமல் உன்னோடு போர் செய்யவில்லையா? போர் என்பது உயிரைப் பணயமாக வைத்து ஆடும் சூதாட்டம். இதில் பின் வாங்காதே!' என்றான்.

"இந்திரன், 'அசுர ராஜனே, நீ சித்தனாகிவிட்டாய். பகவானிடத்தில் உனக்கு மிகுந்த பக்தி உண்டாகிவிட்டது. பக்தி உடையவன் உண்மையில் அமிர்தக் கடலில் ஆழ்ந்து கிடக்கிறான் என்றே சொல்ல வேண்டும். இந்த அற்பமான காரியங்களில் அப்பேர்ப்பட்டவன் ஏன் ஈடுபட வேண்டும்? அதனால் என்ன பயன்?' என்றான்.

"பிறகு விருத்திரன் பரிகம் என்ற ஆயுதத்தை ஒரு கையால் எடுத்துக்கொண்டு இந்திரனை நோக்கி ஓடிவந்தான். இந்திரன் அந்தக் கையையும் வெட்டினான். விருத்திரன் அப்போதும் சளைக்காமல் வாயைப் பிளந்துகொண்டு இந்திரனை விழுங்கினான். இந்திரன் யோகசக்தியால் அவனுடைய வயிற்றைப் பிளந்துகொண்டு வெளியே வந்து வஜ்ராயுதத்தால் அவன் கழுத்தை வெட்டினான். அப்போது ஆகாயத்தில் துந்துபி முழங்கியது. முனிவர்களும் சித்தர்களும் இந்திரனைப் புகழ்ந்தார்கள். விருத்திரனின் உடலிலிருந்து ஆவி கிளம்பிப் பகவானிடம் போய்ச் சேர்ந்தது.

"விருத்திரனைக் கொன்ற பாவத்தைப் போக்க இந்திரன் அசுவமேத யாகம் செய்தான்."



வேர்வை விடும் மணி

யோஷியாட்ஸு ஸுஸுகி

நம் நாட்டிலே உள்ள சில கோயில்களையும் அங்குள்ள ஆச்சரியப் பொருள்களையும்பற்றி வழங்கி வருபவை போலவே பிற நாடுகளிலும் கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. அப்படியே ஜப்பானில் உள்ள இந்த மணியைப்பற்றிய விவரம் அதிசயமாக இருக்கிறது.

ஸானுகி மாகாணத்தில் ஹாவோகா-முரா என்ற இடத்தில் கோகுபுஞ்ச் என்ற கோயில் இருக்கிறது. அதில் ஒரு பெரிய மணி இருக்கிறது. அது தலைமுறை தலைமுறையாக இருந்து வருகிறது. பக்கத்தில் உள்ள கடலிலிருந்து ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு அது அகப்பட்டதாம். அதைக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

மணியைச் செய்திருக்கும் உலோகம் எது என்று தெரியவில்லை. அதிலிருந்து எழும் ஒலி அபூர்வ இனிமை வாய்ந்திருக்கிறது.

அந்த மணி அகப்பட்டபின், சிறிது காலம் வரைக்கும் அதைச் சுற்றிலும் கிளிஞ்சில்கள் உறை போல மூடியிருந்தன. பின்னால் கொஞ்சங் கொஞ்சமாக அந்தக் கிளிஞ்சில்களெல்லாம் போய்விட்டன. தீராத நோய்களையெல்லாம் அந்தக் கிளிஞ்சில்கள் குணப்படுத்தினவாம். இதனால்தான் அவைகளைப் பெயர்த்து எடுத்துக் கொண்டுபோய்விட்டார்கள்.

அந்த மணியில் ஓர் அதிசயம் இருக்கிறது. ஜப்பானில் கடுங் கோடைக்காலம் வருஷத்திலே ஜூலை, ஆகஸ்டு இந்த இரண்டு மாதங்களுந்தான். இந்தக் காலத்திலே, அந்த மணியிலிருந்து சொட்டுச் சொட்டாகத் தண்ணீர் உதிர்கிறது. இதைக் கண்டு அக்கம பக்கத்தில் உள்ள ஜனங்கள்

மூலம்: 'ஜப்பானீஸ் லெஜெண்ட்ஸ் அண்ட் ஃபோக்-டேல்ஸ்' (ஆங்கிலப் புத்தகம்). பிரசுரித்தவர்: ஸகுராய் ஷோட்டென், டோக்கியோ.

இதற்கு 'வேர்வை விடும் மணி' என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

கைச்சோ சகாப்தத்தில் (அதாவது 1596-1614-இல்) கஸூமாயா இகோமா என்ற பிரபு இந்த மணியின் அற்புத நாதத்தைக் கேட்டு ஆச்சரியமுற்றார். டகாமாட்ஸூ என்ற இடத்தில் உள்ள தம் அரண்மனைக்கு இதை எடுத்துக்கொண்டு வரச் சொன்னார். ஐம்பது ஆட்கள் இரவு பகலாக மூன்று நாள் உழைத்து, மணியை அங்கே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஆனால், அங்கே போனதும் மணியின் ஓசை விசித்திரமாய் - ஒரே அழுகுரலாய் - மாறிவிட்டது.

அதோடு போனால் பரவாயில்லையே; அந்த வருஷம் கொள்ளை நோய் வேறு நகரத்தில் தோன்றிப் பல பேரைக் கொன்றுவிட்டது. ஜோஸ்யனை அழைத்துக் கேட்டார்கள். "மணியின் கோபந்தான் இதற்குக் காரணம். அதைத் திரும்பவும் பழைய கோயிலிலேயே கொண்டுபோய் வைத்துவிடுங்கள்" என்று அவன் சொன்னான்.

பிரபு அப்படியே மணியைத் திரும்பவும் கோகுபுஞ்ச் கோயிலிலே கொண்டு போய் வைத்தார். மணிக்கு மந்திர பூர்வமாகப் பூஜையெல்லாம் நடந்தது. உடனே மணியின் பழைய இனிய நாதம் திரும்பியது. நகரத்தில் கொள்ளை நோயும் ஒழிந்தது.

மணியை மீண்டும் கோயிலுக்கு எடுத்துச் சென்றபோது, வழியெல்லாம் தலைக்கு மேலே ஐந்து வர்ண மேகம் ஒன்று நிழலிட்டு மிதந்துவந்ததாம். அந்த மேகத்தின்மீது கருணை அம்மனான கன்னான் என்ற தேவதை சவாரி செய்தகொண்டு வந்தாளாம். அம்மன் இப்படி உதவியதால், எட்டே ஆட்கள் அரைநாளே உழைத்து, மணியை வெகு சுலபமாய்க் கோயிலில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட முடிந்ததாம்.

கண்டிப்பான எஜமான்

புதிதாய் வேலைக்கு வந்து சேர்ந்த ஓர் ஆளிடம் தம் சுபாவத்தை விளக்கினார் எஜமான்: "இதோ பார்: நான் ரொம்பக் கண்டிப்பானவன். அதிகமாய் வார்த்தை வைத்துக்கொள்ள மாட்டேன். உன்னை எப்போது அழைக்க வேண்டுமானாலும், சிட்டியடிப்பேன்; நீ ஓடி வரவேண்டும். வந்ததும் நானே காரியத்தைச் சொல்லுவேன். நான் சிட்டியடித்ததும், தூர இருந்தபடியே 'என்ன வேண்டும், எஜமான்?' என்று நீ கூச்சல் போடக் கூடாது. ஓடித்தான் வரவேண்டும். என்ன, தெரிந்ததா?"

ஆள் சொன்னான்: "என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா, எஜமான்! நானும் அதிகமாய் வார்த்தை வைத்துக்கொள்ளாதவன்தான். ஆகவே, நீங்கள் சிட்டி அடிக்கும்போது, நான் தலையை இப்படி அசைப்பேன். இதற்கு, 'நான் வர முடியாது' என்று அர்த்தம். என்ன, தெரிந்ததா?"

—'மகஸீன் டைஜெஸ்ட்'

பௌத்த யுகத்தின் பெருமைக்குச் சான்று
பகரும் கலைச் செல்வத்தைக் கொண்டது-

பல மதம் கண்ட கோயில்

மண்ட நரசிம்மம்

ஸ்ரீகாகுளத்துக்குப் பத்து மைல் தூரத்தில் ஸாலிஹுண்டம் என்னும் கிராமம் இருக்கிறது. கிராமத்தையொட்டி இரண்டு சிகரங்கள் உள்ள ஒரு மலை இருக்கிறது. அதைச் சுற்றி வமிசதாரை என்னும் நதி ஓடி நாலு மைல் தூரத்தில் சமுத்திரத்தோடு கலக்கிறது. அருகில் கலிங்கப் பட்டணம் இருக்கிறது. ஸாலிஹுண்டத்துக்கு நாலு மைல் தூரத்தில் கடலோரத்தில் ஆதி காலத்திலிருந்து பிரசித்தி பெற்ற ஸ்ரீகூர்மக் கிராமமும் கூர்மநாதஸ்வாமி கோயிலும் உள்ளன.

கோயில் மிகப் பழமையானது. பிராகாரச் சுவர்களில் ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முந்திய சிலா சாசனங்கள் இருப்பதால் அதற்கு முன்பே கோயில் தோன்றியிருக்க வேண்டும். பிராகாரத்தில் கிட்டத்தட்ட நூறு கல் தூண்கள், ஒன்றை மிஞ்சி ஒன்று, அழகிய சிற்பங்களைத் தாங்கி நிற்கின்றன. சுவர்களில் கூடக் கிடைத்த இடங்களிலெல்லாம் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ், கன்னடம், உத்கலம் ஆகிய பாஷைகளில் சாசனங்களைக் காணலாம். இவை 300-க்கு மேல் இருக்கின்றன. இந்தியா முழுவதிலும் ஆண்ட பல அரசர்கள் முதல் சாமானிய மக்கள் ஈறாகக் கொடுத்த தானங்கள் முதலியவற்றைத் தெரிவிக்கும் சாசனங்கள் இருக்கின்றன. அத்வைத, த்வைத, விசிஷ்டாத்வைத மதத்தினரின் சாசனங்களைத் தவிர, பௌத்த, ஜைன, சாக்த மதத்தினருடைய சாசனங்களும் இருக்கின்றன.

கோயில் பெரிய கோபுரம் வட்டமாக எழுப்பப் பெற்று, பௌத்தர்களின் விஹாரங்களைப் போல் அமைந்திருக்கிறது. கர்ப்பக் கிருகத்தின்மேல் ஸ்தூபம் ஒன்று அமைந்து சிகரத்தின்மேல் வைஷ்ணவச் சின்னமாகிய சக்கரத்தை அடையாளமாகக் கொண்டிருக்கிறது. முதல் முதலில் இது ஒரு பௌத்த ஸ்தூபமாக இருந்ததாம். பின்பு சக்தி ஆலயமாயிற்றாம். அப்புறம் சிவாலயமாகி, இப்பொழுது விஷ்ணு கோயிலாக மாறியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

1918-இல் மத்திய அரசாங்க அநுமதிபெற்றுச் சாசன ஆராய்ச்சியாளர் பரீட்சித்துப் பிரதி எடுத்தார்கள். அதன் மூலம் தெரிந்த விஷயங்கள்: அந்தக் காலத்து அரசர்கள் புத்த தேவருக்குச் சொர்ணமும் ரத்தினங்களும், கூர்மநாதருடைய நித்திய கைங்கரியங்களுக்காகப் பொன்னும் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதனால் பக்கத்திலே புத்தர் கோயிலும் இருந்திருக்கிறதென்று தெரிகிறது. வேறு சில சாசனங்களில் கூர்மத்தக்கு அருகில் உள்ள ஸாலிஹுண்டத்தில் மலைமேல் இருக்

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

கும் புத்த தேவருக்கென்றும், பௌத்தவிஹாரப் புனர் நிர்மாணத்துக்கென்றும் பணம் கொடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறது.

பின்பு ஆராய்ச்சியினால் மலைமேல் ஒரு பகுதியில் புத்தம் புதிய விஷ்ணு கோயில் ஒன்றும், மற்றொரு பகுதியில் பௌத்த ஸ்தூபங்களும் விஹாரங்களும் அகப்பட்டன. ஒரு விஹாரத்தைத் திறந்தால் அதில் புத்தர் நினைவுச் சின்னங்களும் ரத்தினங்களும் பொன் நகைகளும் அகப்பட்டன. மலைச் சிகரங்களில் உள்ள சிதிலங்கள் தவிர, ஸாலிஹுண்டம் கிராமத்தில் எங்கே பார்த்தாலும் கொடிகளும் தோரணங்களும் செதுக்கப் பெற்ற பல கற்களைக் காணலாம். பழைய சிற்பிகளின் திறமையைப் பறை சாற்றும் சில உடைந்த விக்கிரகங்கள், புத்தர், விநாயகர், சக்தி முதலியோரின் உருவங்கள் இவை கணக்கற்று இருக்கின்றன. இவற்றில் முக்கியமானவை:

தாரை விக்கிரகம்: கலிங்க ராஜதானிக்கு முக்கியத் துறைமுகம் கலிங்கபட்டணம். அந்தக் காலத்தில் மகாசமுத்திரத்திலிருந்து வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கும் கப்பல்கள் வமிசதாரா நதித் துறைமுகத்தின் மூலமாக ராஜ்யத்துக்குள் புக வேண்டும். மாலுமிகள் எந்த விதமான ஆபத்தும் தங்களுக்கு நேராதிருப்பதற்காகத் தாராதேவியை ஆராதித்து வந்தார்கள். சமுத்திரத்தைப் பயமின்றிக் கடப்பதற்குப் பௌத்தர்கள் தொழுது வந்த தெய்வம் தாராதேவி. இவள் உருவம் பன்னிரண்டடி உயரம் கொண்டதாய் மிகக் கவர்ச்சியுடன் அமைந்திருக்கிறது. இவளுக்கு மூன்று முகங்கள் உண்டு. நடுவே இருப்பது மகாலட்சுமியின் முகம். வலப்புறம் சரஸ்வதி முகம். இடப்புறம் பார்வதி முகம். ராஜசம்பரவிச் சிரித்தபடி காணும் லட்சுமி தேவியின் முகம் பார்க்க மகிழ்ச்சி தரும். வலப் புறத்து முகத்தைச் சாந்தத்துக்கும் கம்பீரத்துக்கும் உதாரணமாய்க் கூறலாம். இடப்புறத்து முகம் பயங்கரமாயும் கருமையாயும் இருக்கிறது. இந்தத் தேவிக்கு ஆறு கைகள் இருக்கின்றன; பொக்கிஷ பாத்திரம், புஸ்தகம், பாசம், சக்கரம், சங்கு, சூலம் ஆகிய பொருள்களைக் கைகளில் ஏந்தியிருக்கிறாள்; இவளை ஒரு ரதத்தின்மேல் ஏறிப்பிரயாணம் செய்வது போல் சித்திரித்திருக்கிறது; ரதத்துக்கு ஏழு குதிரைகள் தத்ரூபமாகப் பூட்டப் பெற்றிருக்கின்றன. ரதத்தைச் செலுத்துபவள் ஒரு பெண். ஏழு குதிரைகளின் கடிவாளங்களையும் சேர்த்து ஒரு கையிலும், சாட்டையை ஒரு கையிலும் அவள் பிடித்திருக்கிறாள். இந்த விக்கிரகம் பின்னம் அடைந்து சீர்திருத்தம் பெற்றிருக்கிறது.

விநாயகர்: இந்துக்களைப் போலவே பௌத்தர்களும் கணபதியைத் தொழுவார்கள். இங்கே விநாயக விக்கிரகங்கள் பல இருக்கின்றன. சில நாலு கைகளையும், சில ஆறு கைகளையும், சில எட்டுக் கைகளையும் கொண்டவை. கருங்கல்லில் சிற்பத் திறன் வெளிப்பட இவை அமைந்திருக்கின்றன.

சக்தி விக்கிரகங்கள்: ஆகம சாஸ்திரங்களுக்குப் பௌத்த மதமே பிறப்பிடமாகும். இங்கே ஸப்த மாதாக்களைத் தவிர, துர்க்கையின் விக்கிரகங்கள் பல இருக்கின்றன. கைகளின் கணக்குப்படி

பார்த்தால் விநாயகரை விட அதிகக் கைகள் கொண்ட விக்கிரகங்கள் பல உள்ளன.

புத்த ஜாதகக் கதைகள்: புத்த ஜாதகக் கதைகளைச் சிறந்த கல்லில் சிலைகளாக அழகிய முறையில் அமைத்திருக்கிறார்கள்.

நவக்கிரகங்கள்: பல கை போன்ற ஒரே கல்லில் வாகனங்களுடனும் ஆயுதங்களுடனும் நவக்கிரகங்களைச் செதுக்கியிருக்கிறார்கள்.

கல் சங்கிலித் தோடர்: இந்தச் சங்கிலித் தொடர் 80 அடி நீளம் உள்ளது. புத்தர் ஸ்தூபத்துக்கு இதைக் கண்ட-ஹாரமாக அமைத்துச் செதுக்கியிருக்கிறார்கள்; இது தொட்டில் சங்கிலிகள் கோத்தது போல் வட்டமான ஒரு பெருங்கல்லில் குடைந்து செதுக்கியது. இவ்வளவு நீளம் உள்ள சங்கிலி எந்த இடத்திலும் விடுபடாமல் அட்டிகைபோல் பொருத்தப் பெற்றிருப்பது பெரிய அதிசயம். சிற்பியின் திறமைக்குப் பேரெல்லையாக இது அமைந்திருக்கிறது. செதுக்கும்போது அஜாக்கிரதையாக இருந்தால் உளி பட்டு வளையம் சிதறிவிடும் அல்லவா? கல்லை ஒட்டவும் முடியாதே.

மலையுச்சியிலும் ஸ்தூபங்கள், விஹாரங்கள், சங்காராமங்கள் முதலியவை இருக்கின்றன. முக்கிய ஸ்தூபம் புத்தருடைய பூரண உருவம் என்பதாகப் பாவனை. அதில் தலைப்பகுதி முக்கியமானது. மலை யுச்சியிலிருந்து 25 அடி கீழ்மட்டத்தில் இதைத்தொடங்கியிருக்கிறார்கள். அடிப் பாகம் தாமரைபோலக் கல்லினால் நிருமாணிக்கப் பெற்றது. அதன் நடுவே புத்த ஞாபகச் சின்னப் பெட்டியை வைத்து ஸ்தூபம் கட்டியிருக்கிறார்கள். அடிப்பாகத்தின் சுற்றளவு 50 அடி. ஒரு முழநீளம், அதே அகலம், ஒரு சாண் உயரம் கொண்ட சுட்ட செங்கற்களால் சுவர் எழுப்பியிருக்கிறார்கள். ஸ்தூபத்துக்குச் சலவைக் கற்களை உபயோகித்து, அதை வலம் வர வட்டப்பாதையும் விட்டிருக்கிறார்கள். உள்ளே நுழைய அகன்ற வழி இருக்கிறது. ஸ்தூபத்தின் கழுத்துக்குக் கல் சங்கிலி மாலையாக அமைந்திருக்கிறது. இதைச் சிரஸ்தூபம் என்பார்கள்.

இதற்குச் சற்றுப் பின்புறமாக இரு ஸ்தூபங்கள் இருக்கின்றன. இவைகளைச் சுற்றி விஹாரங்களும் அவற்றில் நுழைந்து ஸ்தூபங்களை வலம் வரும் வழியும் உள்ளன. இந்த இரண்டும் புத்தருடைய மார்புப் பகுதி என்று பாவனை. இந்த ஸ்தூபங்களின் மேலும் கல்குடைகள் இருக்கின்றன. கல்பெட்டிகளில் நினைவுச் சின்னங்களும் வைக்கப் பெற்றிருக்கின்றன.

பாதங்களாக இரண்டு ஸ்தூபங்கள் இருக்கின்றன. இந்த இரண்டும் மலையின் இரண்டாவது சிகரத்தில் இருக்கின்றன. இங்கேயும் நடுவே உள்ள விஹாரங்களுக்கிடையில் சற்றுச் சிறிய ஸ்தூபங்களும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. குடைகளும் இருக்கின்றன.

நினைவுச் சின்னங்களைக் கொண்ட கல் பெட்டிகள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய யந்திரக் கல்லைப் போல் இருக்கும். உள்ளே புத்தருடைய அஸ்தியோ, சின்னமோ இருப்பதோடு நவரத்தினங்களும் இருக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பொன் பூக்கள், மாலைகள் ஏதாவது வைத்திருக்கும். இந்தப் பெட்டிகள் சந்திரகாந்தக்

கற்களைக் கொண்டு சேர்த்த பல கைகளால் இழைத்தவை. ஸ்தூபம்போலவே செய்திருப்பார்கள். இவற்றில் சில லண்டன் நகர மியூசியத்திலும், சில சென்னை மியூசியத்திலும் இருக்கின்றன. இந்தச் சிதிலங்களைப் பார்க்கும்போது, நாம் 20-ஆம் நூற்றுண்டில் வாழ்வதையே மறந்து கி. மு. இரண்டாம் நூற்றுண்டுக்குப் போய்விடுவோம். இவைகளே இப்படி மனங் கவரும் முறையில் இருந்தால் இந்த ஸ்தூபங்களும் சங்காராமங்களும் விஹாரங்களும் உச்சநிலையில் இருந்த காலத்தல் எப்படி இருந்திருக்கும்?

இப்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் இவற்றைப் பாதுகாக்கிறுர். மலையுச்சிக்குப் போக ஒரு வழி அமைத்திருக்கிறுர்கள்; கார்களுங்கூடப் போகலாம். மேலே ஏறிப் பார்த்தால், அருகிலிருந்து பாயும் வம்சதாரா நதியும், கடலும், இறக்கத்தில் பல கிராமங்களின் தோற்றமும் வெகு ரம்மியமான காட்சிகள். பௌத்த யுகத்தின் பெருமையையும் நாகரிகத்தையும் மதாபிமானத்தையும் காண விரும்பும் ஒவ்வோர் இந்தியரும் தம் வாழ்க்கையில் ஒரு முறையாவது கண்டு களிக்க வேண்டிய இடம் இது.

விசித்திரமான புக்கீ

குதிரை ரேஸ் நடக்கும் இடத்தில் புக்கீ தொழில் நடத்திய ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவனை வாஷிங்டன் நகரத்துப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பினுர்கள். அங்கேயும் அவன் நிம்மதியாகத் தன் புக்கீ தொழிலை நடத்த ஆரம்பித்துவிட்டான். ஆனுல், அங்கே உள்ள மற்றப் பைத்தியங்களிடந்தான் பணம் கிடையாதே; அவர்கள் சிறு சிறு கற்களைப் பந்தயமாக வைத்தார்கள். புக்கீயும் அவைகளை ஆட்சேபமில்லாமல் வாங்கிக்கொண்டான்.

பைத்தியங்களுக்கு நல்ல பொழுது போக்கு ஒன்று கிடைத்துவிட்டதென்று டாக்டர்கள் சந்தோஷப்பட்டார்கள். புக்கீயும் மிக்க திருப்தியுடனே தன் வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தான். இப்படியே பல நாள் சென்றன.

கடைசியில் ஒரு நாள் ஆஸ்பத்திரியின் ஒரு பக்கம் கிடந்த பெரிய பாருங்கல் ஒன்றை வெகு கஷ்டப்பட்டு ஒரு பைத்தியக்காரன் புரட்டித் தள்ளிக்கொண்டு புக்கீ இடம் வந்து சேர்ந்தான். "இந்தா; ஸாண்டா அனிடாவில் நடக்கும் அறுவது ரேஸில் ஓடும் 'லிட்டில் எல்ஸீ' மீது இதைக் கட்டுகிறேன்" என்று புக்கீயிடம் சொல்லி, அந்தக் கல்லைக் காட்டினுன்.

புக்கீ அந்தக் கல்லை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான். பிறகு தலையை ஆட்டி, "ஊஹூம்: இதை நான் வாங்க மாட்டேன். உனக்கு ஏதோ உள் ரகஸ்யம் தெரிந்திருக்கிறது" என்று கண்டிப்பாய்ச் சொல்லி நிராகரித்து விட்டான்.

—ஜார்ஜ் இ. ஆலன், 'காரொனெட்.'



ஆதிகாலத்து ஸ்மிருதிக்கும் இன்றைய சட்டத்துக்கும் அடிப்படையிலே மாறுதல் உண்டு.

நீதியும் பஞ்சாயத்தும்

ஜஸ்டிஸ் ஜி. டி. கோஸ்லா

'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்றார் பழைய ஸ்மிருதிகர்த்தா ஒருவர். அதாவது, குற்றத்துக்கேற்ற தண்டனை விதிக்கவேண்டும் என்பது அவர் கருத்து. ராஜ்யத்துக்கோ சமுதாயத்துக்கோ விரோதமான குற்றங்கள் ஒரு வகையானவை என்றும், தனி மனிதனுக்கு விரோதமான குற்றங்கள் வேறு வகையானவை என்றும் அந்தக் காலத்தினர் வித்தியாசம் பாராட்டவில்லை. உங்கள் குதிரையைத் திருடினவனோ, உங்கள் வீட்டு ஜனங்களில் ஒருவரைக் கொன்றவனோ, இன்று நாம் நினைக்கிற அர்த்தத்தில் குற்றவாளி என்று அவர்கள் எண்ணவில்லை. நீங்களே அவனுக்குப் பதிலுக்குப் பதிலாக ஏதாவது செய்து கணக்கை நேர் செய்து கொண்டால் சரிதான். யாரும் அதைப்பற்றி வருத்தப்படவும் மாட்டார்கள்; புகார் செய்யவும் மாட்டார்கள்.

இந்த நிலைமை மெல்ல மெல்ல மாறியது; சமுதாயத்தைப் பாதுகாக்கவும் தனி மனிதர்களின் உரிமைகளை அமல் செய்யவும் நீதி (ஜஸ்டிஸ்) என்பது ஒரு சாதனம் என்ற கருத்து உதயமாயிற்று. குற்றம் (க்ரைம்) என்பது வேறே, பொருள் உரிமை (ஸிவில் ரைட்) என்பது வேறே என்ற வித்தியாசம் தோன்றியது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் பணத்தைத் திருடுவது ஒரு விஷயம்; அவனிடம் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க மறுப்பது வேறு விஷயம். தன் எஜமானனை ஒருவன் ஏமாற்றி மோசம் செய்தால், அது தண்டிக்கத் தக்க குற்றம். ஆனால், அவன் அவரிடம் வேலை செய்ய மறுத்தால், அது ஒப்பந்தத்தை மீறியதேயாகும்; வேறு எவ்விதக் குற்றமும் இல்லை. அதற்குரிய நஷ்ட ஈட்டை (டாமேஜஸ்) அவன் செலுத்தவேண்டும்; அவ்வளவுதான். பொருள் உரிமை (ஸிவில்) சம்பந்தமான பிழைகள் பற்றி ஒருவர் வழக்காடாமலே விடலாம்; இரு தரப்பாரும் தங்களுக்குள்ளேயே ராஜி பேசியும் தீர்த்துக்கொள்ளலாம். ஒருவன் குற்றம் (க்ரைம்) புரிந்து இழைத்த தீங்கோ, இப்படித் தனிப்பட்டவர் விஷயமல்ல. ராஜாங்கமே நடவடிக்கை எடுத்து, குற்றவாளியைத் தண்டிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட குற்றவாளி, "நான் யாருக்குத் தீங்கிழைத்தேனோ, அவரைத் திருப்தி செய்துவிட்டேன். என்னை நிம்மதியாக வீட்டுக்கு அனுப்புங்கள்" என்று சொல்ல முடியாது. இவன் ராஜாங்கத்துக்கு ஜவாப் சொல்லி

மூலம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ் (ஆங்கிலம்: 26-1-'54), புது டில்லி.

யாகவேண்டும். ஏனென்றால், அது இவனைப் பார்த்து, "நீ செய்த காரியம் உனக்கும் நீ தீங்கிழைத்த மனிதனுக்கும் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல; சமூகத்துக்கே நீ அபாயமாயிருக்கிறாய். இதே குற்றத்தை மறுபடியும் மறுபடியும் நீ புரியக்கூடும். உன்னைக் கண்டு எல்லாருமே தாங்கள் பத்திரமாயில்லை என்று அஞ்சுவார்கள். இந்த மாதிரி குற்றத்தை நீ மறுபடியும் புரியாமல் உன்னைத் தடுத்தாகவேண்டும். ஆகவே, நீ அபராதம் செலுத்தவேண்டும்; சிறைக்குப் போகவேண்டும்; தூக்கு மேடை ஏறவேண்டும். அப்போதுதான், மறுபடியும் இந்த மாதிரி நடக்கமாட்டாய். பிறருக்கும் இது ஒரு படிப்பினையாயிருக்கும். தவிர, உனக்கு அளிக்கும் இந்தத் தண்டனையைக் கண்டு, உன்னால் தீங்குற்ற மனிதனும் திருப்தி அடைவான்; பழிக்குப் பழி வாங்கிய திருப்தி அவனுக்கு ஏற்படும்" என்று சொல்கிறது.

ஆனால் அமைதியையும் பத்திரத்தையும் காப்பாற்றும் இந்தக் கவலையில், ஸ்மிருதிகர்த்தாக்கள் மிதமிஞ்சிப் போய்விட்டார்கள். இன்றைய அளவுகோல்களைக் கொண்டு பார்க்கும்போது, மிகவும் கடுமையானவை, குரூரமானவை என்று தோன்றக்கூடிய தண்டனைகளையெல்லாம் அவர்கள் விதித்தார்கள். கொலைக் குற்றங்கள் ஏராளமாய் மலிந்திருந்தன. சில குற்றங்களுக்காகக் குற்றவாளியின் கைகாலை வெட்டினார்கள். அவனைக் குரூபம் செய்தார்கள்; சித்திரவதை புரிந்தார்கள். குற்றவாளியை ஆயுள் முழுவதும் சிறையில் போடுவது அற்ப தண்டனையே என்று மதித்தார்கள்.

காலக்கிரமத்தில், சட்டகர்த்தாக்கள் குற்றவாளியிடம் கருணை காட்டத் தொடங்கினார்கள்; லேசான தண்டனைகளை விதித்தார்கள். ஜட்ஜிகள் ஆத்திரம் காட்டாமல், கருணையோடு நீதி வழங்கினார்கள். ஆயினும், குற்றவாளிக்குத் தண்டனை அளிப்பதன் அடிப்படையான நோக்கங்கள்மட்டும் மாறவில்லை. அவை மூன்றாகும்: ஒன்று, பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற விருப்பத்துக்குத் திருப்தி ஏற்படவேண்டும்; இரண்டு, குற்றவாளிக்கு ஒரு பிராயச்சித்தம் வேண்டும்; மூன்று, தீயவர்களையெல்லாம் குற்றம் புரியாதபடி தடுக்கக்கூடிய ஒரு படிப்பினை வேண்டும். இந்த மூன்றோடு நாலாவது நோக்கம் ஒன்றையும் இந்தக் காலத்துச் சட்ட நிபுணர்கள் சேர்த்திருக்கிறார்கள். குற்றவாளியைச் சீர்திருத்தவேண்டும் அல்லது குணப்படுத்தவேண்டும் என்பதுதான் அது.

'குற்றவாளி ஒரு துர்ப்பாக்கியசாலி; வழி தவறிப் போன ஒரு பிரஜை. அவன் திரும்பி நல்வழிப்பட்டு வாழ ஒத்தாசை புரிய வேண்டும்' என்று இப்போது கருதுகிறார்கள். அநேக நாடுகளில் மரண தண்டனையை அடியோடு ஒழித்துவிட்டார்கள். இந்தக் காலத்துச் சிறை, சௌகரியமும் நிம்மதியும் உள்ள புகலிடமாக இருக்கிறது. நூறு வருஷத்துக்கு முன்னே இருந்த சிறை இப்படி இராது. நம்நாட்டுச் சிறை நிலைமைகளைச் சீர்திருத்துவதில் நாம் சற்று மெதுவாகவே செல்லுகிறோம். என்றாலும், சீர்திருத்த நடவடிக்கைகளைக் கைக்கொண்டுவிட்டோம்; சீர்திருத்தங்களைச் சட்டசபை அங்கத்தினர்கள் ஆலோசிக்கிறார்கள்.

நீதி வழங்குவதுபற்றிய புதிய கருத்து, தண்டனைச் சட்டங்கள் (பீனல் லா) விஷயத்தில் மட்டும் அல்ல, வழக்கு நடத்தும் விதிமுறை (ப்ரொஸீஜரல் லா) விஷயத்திலும் கைக்கொள்ளப் பெற்றிருக்கிறது. விசாரிக்காமலே, தான் நிரபராதி என்பதற்குக் காரணங் காட்டச் சந்தர்ப்பம் அளிக்காமலே எவனையும் தண்டிக்கக் கூடாது. பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளைப் பாதுகாக்க நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஷரத்துக்கள் இருக்கின்றன.

பஞ்சாயத்துக் கோர்ட்டுகளைப் பற்றி நம் சீர்திருத்தக்காரர்கள் பெரிதும் யோசித்து வருகிறார்கள். கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு நீதி பரிபாலன விஷயத்தில் அதிகமான அதிகாரம் வழங்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ''முன்காலத்தில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் முற்றும் திருப்திகரமாக வேலை செய்திருக்கின்றன. இப்போதுள்ள நீதிபரிபாலன ஏற்பாடுகள் அந்நியர் நம்மீது சுமத்தியவை. இவை நம் நாட்டின் இயல்புக்கும் நிலைமைகளுக்கும் பொருந்தாதவை. ஆகவே, பழைய முறைக்குத் திரும்பி, பஞ்சாயத்து ஆட்சி அதிகாரங்களை விரிவுபடுத்துவோம். பஞ்சாயத்து அங்கத்தினர்களைப் பொது ஜனங்களே தேர்ந்தெடுப்பதால், அவர்களிடம் ஜனங்களுக்கு நல்ல நம்பிக்கை இருக்கும். அங்கத்தினர்கள் கிராமத்திலேயே வசிப்பதால், ஒரு வழக்கின் இரண்டு கட்சிக்காரரிடமும் நெருங்கிப் பழகியிருப்பார்கள். இதனால் உண்மையைச் சுலபமாகக் கண்டுபிடித்து, இரு தரப்பாருக்கும் பொதுவாக நியாயம் வழங்குவார்கள்'' என்றெல்லாம் அவர்கள் வாதிக்கிறார்கள்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இந்த வாதம் மிகவும் சரி என்றே தோன்றுகிறது. சற்று யோசித்துப் பார்த்தால், தவறு புலனாகும். தேர்தல் மூலம் வந்த அங்கத்தினர்கள் பாரபட்சமற்று உண்மையான நியாயம் வழங்க முடியாது. இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம்:

முதலாவதாக, தேர்தலில் வந்த அங்கத்தினர் குறிப்பிட்டதோர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவராயிருப்பார். ஏனென்றால், சகல தேர்தல்களும் இன்று கட்சி ரீதியிலேயே நடக்கின்றன. இப்படி ஒரு கட்சியின் ஆதரவில் வந்த ஒருவர் பாரபட்சமற்ற நியாயம் வழங்க மாட்டார். சர்க்கார் கொள்கையில் மாறுதல் வேண்டும் என்பதற்காக நிர்வாகிகளையும் மந்திரிகளையும் ஜனநாயக முறையில் இப்படித் தேர்ந்தெடுக்கலாம். அதன் விளைவு திருப்திகரமாகவே இருக்கும். அதில் இந்த முறை இருப்பதால், அதிகாரத்தில் உள்ள கட்சியினர் ஒழுங்காய் நடப்பதற்கு ஒரு தூண்டுதல் ஏற்படும். ஆனால் ஜட்ஜிகளை இப்படித் தேர்ந்தெடுப்பது மகா மோசம். ஜட்ஜிக்கு இரு கட்சிக்காரரில் எவனிடமும் எவ்விதப் பற்றுதலும் இருக்கக் கூடாது.

இரண்டாவதாக, சாட்சியங்களை நிறுத்துப் பார்ப்பது, உண்மையைச் சலித்துக் கண்டுபிடிப்பது, வழக்கின் அம்சங்களுக்குப் பொருத்தமான சட்டங்களைப் பிரயோகிப்பது இந்த விஷயங்களிலும் ஜட்ஜிக்குப் பயிற்சி வேண்டும். ஜட்ஜி வேலைக்கு அநுபவம், பயிற்சி இரண்டும் தேவை. ஒரு விவகாரத்

தில் மிகவும் சிறிதே சிக்கல் இருந்தாலும் போதும்; அதைத் தீர்த்து வைக்க, கிராமப் பஞ்சாயத்தினுல் சற்றும் இயலாது.

கடைசியாக, ஒரு வழக்கு நடக்கும்போது, கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர் எவரும் வெளியார் செல்வாக்குக்கு ஆளாகாமல் தப்ப முடியாது. வழக்கு விஷயத்தைப் பற்றி ஊரில் உள்ள மற்றவர் பேசும் பேச்செல்லாம் அவர் காதில் விழும். இதனுல் அவருடைய தீர்ப்புப் பாதிக்கப் பெறும். வெளி விஷயங்களை யெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளாமல் தனித்திருப்பது ஒரு ஜட்ஜியின் கடமையாகும். விசாரணை முடியும் வரையில் ஜூரர்களை யெல்லாம் கோர்ட்டிலேயே அடைத்துப் பூட்டி வைக்கும் வழக்கம் இங்கிலாந்தில் தோன்றியது இதனுல் தான். தங்கள் முன்பு வரும் சாட்சியங்களைமட்டுமே ஆதாரமாக வைத்துக்கொண்டு தீர்ப்பளிப்பது பஞ்சாயத்துக்காரர்களால் முடியாது. ஊர் வம்பையெல்லாம் அவர்கள் கேட்பார்கள். ஊர் வம்பையெல்லாம் கேட்டுச் செய்யும் தீர்ப்பு நியாயமாய் இராது; சரியாக இராது.

பஞ்சாயத்து ராஜ்யம் வேண்டும் என்கிறவர்கள், "முன் காலத்துப் பஞ்சாயத்துக்கள் வெகு திருப்திகரமாய் நடந்திருக்கின்றனவே. அதெப்படி?" என்று கேட்பார்கள். முன் காலத்துப் பஞ்சாயத்துக்கள் நீதி பரிபாலன விஷயத்தில் அப்படி நடந்தன என்று நிச்சயமாய் யார் கண்டார்? தவிர, முன் காலத்துப் பஞ்சாயத்து அங்கத்தினர்களை, அரசியல் கட்சிக்காரர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. அந்தக் காலத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ஸோஷலிஸ்ட் என்ற மாதிரியெல்லாம் கட்சிகள் இல்லை. சகல மக்களின் நம்பிக்கையையும் பெற்றவர்களே அன்று பஞ்சாயத்து அங்கத்தினரானுர்கள். மேலும், எனக்கு ஒரு சந்தேகம்: அந்தக் காலத்துப் பஞ்சாயத்தார்கள், ஜட்ஜிகளாகத் தீர்ப்பளிக்காமல் மத்தியஸ்தமே அதிகமாகச் செய்து வைத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

என் சொந்த அநுபவத்தில் கண்டது இது: பஞ்சாயத்தார்களுக்கு நீதிபரிபாலன விஷயத்தில் அதிக அதிகாரம் அளிப்பது மகா அபாயம். கிராம நிர்வாகம், கல்வி, சமூகப் பொருளாதார நலன் இந்த விஷயங்களிலெல்லாம் பஞ்சாயத்து ஆட்சி வெற்றிகரமாக நடக்கும். நீதி பரிபாலனத்தில் அதன் அதிகாரத்தை அதிகரிப்பது ஆபத்திலேதான் போய் முடியும்.

ஆள் தேவை

இண்டியானு 'என்கொயரர்' என்ற பத்திரிகையில் உள்ள ஒரு விளம்பரம் இது: "தேவை: நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம், வாரத்துக்கு ஐந்து நாள் உழைக்கக் கூடிய ஓர் ஆள், அப்படி உழைக்காத முந்திய ஆளின் இடத்தை நிரப்பத் தேவை."

அரண்மனையில் ஏலம்

★

உலகத்திலேயே இதுவரை யாரும் கேட்டிராத அளவு விலை கூறும் ஆச்சரிய ஏல விற்பனை ஒன்று இப்போது எகிப்திலே நடந்துகொண் டிருக்கிறது. அது பற்றிய இந்த விவரங்கள் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலிருந்து எடுத்தவை.

அரசிழந்து வெளியேறிய எகிப்து மன்னர் ஃபரூக் பெரிய ரசிகர். எங்கெங்கிருந்தோ அபூர்வமான கலைப் பொருள்களை வரவழைத்துச் சேர்த்து வைத்திருந்தார். அவைகளையெல்லாம் கெய்ரோ அரண்மனையிலிருந்து எகிப்து சர்க்கார் இப்போது பகிரங்க ஏலம் போட ஆரம்பித்திருக்கிறார்கள். பிப்ரவரியில் தொடங்கிய இந்த ஏல விற்பனை இந்த மார்ச்சு மாத மத்தி வரைக்கும் ஆறு வார காலம் தொடர்ந்து நடக்கப்போகிறது.

தாம் பெருஞ் செல்வத்தில் வாழவேண்டும் என்பதில் ஃபரூக் அரசருக்குப் பேரார்வம். ஏதாவது அரிய பொருள் ஒன்று உலகத்தின்

மந்திரவாதிப் பெட்டி



நீலக்கல் பொடி டப்பி

எந்த மூலையிலாவது விலைக்கு வருகிறது என்று துளிக் கேள்விப்பட்டால் போதும்; உடனே ஆள் வைத்து என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து அதை வாங்கிவரச் செய்வார். ஏலம் எடுப்பதில் அவரோடு யாரும் போட்டி போட முடியாது.

லண்டன் நகரில் உள்ள ஸோத்பி அண்டு கோ என்ற ஏலக் கம்பெனியார் விற்ற எத்தனையோ பொருள்களை ஃபரூக் அரசர் முன்பு வாங்கியிருக்கிறார். இப்போது அதே கம்பெனியைத்தான் எகிப்து சர்க்கார் அழைத்து இந்த ஏலத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரசரின் கலைப் பொருள்களுக்கெல்லாம் ஜாபிதா எடுத்து, அவைகளை ஏலம் போடும் வேலையை இந்தக் கம்பெனியார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அரசர் ஃபரூக் சேர்த்த கலைக் களஞ்சியத்தில், பழமையான பல பொருள்கள் இருக்கின்றன. கிறிஸ்து பிறக்கச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஐந்தாம் டாலமி வைத்திருந்த தங்க பெல்ட், புராதன கிரீஸ் நாட்டு நாணயங்கள் இவை போன்ற பொருள்கள் ஒருபுறம் இருக்கின்றன; நவீன காலத்துக் கைக்கடிகாரங்கள், தங்க ஸிகரெட் பெட்டிகள், மூக்குப் பொடி டப்பிகள், இஸ்ரேல் நாட்டின் மாதிரி நாணயங்கள் (ப்ரூஃப் காயின்ஸ்) இவை போன்ற பொருள்கள் மறுபுறம் இருக்கின்றன.

இரண்டாவது ஸார் நிக்கோலஸ் என்ற ருஷிய அரசரின் அரண்மனைப் பொற்கொல்லர் கார்ல் ஃபாபெர்ஜி செய்த பல அணிகள் இங்கே இருக்கின்றன. அவைகளையெல்லாம் அந்தப் பொற்கொல்லர் 'மைக்ராஸ்கோப்' என்ற பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு மிக நுணுக்கமான வேலைப்பாட்டோடு செய்திருக்கிறார். அவைகளில் ஒரு தங்க முட்டை இருக்கிறது; அந்த முட்டையைத் திறந்தால், தங்க அன்னப் பறவை ஒன்று, நீலக் கடல்போல் செதுக்கிய நீலக்கல் மீது மிதந்து நீந்துவதுபோல் காட்சி தரும். இது ஸார் அரசர் தம் மனைவிக்கு ஒரு முறை அளித்த ஈஸ்டர் பரிசாகும்.

1898-இல் அலெக்ஸாண்டர் ஃபெர்டினண்டோவிச் என்ற பிரபு தம் மனைவிக்கு ஈஸ்டர் முட்டை ஒன்று பரிசளித்தார். அதுவும் இதே பொற்கொல்லர் செய்தது தான். இந்த முட்டையின் ஓட்டிலே சிவப்பு எனமல் பூசியிருக்கிறது. அதைச் சுற்றிலும் ரோஜா

நிற ரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருக்கின்றன. பரி சளித்த பிரபுவின் உருவப் படம் ஒரு பெரிய வைரத் துக்குக் கீழே துலங்குகிறது. முட்டையைத் திறந்தால், மஞ்சள் கருவும் அதற்குக் கீழே சிவப்பு, வெள்ளை, பழுப்பு மூன்று நிறங்களும் கலந்த தங்கப் பெட்டைக் கோழி ஒன்றும் காட்சி அளிக்கின்றன. இத்தனை யோடு போயிற்று? இல்லை. அந்தக் கோழியையும் திறக்கலாம். அதற்குள்ளே 'ப்ளாக் போர்டை'த் தாங்குவது போன்ற மிகச் சிறு முக்காலி (ஈஸெல்) ஒன்று இருக் கிறது. அதன் உச்சியில் இருதயம் மாதிரி அமைந்த ஒரு வைரம் பதிந்திருக்கிறது. சின்னஞ் சிறு ஓவியப் பலகை ஒன்றை அந்த முக்காலி சுமந்துகொண் டிருக் கிறது. பலகையைச் சுற்றியுள்ள சட்டத்தில் தகதகவென்று ஜொலிக்கும் ரத்தினங்கள் பதிக் கப் பெற்றிருக்கின்றன. இந்த முட்டையும் ஃபரூக் களஞ்சியத் துக்கு வந்திருப்பதுதான்.



ரத்தினமிழைத்த பிடரியும் முத்துக் கோத்த வாலும் உள்ள சிங்கப் பொடிடப்பி

அரசர் ஃபரூக்கின் கைக் கடி காரங்களை மட்டும் ஏலம் போட்டு முடிப்பதற்கே நாலு நாள் பிடிக்கு மாம். மண்டையோடு, கைத் துப் பாக்கி, 'செர்ரி' பழம், அன்னம், ஜோடு, வண்டு இப்படிப் பலவித உருவங்களில் அவை அமைந்திருக் கின்றன. ரத்தினங்கள் பதித்த மிக அழகான கைக் கடிகாரங் களும் இருக்கின்றன. அவை பல தினிசான சங்கீதம் பொழி கின்றன. யந்திரத்தால் இயங்கும் பலவிதப் பிராணி உருவங்களும் அவைகளில் இருக்கின்றன. உதா ரணமாக, ஒரு கைக் கடிகாரத் தைக் குறிப்பிடலாம். அதில் உள்ள ஒரு பட்டனை அமுக்கினால், இரண்டு குதிரை வீரர்கள் தோன்றி, ஒருவரோடு ஒருவர் சண்டை போட ஆயத்தமாவார் கள். கீழே ஒரு வீரன் உடனே தாரை ஊதச் சிளம்பிவிடுவான்.

1780-முதல் 1820 வரையில் ஸ்விட்ஜர்லாந்து, பிரான்ஸ் இரண்டிலும் தயாரான சில கைக்கடிகாரங்களை வாங்கப் பலர் ஆவலோடு தேடிக்கொண்டிருப்பது வழக்கம். இந்தக் கடிகாரங்களில் பெரும்பாலானவை சீனவுக்குப் போய்விட்டன. அங்கே உள்ள பணக்காரர் வீட்டுக் குழந்தை களுக்கு இவைகள் விளையாட்டுச் சாமான்களாய் இருந்தன. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், அபூர்வப் பொருள் சேகரிக்கும் ஆவல் கொண்ட பலர் இவைகளை மீண்டும் வாங்கிவந்தார்கள். இப் படிக் கிழக்கே போய் மேற்கே திரும்பி வந்த பல கைக்கடிகாரங் கள் ஃபரூக் களஞ்சியத்தில் இருக் கின்றன.

பாடும் பொம்மைகள் பல அதில் இருக்கின்றன. கூண்டில் அடை

பட்ட இசைக் குருவிகளும் பெட்டிகளும் இருக்கின்றன. புகழ் பெற்ற லண்டன் க்ளாக்-மேக்கர் ஜேம்ஸ் காக்ஸ் என்பவர் செய்த மிக அருமையான சங்கீதக் கடிகாரம் ஒன்று இருக்கிறது.

விலை உயர்ந்த 'மந்திரவாதிப் பெட்டி' (மஜீஷியன் பாக்ஸ்) ஒன்று இருக்கிறது. அதில் சித்திரம் தீட்டியிருக்கிறது. அதன் மூடியைத் திறந்ததும், பழங்கால மந்திரவாதி ஒருவர், கையிலே மந்திரக் கோலுடன் தோன்றுகிறார். தொடர்ந்து பன்னிரண்டு கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லுவார். ஒரு பக்கம் அமைத்திருக்கும் டிராயரை இழுத்துப் பார்த்தால், ஆறு தட்டுக்கள் தென்படும். அந்தத் தட்டுக்களில்தான் பன்னிரண்டு கேள்விகளும் எழுதப் பெற்றிருக்கின்றன. கேள்வித் தட்டுக்களில் ஒன்றை எடுத்து, மற்றொரு சிறு டிராயரில் வைத்து உள்ளே தள்ளிவிட்டால் போதும். மந்திரவாதி தம் மந்திரக் கோலை அப்படியும் இப்படியும் ஆட்டி மந்திரமெல்லாம் முணுமுணுப்பார். அவருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு பையன் வீணையை மீட்டிச் சங்கீதம் பொழிவான். மந்திரவாதி தம் பக்கத்தில் உள்ள மந்திரப் புத்தகத்தை அடிக்கடி படித்துப் பார்ப்பார். கடைசியிலே நிமிர்ந்து தம் எதிரே உள்ள மரத்தை அண்ணாந்து பார்ப்பார். பிறகு, தம் மந்திரக் கோலை நீட்டி மரத்தைச் சுட்டிக் காட்டுவார். உடனே மரத்தின் கிளை ஒன்று சாயும். அதற்குள் மறைந்திருந்த ஏடு ஒன்றில் பளிச்சென்று கேள்விக்கு விடை எழுதியிருக்கும். சற்று நேரத்துக்கெல்லாம் மெல்ல மெல்ல மரக்கிளை நிமிர்ந்து தன்னிடத்தில் போய்ச் சேர்ந்து ஏட்டை மறைத்துவிடும். இதனுடன் நாடகம் முடிந்தது.

கேள்வி, விடை எல்லாம் பிரெஞ்சு பாஷையில்தான் இருக்கின்றன. மிகவும் ரசமானவை. உதாரணமாக, இரண்டு கேள்விகளையும் விடைகளையும் பாருங்கள்.

கேள்வி: கிடைத்தற்கரிய அபூர்வப் பொருள் எது?

பதில்: நண்பன்.

கே: மிக அற்பாயுள் கொண்டது எது?

ப: காதல்.

தொட்டிலோடு சிறு குழந்தைப் பொம்மை ஒன்று இருக்கிறது. அதன் தலையிலே வைர நட்சத்திரங்களும் பிறையும் இழைத்த துருக்கிக் குல்லாய் துலங்குகிறது. கடல்நீலக் கல்பிடி ஒன்றைப் பிடித்தவண்ணம், குழந்தை ஒலமிடுகிறது. பெரிய நீலக்கல் ஒன்றில் பூக்கோலங்கள் போலப் பல வைரங்களை வைத்திழைத்த பொடி டப்பி ஒன்று இருக்கிறது. மதிப்பரிய இன்னும் எத்தனையோ விதமான பொடி டப்பிகளும் இருக்கின்றன.

நாணயங்களில்தான் எத்தனை விதம்! 1797-இல் போட்ட பிரிட்டிஷ் தங்கப் பென்னி, 1820-இல் போட்ட பிரிட்டிஷ் ஐந்து ராத்தல் வெள்ளி நாணயம் இரண்டும் இருக்கின்றன. சுமார் 8,500 தங்க நாணயங்களும், 164 பிளாட்டினம் நாணயங்களும், எண்ணற்ற வெள்ளிப் பணங்களும், செப்புக் காசுகளும், மெடல்களும் இருக்கின்றன.

இத்தனை சாமான்களும் ஏலம் போன பிறகு, கடைசியில் முத்தாய்ப்பு வைப்பதுபோல் ஏராளமான 'பேப்பர்-வெயிட்'டுகள்

விற்பனையாகும். விதம் விதமான அபூர்வவர்ண விசித்திரப் 'பேப்பர்-வெயிட்'களை யெல்லாம் அரசர் ஃபரூக் சேர்த்து வைத்திருக்கிறார்.

இந்த ஏல விற்பனையில் சில பொருள்கள், இதுவரைக்கும் உலகில் என்றுமே எந்தப் பொருளும் விலை போகாத அளவு மிக உயர்ந்த விலைக்குப் போகும் என்றே எதிர்பார்க்கிறார்கள். காரணம் அந்தப் பொருள்களின் சுயமதிப்பு மட்டும் அல்ல. அவைகளை வாங்குகிறவர், "ஒரு காலத்தில் இவை ஓர் அரசருக்குச் சொந்தமாக இருந்தவை" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம் அல்லவா? இதற்காகவுந்தான் சிலர் என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து அவைகளை வாங்குவதற்குத் தயாராக இருப்பார்கள்.

சகோதரத்துவம்

அமெரிக்காவில் மிஸ்ஸௌரி மாகாணத்தில் ஒரு காண்டிராக்டர் ஐந்து லட்சம் டாலர் மதிப்புள்ள ஒரு கட்டிடம் கட்ட ஒப்புக்கொண்டார். கட்டிடம் கட்டவேண்டிய இடத்தில் அந்தச் சமயம் பார்த்து ஒரு குருவி வந்து, முட்டையிட்டு அடை காப்பதற்காகக் கூடு கட்டியது. அது குஞ்சு பொரிக்கும வரையில் கட்டிட வேலையைக் காண்டிராக்டர் நிறுத்தி வைத்துவிட்டார். இதைப்பற்றி அவரை ஒரு நண்பர் கேட்டபோது, "எனக்கு அப்படி ஒன்றும் பட்சிகளிடம் காதல் இல்லை. சகோதரக் காண்டிராக்டருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்தினேன். அவ்வளவுதான்" என்றார் காண்டிராக்டர்.

சாட்சி விசாரணை

அடிதடி வழக்கு எதிலும் தோல்வியே கண்டறியாதவர் ஒரு லாயர். தம் கட்சியின் சாட்சிகளுக்குப் பலமுறை நன்றாகப் போதித்துத் தயார் செய்வித்த பிறகே, அவர்களைக் கோர்ட்டுக்கு அழைப்பது அவர் வழக்கம். எதிரி லாயர் எவ்வளவு உக்கிரமாகக் குறுக்கு விசாரணை செய்தாலும், இந்தச் சாட்சிகள் இம்மியும் அசைந்து கொடுக்க மாட்டார்கள்.

ரெயில் பாதை லெவல் - க்ராஸிங் ஒன்றில் நேர்ந்த விபத்துச் சம்பந்தமான ஒரு வழக்கில் இந்த லாயர் ஆஜரானார்.

இவருடைய தரப்பில் ஆறு வயதுப் பையன் ஒருவன் சாட்சி சொல்ல வந்து, இவரைக் கவிழ்த்துவிட்டான்.

பையனை, "உன் வயது என்ன?" என்று கேட்டார் கோர்ட்டு குமாஸ்தா.

உடனே பையன் மளமளவென்று, "கேட் திறந்தது. ஊதல் சத்தமே கேட்கவில்லை..." என்று கதையைத் தொடங்கிவிட்டான்.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, ‘ஃபில்மிண்டியா’ ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை ‘ஃபில்மிண்டியா’ பிப்ரவரி ’54 இதழில் வந்தவை.

கேள்வி: இந்தியர்களுக்கு எப்போது உலகில் கொஞ்சம் மரியாதை ஏற்படும்?

பதில்: ஒவ்வொரு நகரத்திலும் துப்பாக்கிப் பயிற்சிச் சபை ஏற்படும்போது.

* * *

கே: ஒரு காங்கிரஸ்காரர் மரணம் அடைந்தால் என்ன நடக்கிறது?

ப: மற்றக் காங்கிரஸ்காரர்கள் விடும் கண்ணீரையெல்லாம் பத்திரிகைகள் தொகுத்து நம் கண்ணில் வீசுகின்றன. அது இருபத்து நாலு மணி நேரத்துக்கு நாடு முழுவதையும் புலம்பச் செய்கிறது.

* * *

கே: முகப் பருவுக்கு ஏதாவது மருந்து உண்டா?

ப: வயிற்றுக்கு விளக்கெண்ணெய், முகத்துக்குப் பாதாம் தைலம், தலைக்கு ராமதீர்த்தப் பிராம்மி தைலம் உபயோகித்து வாருங்கள். ஆறு மாதத்துக்கு அப்புறம் எழுதுங்கள்.

* * *

கே: அகில இந்திய மகளிர் உணவுச் சபையைச் சேர்ந்த எல்லாப் பெண்களுக்கும் சமைக்கத் தெரியுமா?

ப: அவர்கள் வீட்டுச் சமையற்காரர்களுக்குத் தெரியும்.

கே: பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு வருங்காலத்தில் எப்படி இருக்கும்?

ப: நாயும் பூனையும் போல்தான் இருக்கும். ஆனல், பூனையின் கை கொஞ்சம் ஓங்கியிருக்கும்.

* * *

கே: நாகரிக நங்கையர் ஏன் வாசனைத் திரவியங்களை உபயோகிக்கிருர்கள்?

ப: ஏமாற்றம் வேர்வையை உண்டாக்குகிறது. வேர்வை இருந்தால் வாசனைத் திரவியம் வேண்டியதுதானே? எல்லா மலர்களுக்கும் இயற்கையாகவே மணம் இருப்பதில்லையே!

* * *

கே: ஒரு பெண்மணி தன் வயசை மறைப்பதில் ஏதாவது லாபம் இருக்கிறதா?

ப: ஒரு மாதின் வயசு அவளுடைய முகத்தில் எழுதியிருக்கிறதே; படிக்காத முட்டாள் கூட ஒரு பார்வையிலே அதை அறிந்துகொள்வான்.



கே: இரவு பகலைத் தழுவும் போது என்ன நடக்கிறது?

ப: பறவைகள் தம் கூட்டில் அடங்கி இன்புற்று, மனித சாதிக்கு இல்லத்தை ஆனந்தமயமாக்கும் நேரத்தையும் வகையையும் தெரிவிக்கின்றன. பகல் இரவைத் தழுவி விடை அளிக்கும் போது, பறவைகள் கூட்டை விட்டுப் பறந்து போய், உழைத்து உணவு தேடும் நித்திய முயற்சியை மேற்கொள்கின்றன; கடவுள் தம் படைப்பு முழுமைக்கும் வேண்டிய உணவைப் படைத்திருக்கிறார் என்பதையும், அவர்கள் அதைத் தேடிப் பெறவேண்டும் என்பதையும் அதனால் விளக்குகின்றன. எந்தப் பறவையாவது பட்டினியினால் இறப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?

* * *

கே: பரிபூரணமான சுத்தமுள்ள தேசம் ஒன்றைச் சொல்லுங்கள்.

ப: ஸ்விட்ஜர்லாந்து. அது உலகத்திலேயே மிகவும் சுத்தமான தேசம்.

* * *

கே: ராஜாஜி 'க்ரிக்கட்' ஆடுவாரா?

ப: ஓ! அற்புதமாய் ஆடுவாரே! அவர் பெரிய 'குக்ளி போலர்.'

கே: நாங்கள் ஆந்திரர் இருக்கிறோமே; எங்கள்மீது உங்களுக்கு ஏன் அன்பு இல்லை?

ப: இதென்ன அசட்டுத்தனம்! சென்ற அக்டோபர் வரைக்கும் தென்னிந்தியக் கூட்டம் ஒன்றில் ஆந்திரர் எவரையும் நான் காணவில்லை; மிகத் தெற்கே உள்ள மலையாளி உள்பட எல்லாரும் எனக்கு மதராஸிகளாகவே தோன்றினார்கள். இப்போது திடீரென்று 84-வயதுத் தாதி கையிலுள்ள ஐந்தே மாதப் பாப்பாவிடம் அன்பு செலுத்தென்றால், எப்படி முடியும்?

* * *

கே: இந்தியாவின் அரசியல் திட்டத்துக்கும் பாகிஸ்தான் அரசியல் திட்டத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: பாகிஸ்தானின் அரசியல் திட்டம் அந்த நாட்டு ஜனங்களின் குரலை உருவாக்குகிறது. இந்தியாவின் திட்டமோ நம் தலைவர்களின் கனவைத்தான் காட்டுகிறது.

* * *

கே: கண்களை என்ன எனலாம்?

ப: பேராசை கொண்ட பிச்சைக்காரர்கள். அதிகமாகப் பெறப் பெற மேலும் அதிகமாக ஆசைப்படுகின்றன.

இந்திய மலை ஜாதி ஜனங்களிலே
இப்படி ஒரு பிரிவினர்.

சாவுக்கு அஞ்சாத மக்கள்

டி. பி. நாயக்

மத்திய பாரதத்தில் நிமாட் ஜில்லாவில் பலாஹி என்ற ஆதிவாசிகள் இருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் அவர்களுடைய தொகை சுமார் ஐந்து லட்சத்து எண்பத்து நாலாயிரம். அஜ்மேர், மார்வாடம், உத்தரப் பிரதேசம், குவாலியர் முதலிய பல இடங்களில் அவர்கள் பரவியிருக்கிறார்கள்.

இனத்தைப் பொறுத்தவரையில் அவர்களை ஒரே சாதியென்றோ ஒரே உருவமுடையவர்கள் என்றோ சொல்ல முடியாது. அவர்களுடைய மேனியின் நிறம் செம்பட்டையாகவோ கறுப்பாகவோ இருக்கும். ஆரியர்களின் ரத்தமும் அநாரியர்களின் ரத்தமும் அவர்கள் உடலில் கலந்திருக்கிறது.

அவர்கள் கைத்தறியில் செய்த துணிகளையே உடுத்துகிறார்கள். வேட்டியும் சட்டையும் தலைப்பாகையுமே அவர்களின் உடைகள். ஆண்கள் வெயிற் காலத்தில்தான் செருப்புப் போட்டுக்கொள்வார்கள். பெண்கள் சிலசமயம் வெளியே போகும்போது செருப்பு அணிவதுண்டு. ஆனால் ஊருக்குள் வந்ததுமே அதைக் கழற்றிவிடுவார்கள். ஆண்களை, அதிலும் கணவனைக் காணும்போது எந்தப் பெண்ணும் செருப்புப் போட்டுக்கொள்ளக் கூடாது.

பலாஹி ஆண்கள் காதிலும் கையிலும் இடுப்பிலும் நகைகள்

போட்டுக்கொள்கிறார்கள். பெண்களுக்குத்தான் நகை ஆசை அதிகம். அவர்கள் பச்சை குத்திக் கொள்வதும் உண்டு.

சோள ரொட்டியும் சோறும் பருப்பும் அவர்களுடைய முக்கிய உணவு. கையில் பணம் இருக்கும் போது அவர்கள் எப்போதாவது கோதுமையும் கறிகாயுங்கூட வாங்குவார்கள். குடிப் பழக்கமும் அவர்களுக்கு உண்டு. சிலர் அபினியும் உண்கிறார்கள்.

குழந்தை பிறந்ததும் பலாஹி ஜாதியார் மகிழ்ச்சியோடு விழாக் கொண்டாடுவார்கள். பெரிய விருந்து நடக்கும். தந்தைதான் குழந்தைக்குப் பெயரிடுகிறான். அவன் தன் பெயரையோ தன் மனைவியின் பெயரையோ குழந்தைக்கு வைப்பதில்லை; அப்படி வைத்தால் பெற்றோர் இறந்து

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி: ஜனவரி '54), கல்கத்தா.

விடுவார்களாம். குழந்தையைச் செல்லமாகக் கூப்பிடும் பெயர் வேறாக இருக்கும். கடைசியில் அந்தப் பெயரே நிலைத்து விடுவதால், பலருக்குத் தங்கள் சொந்தப் பெயர் தெரிவதில்லை. ராமன், கிருஷ்ணன் இவை போன்ற பகவானின் பெயர்களையோ, மங்களியா, புதியா இவை போன்ற வாரங்களின் பெயர்களையோ, இவர்கள் வைத்துக்கொள்கிறார்கள்.

குழந்தை பிறந்த ஆறாவது நாள் ஷஷ்டிதேவியை வழிபடுகிறார்கள். அவள்தான் குழந்தையின் தலைவிதியை எழுதுகிறாளாம். பதினோராம் நாள், திருமணத்தில் நடப்பது போன்ற ஒரு சடங்கு நடக்கிறது. குழந்தை பிறந்த பிறகு தான் திருமணம் நிறைவேறுகிறது என்ற கொள்கையோடு இந்தச் சடங்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருபத்தோராவது நாள், தாய் பிரசவ அறையை விட்டு வெளியே வருகிறாள். அடுத்த குழந்தை பிறக்கும் வரைக்கும் சுமார் மூன்று வருஷகாலம் அவள் முதல் குழந்தையை வளர்க்கிறாள். குழந்தை அழும்போதெல்லாம் அவள் பால் கொடுப்பாள். குழந்தை சற்றுப் பெரியவனானதும் குடும்பத்திலுள்ள கிழ உறவினர்கள் அவனை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அவனுடைய படிப்பைப்பற்றி யாரும் துளியும் கவலைப்படுவதில்லை. இவர்கள் தங்கள் குழந்தைகளைக் கடுமையாக நடத்துவதில்லை.

தாய் தந்தையரின் உறவிலே இவர்கள் பெண் கொள்வதில்லை. ஐந்தாம் தலைமுறை வரைக்கும் ரத்த சம்பந்தமும், மூன்றாம் தலைமுறை வரைக்கும் சாதாரணத்

தொடர்பும் உள்ள குடும்பங்களிலே திருமணத்துக்கு ஏற்பாடு செய்யமாட்டார்கள். விதவை, தன் முதல் கணவனுடைய வம்சத்தாரை மறுமணம் செய்துகொள்ளக் கூடாது.

பிள்ளைக்கு எழெட்டு வயதும் பெண்ணுக்கு அதைவிடக் குறைவான வயதும் இருக்கும்போது கல்யாணத்துக்கு நிச்சயதார்த்தம் நடக்கும். பெற்றோர்களே கல்யாணத்தைத் தீர்மானிப்பார்கள். இரண்டு வீட்டாரும் ஒப்புக்கொண்ட பிறகு, பிள்ளையின் தகப்பன், ஊரார் சிலரோடு பெண்ணின் தகப்பனுடைய வீட்டுக்குப் போய், "இன்று நிச்சயதார்த்த விழாவுக்காகக் குடிப்போம்!" என்று சொல்வான். கடைசிப் புட்டி காலியாகும் சமயத்தில் பிள்ளையின் தகப்பன் ஒரு தம்ளரில் சில துளி மதுவை விட்டு, "நான் என் மகனை உனக்கு மகனாகக் கொடுக்கிறேன்; இனி எவ்வகையான சச்சரவும் இருக்கக்கூடாது" என்று சொல்லி, அதைப் பெண்ணின் தகப்பனிடம் கொடுப்பான். பெண்ணின் தகப்பன் அந்த மது

வைக் குடித்துவிட்டு, அதிலேயே மறுபடி கொஞ்சம் மதுவை ஊற்றிச் சம்பந்தியிடம் கொடுத்து, "நான் என் மகளை உனக்கு மகளாகக் கொடுக்கிறேன். அவள் உனக்குப் பணிவிடை செய்வாள். அவளை நன்றாக வைத்துக்கொள்" என்பான்.

சில மாதங்களுக்குப் பிறகு பிள்ளையின் தகப்பன் மிட்டாய்களும் துணிகளும் எடுத்துக்கொண்டு சம்பந்தியின் வீட்டுக்குப் போவான். நிச்சயதார்த்தம் ஆனதும் ஓர் ஆண்டுக்குள் 'கன்யா சுல்கம்' கொடுத்துவிட வேண்டும். இது சுமார் முப்பது அல்லது நாற்பது ரூபாய் இருக்கும். பெண்ணை வளர்த்தவன் அயல் வீட்டில் வேலை செய்வதற்கு அவளைக் கொடுப்பதனால் இந்தப் பணம் வாங்குவது நியாயம் என்று கருதுகிறான்.

திருமணத்தன்று மணப் பெண்ணையும் மணமகனையும் அவரவர் வீட்டில் மஞ்சள் நீராட்டம் செய்விப்பார்கள். வரனுடைய வீட்டிலும் ஒரு கல்யாணப் பந்தல் போட்டிருப்பார்கள். பிள்ளை வீட்டுக்காரர்கள் மாட்டு வண்டிகளில் பெண்வீட்டுக்குப் போவார்கள். அங்கே பெரிய பந்தலில் அவர்களை வரவேற்றுக் கல்யாணம் நடைபெறும்; விருந்து நடக்கும். மறுநாள் மணமகளோடு அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்புவார்கள். சில நாள் அங்கே இருந்த பிறகு மணமகள் தன் தகப்பன் வீட்டுக்குப் போய்விடுவாள்.

பெண் பெரியவளானதும் அவளுடைய மாமனுக்குச் செய்தி அனுப்புவார்கள். அவளுடைய மாமன் சில உறவினர்களோடு வந்து விருந்து உண்பான். அவன் திரும்பும்போது மருமகளையும் தன்னோடு அழைத்துப் போவான்.

இதைத் தவிர வேறு வகையான மணங்களும் நடைபெறுவது உண்டு. எந்தப் பெண்ணும் எந்த ஆணின் வீட்டிலும் போய் வாழலாம். பல பெண்டிரை மணந்துகொள்ளும் வழக்கம் உண்டு; ஆனால் இது அதிகமில்லை. விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாம். விவாக ரத்து செய்துகொள்வது இவர்களிடையே மிகவும் சகஜம்.

பலாஹி ஜாதியார் நோயாளிகளுக்கு வீண் ஆறுதல் சொல்லித் தைரியமூட்டுவதில்லை. ஒருவன் பிழைப்பது சந்தேகமாக இருந்தால் அதை அவனெதிரிலேயே வெளிப்படையாகச் சொல்லிவிடுவார்கள். சாகுந் தறுவாயிலுங்கூட எவரும் நோய்க்கோ சாவுக்கோ அஞ்சுவதில்லை.

பிணத்தைத் தரையில் விட்டுக் குளிப்பாட்டிச் சல்லாத் துணி போர்த்துவார்கள். செத்தவனுடைய உறவினர்கள் பிணத்தின் கையில் சில வெள்ளி நாணயங்களும் தானியமும் வைத்து, பாடையில் கிடத்துவார்கள். விதவையான பெண் அழகிய ஆடைகளும் அணிகளும் பூண்டு, கேட்போர் மனம் உருகும்படி அழுவாள். செத்துப்போன கணவனின் உடலில் அவள் மஞ்சளைப் பூசிவிட்டு, ஒவ்வொரு நகையாகத் தன் அணிகள் எல்லாவற்றையும் கழற்றிவிடுவாள்.

"ராம் போலோ பாயீ ராம்" என்று வழியில் சொல்லிக்கொண்டே நான்கு பேர் பிணத்தைத் தூக்கிச் செல்வார்கள். மயானத்தில் பிணத்தைப் புதைத்துவிட்டு, எல்லாரும் வாய்க்

காலிலோ ஆற்றிலோ முழுகிவிட்டு வீடு திரும்புவார்கள்.

பத்து நாள் வரைக்கும் துக்கம் கொண்டாடுவார்கள். தினமும் விடிகாலையில் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவார்கள். பத்தாம் நாள் பிள்ளையார் பூசை நடக்கும். உறவினர்கள் விருந்து உண்பார்கள்.

இந்த மதத்திலுள்ள பெரும்பாலான தெய்வங்களை, பலாஹி ஜாதியார் வழிபடுகிறார்கள். ராமன், கிருஷ்ணன், சிவபெருமான், ஹநுமான், பிள்ளையார் முதலிய தெய்வங்களோடு, அவர்கள் கபீரையும் பாம்பையும் சில மிருகங்களையும் பூசிக்கிறார்கள். பேய் பிசாசுகளில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. துணி நெய்தும், விறகு வெட்டியும், பயிர்த்தொழில் செய்தும், ஆடுமாடுகள் வளர்த்தும் அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். குஜராத்தி மொழியின் பல சொற்கள் அவர்களுடைய பாஷையில் கலந்திருக்கின்றன. அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் குஜராத்தியரின் பழக்க வழக்கங்களுக்குங்கூட மிகுந்த ஒற்றுமை இருக்கிறது.

சிரிப்பு

போலந்திலிருந்து வந்த ஓர் அகதிக் குடும்பத்துப் பையன் உடே. அவனுக்கு வயது ஐந்து. என் மருமகள் பெயர் பெட்டி. அவளுக்கும் வயது ஐந்தே. அவள் ஏதோ இங்கிலீஷில் உளறுவாள்; அவன் ஏதோ போலந்து மொழியில் உளறுவான். இரண்டு பேருக்கும் எப்படியோ சிநேகம் ஏற்பட்டுவிட்டது.

ஒரு நாள் பெட்டியை அழைத்து அவள் கை நிறையத் தின்பண்டங்களைக் கொடுத்துவிட்டு, "என் கண்ணு, பெட்டி; உடே, நீ இரண்டு பேரும் சிநேகமாகி ஓயாமல் விளையாடுகிறீர்களே; எப்படி? நீங்கள் பேசுவது ஒரே பாஷை இல்லையே!" என்று கேட்டேன்.

"இல்லை, அத்தை. ஆனால், நாங்கள் இரண்டு பேரும் சிரிப்பது ஒரே பாஷைதான்" என்றாள் சிறுமி.

—விவியன் எவி. பெய்ன், 'காரொனெட்.'

சட்டசபை அங்கத்தினருக்கு

என்னதான் இருக்கட்டும்; இந்தச் சட்டசபை அங்கத்தினர் இருக்கிறார்களே, இவர்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைப்பது நல்லது: சட்டசபைக்குப் போகிறார்கள்; சட்டம் செய்கிறார்கள்; அப்புறம் ஊருக்குத்தான் திரும்பவேண்டும்; திரும்பியபின் தாங்கள் செய்த சட்டத்தின் கீழேதான் வாழவேண்டும்.

—'காரொனெட்'

கார்ட்டூன் கதம்பம்



உலகில் விமான விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

—'அமிர்த பஜார் பத்திரிகை'

அணுக்குண்டு ஃபுட்பால்.

—'தி லண்டன் ந்யூஸ் க்ராணிக்கிள்'



அமெரிக்க - பாக் ஒப்பந்தத்துக்குப் பின்.

—'சங்கர்ஸ் வீக்லி'



'உணவுக் குறை இல்லை' என்கிறார் இந்திய உணவு மந்திரி.

—'ப்ளிட்ஸ்'

சந்தடி இல்லாத நகரம்

★

கற்பனை அல்ல; புராதனக் கதையும் அல்ல. உண்மையிலேயே இப்படி ஒரு நகரம் இந்த நவீன காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் இருக்கிறது. இதைப்பற்றிய இந்த விவரம் 'பாப்புலர் ஸயின்ஸி'ல் ராபேர்ட் லாஸ்ச் எழுதிய கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

ஆண் தவளை என்றால், ஐக்கிய அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலே கொஞ்சம் கண்ணியமாய்த்தான் நடத்துவார்கள். ஆனால், அந்தத் தவளை கூட, டென்னெஸீ மாகாணத்தின் தலைநகரான மெம்ஃபிஸ் என்ற பட்டணத்தில் 'கரா முரா' என்று சத்தம் போடக்கூடாது. தவளை என்ன? நாயுந்தான் குரைக்கக்கூடாது. மோட்டார்க் கார்கூட, மிக்க அவசியம் நேர்ந்தாலொழிய, ஹார்ன் சத்தம் கொடுக்கக் கூடாது.

சகல சந்தடிகளையும் தடுக்கும் சட்டம் (ஆர்டினன்ஸ்) ஒன்று பதினைந்து வருஷங்களுக்கு முன் அந்த நகரில் அமலுக்கு வந்தது.

நகரில் மெயின் ஸ்ட்ரீட், ஃப்ரண்ட் ஸ்ட்ரீட் என்ற இரண்டு வீதிகளிலுந்தான் வார நாட்களில் மிக அதிகமான ஜன நடமாட்டமும் வண்டிப் போக்குவரத்தும் நிறைந்திருக்கும். அன்று அயலூர் நிருபர் ஒருவர் அங்கே போய்ப் பார்த்தார். பகல் பன்னிரண்டு மணி நேரத்தில் மூன்றே மூன்று தடவைதான் அவருக்கு ஹார்ன் சத்தம் கேட்டது. அதிலும் இரண்டு தடவை அயலூர் டிரைவர்கள் தெரியாமல் ஹார்ன் அடித்ததுதான். அங்கே ஏராளமான கார்கள் துளிக்கூடச் சத்தம் போடாமல் செல்கின்றன. 'ட்ராஃபிக் போலீஸ்' சேவகர்கள் குதிரைகள்மீது சவாரி செய்தபடி போக்குவரத்தைக் கவனித்து வருகிறார்கள். அந்தக் குதிரைகளின் குளம்படிச் சத்தம் மட்டும் கேட்கலாமா? அவைகளுக்கு ரப்பர் லாடம் கட்டியிருக்கிறார்கள்.

கோர்ட் ஸ்கொயர் என்ற சதுக்கத்திலும் சரி, கான்ஃபிடரேட்

பார்க் என்ற நந்தவனத்திலும் சரி, கிசு கிசு என்று மெல்லிய குரலிலே பேசிக்கொண்டு மெல்ல மெல்ல நடக்கிறார்கள். நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் ஜனங்கள் உள்ள நகரமாயிருந்தும், பதினையாயிரம் ஜனங்களே உள்ள நகரம்போலவே அது தோன்றுகிறது.

பிராணிகளிடம் பிரியமுள்ள ஒருவர், மீன் பிடிக்கப் போனார். அங்கே ஆண் தவளை ஒன்று கிடைத்தது. அதை உயிரோடு பிடித்து எடுத்துக்கொண்டு நகருக்குள் வந்தார். அப்போது இரவு நேரம். ஜில் என்று நிலாக் காய்ந்துகொண்டிருந்தது. தவளைக்குக் குஷி பிறந்துவிட்டது. 'கரா முரா' என்று சங்கீதம் பொழிய ஆரம்பித்தது. தவளையின் இந்தக் குற்றத்துக்காக அதன் சொந்தக்காரர் அபராதம் செலுத்த வேண்டியதாயிற்று.

சாயங்காலம் மணி எட்டு ஆகிவிட்டால், சரிதான். அப்புறம் நகரத்தில் துளிச் சந்தடி இராது. 'அமைதியாய், சௌக்கியமாய் நகர மக்கள் தூங்குவதற்காக'ப் பலவிதமான சந்தடிகளைச் சட்டம் தடுக்கிறது. விபத்து நேரும் போல் இருந்தாலொழிய வேறு சமயங்களில் மோட்டார் ஹார்ன் அடிப்பது, ரேடியோவை ஒரேயடியாய்க் கூச்சலிடும்படி திருகிவிடுவது, புலம்புவது, கூச்சலிடுவது, கோஷம் போடுவது, சீட்டி அடிப்பது, பாடுவது, விலங்கோ பறவையோ அடிக்கடி அல்லது தொடர்ந்து கத்துவது, மூடி அடக்கி வைக்காத 'எக்ஸாஸ்ட்' சத்தம், 'க்ராஷிங்' இல்லாத இடத்தில் ரெயில் எஞ்சின் ஊதுவது, வேளையில்லாத வேளையில்



கொத்து வேலை செய்யும் சத்தம் - இப்படி எத்தனையோ ஒலிகளைத் தடை ஜாபிதாவில் குறித்திருக்கிறார்கள்.

நகரில் இவ்விதம் சந்தடியைத் தடுத்திருப்பதால், நகர மக்கள் உடல் நலம், மன நிம்மதி இவற்றுடன் சந்தோஷமாய் வாழ்கிறார்கள். இது போக, சந்தடியைத் தடுக்கும் வேலையில் போலீஸார் ஈடுபடும்போது, ரசமான சில சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

ஸான் க்வெண்டின் என்ற ஊர்ச் சிறையிலிருந்து இரண்டு கைதிகள் தப்பியோடினார்கள். பல பாங்குகளில் புகுந்து கொள்ளையடித்தார்கள். கடைசியில், ஒரு காரில் சவாரி செய்துகொண்டு மெம்ஃபிஸ் நகருக்குள் புகுந்தார்கள். இங்கே சந்தடியைத் தடுக்கும் சட்டம் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. காரை விட்டுக்கொண்டு வரும்போது, வீதியில் அழகான இரண்டு பெண்கள் போவதை அவர்கள் கண்டார்கள்; கேட்க வேண்டுமா? அதுதான் நெடுங்கால வழக்கமாயிற்றே; கெக்கலி கொட்டிக்கொண்டு தொடர்ந்து கூச்சலிட்டு ஹார்ன் அடித்தார்கள். அங்கே நின்றுகொண்டிருந்த இரண்டு போலீஸ் ஜவான்கள், தங்கள் நகரத்தின் சட்டத்தைக் குறித்து அவர்களிடம் சொல்லி எச்சரிப்ப

தற்காக, காருக்குக் குறுக்கே வந்தார்கள். கொள்ளைக்காரர்கள் மருண்டுபோய், துப்பாக்கிகளை எடுத்து நீட்டி, ஓடிப்போக முயன்ருர்கள். நகரத்தின் ஜவான்கள் மிகவும் திறமைசாலிகள். கொள்ளைக்காரரைக் கைது செய்து, திரும்பவும் ஸான் க்வெண்டின் சிறைக்கே அனுப்பிவிட்டார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒரு நாள் பகல் சாப்பாட்டுக்காக வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது யாரோ ஒரு டிரைவர் வெகு கடுமையாய் விட்டு விட்டு ஹார்ன் அடித்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் அவனை நிறுத்தினர். 'மார்ஸ் கோட்' என்ற தந்தி பாஷையில் ஏதோ செய்தி அனுப்பிக்கொண்டிருந்ததாக அவன் சொன்னுன். மேலும், கிண்டிக்கிண்டி விசாரித்ததில் முழு உண்மையும் வெளியாயிற்று. ஆசாமியின் ஜாகையில் கள்ள நோட்டு அடிக்கும் வேலை மும்முரமாக நடந்துகொண்டிருப்பதாகத் தெரிந்தது. போய்ச் சோதனை போட்டால், கள்ள நோட்டு அச்சுக்கள், யந்திரங்கள் எல்லாம் அகப்பட்டன. ஐந்து டாலர் நோட்டுக்களைக் கட்டுக் கட்டாய் அச்சிட்டு ஊரிலே செலாவணி செய்துவிட அவன் முயன்றிருக்கிறுன்!

சத்தத்தைத் தடுக்கும் சட்டம் மெம்ஃபிஸ் நகரில் இவ்வளவு கண்டிப்பாக அமலில் வந்ததற்கு மூல காரணம் அந்த நகரில் வெளி வரும் 'ப்ரெஸ்-ஸிமிட்டார்' என்ற பத்திரிகையின் ஆசிரியரான ரால்ஃப் மில்லெட் என்பவருடைய பிரசாரந்தான். அவருடைய சத்த எதிர்ப்புப் பிரசாரத்துக்கு வலுக் கொடுத்தது ஒரு நாள் நிகழ்ச்சி. சில்லறை வியாபாரிகள் இரண்டு பேருடைய விளம்பர மோட்டார் ட்ரக்குகள் அன்று ஓரிடத்தில் சந்தித்தன. லவுட்-ஸ்பீக்கர் மூலம் இரண்டு வண்டிகளிலிருந்தும் அவரவர் சரக்குகளைப்பற்றி விளம்பர கோஷங்கள் கிளம்பின. போட்டா போட்டியில், இரண்டு கோஷங்களும் ஒன்றை ஒன்று மிஞ்ச முயன்றன. இந்தச் சந்தடி சகிக்காமல், அக்கம் பக்கத்து ஜனங்களெல்லாம் காதைப் பொத்திக்கொண்டு அவதிப்பட்டார்கள்.

இந்த விஷயத்தைப்பற்றிக் கேள்வியுற்ற போலீஸ் கமிஷனர் சத்தத் தடைச் சட்டத்தைத் தயாரித்தார். சட்டம் பிறப்பித்த பின்பு, நிர்த்தாட்சிண்ணியமாய் அதை அமல் செய்தார்கள்.

முதலில் நகர மக்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்துச் சிறிது கூச்சல் போட்டார்கள். "மூன்று டாலர் முதல் பதினெரு டாலர் வரைக்கும் அபராதம் போடுகிறுர்களே; என்ன அநியாயம்!" என்றுர்கள். "ஹார்ன் வைத்துக் கொள் என்கிறது ஒரு சட்டம்; ஹார்ன் அடிக்காதே என்கிறது இன்னெரு சட்டம். இதென்ன நியாயம்!" என்று வாதித்தார்கள்.

சிறிது காலத்தில் இந்தப் புகாரெல்லாம் ஓய்ந்தது. சந்தடி யற்று நகரம் நிம்மதியாக இருப்பது கண்டு மக்கள் மகிழ்ச்சியுற்றுர்கள். சத்த எதிர்ப்புச் சட்டத்தை மீறுவோரின் எண்ணிக்கை குறைந்தது. "சத்தம் போடாதே!" என்று போலீஸார் ஓயாமல் எச்சரிக்கிறுர்கள். வருஷத்தில் சுமார் இருநூறு பேர்தான் இந்தச் சட்டத்தின் கீழ்க் கைதாகிறுர்கள்.

வீட்டு வாசலில் வந்து நின்று காதலியையோ, மீன் பிடிக்கும் தோழனையோ கூப்பிட ஹாரன் அடிப்பது சிலர் வழக்கம். சில பேர் சாதாரண ஹாரன், எலெக்ட்ரிக் ஹாரன் இரண்டையும் ஷோக்குக்காகத் தங்கள் கார்களில் வைத்துக்கொண்டு அடிப்பது வழக்கம். சங்கீதமாகக் கோஷிக்கும் ஹாரன் வைத்திருப்பவரும் உண்டு. இவர்களுக்கெல்லாம் இப்போது தடை போட்டிருக்கிறார்கள்.

ஸைக்கிள்களில் 'ஸைரென்,' 'விஸில்' முதலிய ஊதல்கள் வைத்திருக்கக்கூடாது. ஆஸ்பத்திரிகளுக்கருகே அற்பச் சந்தடியும் எழுப்பக்கூடாது. ஆகாய விமானங்கள் 2,000 அடிக்கு மேலேதான் பறக்கவேண்டும்.

'மெம்ஃபிஸ்' என்பது எகிப்து நாட்டுப் பெயர். (அங்கே நைல் நதிக் கரையில் இன்றைய கெய்ரோ நகருக்குப் பத்து மைல் தெற்கே இருந்த தலைநகரத்துக்கு 'மெம்ஃபிஸ்' என்று பெயர்; 'நல்ல வாசஸ்தலம்' என்பதே இந்தப் பெயருக்கு அர்த்தம். தென்னமெரிக்க மெம்ஃபிஸ் நகர மக்கள், இந்தப் பெயருக்குரிய பெருமையோடு இன்று வாழ்கிறார்கள். அவர்கள் பெருஞ் சத்தம் போடுவது எப்போது தெரியுமோ? 'எங்கள் நகரில் சத்தமே கிடையாது' என்று பெருமையோடு சொல்லும்போதுதான்.

ட்ரூமன் தமாஷ்

மாஜி ஜனாதிபதி ஹாரி ட்ரூமன், வாஷிங்டன் மாகாணத்து மாஜி கவர்னர் மான் வால்க்ரென் இரண்டு பேருக்கும் மிகுந்த நட்பு. வால்க்ரென் ஸ்வீடன் நாட்டிலிருந்து வந்து குடியேறிய ஒரு வம்சத்தைச் சேர்ந்தவர். தம் மாகாணமான வாஷிங்டன், தம் பூர்விக நாடான ஸ்வீடன் இரண்டையும்பற்றி அவர் எப்போதும் பெருமை அடித்துக்கொள்வார். ட்ரூமன் மிஸ்ஸௌரி மாகாணத்தைச் சேர்ந்தவர்.

ஒரு சமயம் ஜனாதிபதியின் வொயிட் ஹவுஸ் மாளிகையில் நடந்த ஒரு விருந்துக்கு வால்க்ரென் வந்திருந்தார். மற்ற விருந்தாளிகளைப் பார்த்துக் கண்ணடித்தபடி, ட்ரூமனை நோக்கி, "ஜனாதிபதி அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம்: மிஸ்ஸௌரி மாகாணத்துக்குக் கழுதைகளே கிடைத்திருக்கின்றன; வாஷிங்டன் மாகாணத்துக்கு ஸ்வீடிஷ்காரர்களே கிடைத்திருக்கிறார்கள். இது ஏன்?" என்று கேட்டார்.

ஜனாதிபதி ட்ரூமன் உதடு நலுங்காதபடி, "ஏனென்றால், மிஸ்ஸௌரி முதல்முதலில் தேர்ந்தெடுத்துக்கொண்டு விட்டது" என்றார்.

—'காரொனெட்'

படிக்காத சர்ச்சில்

நான் கல்லூரிப் படிப்போ, தொழில் படிப்போ படித்ததில்லை. போகிற போக்கில் ஏதோ சில விஷயங்களைப் படித்தேன்; அவ்வளவே.

—வின்ஸ்டன் சர்ச்சில்

நோயற்ற வாழ்வுக்கு வழி, உணவிலே
ஜாக்கிரதை வேண்டும்.

திரிதோஷங்களும் உணவும்

பி. வி.

பஞ்ச பூதங்களால் ஆனது நம் உடல். அவற்றில், வாதம் உடல் முழுவதிலும் - ரத்தம், மாமிசம் எலும்பு ஆகிய எல்லாவற்றிலும் - பரவியிருப்பது. மிக நுண்ணிய அவயவங்களிலும், காலிலிருந்து தலைவரையிலும் ரத்த ஓட்டம் நடைபெறுவதற்கு வாதத்தின் வேகமே துணை செய்கிறது.

ஆனால் இந்த வாதம் அல்லது வாயு உடம்புக்கு வேண்டிய அளவுக்குமேல் இருந்தால் நோய் வந்துவிடும். அப்பொழுது அதிகப்படி வாயுவைக் குறைத்து உடம்பைச் சம நிலையில் வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

ஒரு தாய், கர்ப்பகாலத்தில் தன் உடலில் இந்தக் கப வாத பித்தங்களில் எதை உடலில் அதிகமாகக் கொண்டிருக்கிறாளோ, அதே அளவில் குழந்தையின் உடலிலும் அந்தப் பொருள் இருந்துவிடுகிறது. வாதம் அதிகரித்த தாயின் வயிற்றில் ஊறிய குழந்தை தன் உடலிலும் வாத குணத்தை அதிகமாகக் கொண்டிருக்கும். இப்படிப்பட்டவர்கள் ஆகாரத்தாலும் வாதத்தை விருத்தி செய்துகொண்டால், பல வாத நோய்களால் அவதிப்படுகிறார்கள். இந்த உடலுக்குச் சூடு உண்டாகும்படி செய்வது பித்தம். நம் உடலில் இருக்கும் இயல்பான சூட்டையே பித்தம் என்கிறோம். நாம் உடலைப் போஷிக்கச் சாப்பிடும் உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் ஜீரணிப்பது பித்தமே. பித்தம் அல்லது ஜாடராக்கினி ஒழுங்கு தவறாமல் இருந்தால், ஜீரண சக்தி, தாகம், பசி, அழகு, அறிவாற்றல் எல்லாவற்றையும் வளர்க்கிறது. எந்தக் காரணத்தாலாவது உடலில் பித்தம் அதிகரித்தால் நோய் உண்டாகிறது. உடலில் பித்தம் குறைந்தாலும் அப்படியே ஆகும். ஜீரணசக்திக்கு ஆதாரம் பித்தம்; ஆகையால், உடலில் பித்தத்தின் ஓட்டம் தடைப்பட்டால் ஜீரணக் கருவிகளில் கடுமையான நோய் உண்டாகும்.

பஞ்ச பூதங்களில் நீரும் ஒன்று. இது உடல் முழுதும் பரவி, சுபாவமாய் மிருதுவாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும். எலும்பு, சதை, கொழுப்பு, மஜ்ஜை, ரத்தம் முதலியவற்றில் காணும் குளிர்ச்சியைக் கபம் என்கிறோம். இது வயிற்றில் தங்கி நாம் சாப்பிடும் உணவை மாவுபோல் மசிக்கிறது. உடலின் பல்வேறு பகுதிகளில் கபம் பல்வேறு செயல்களை நடத்துகிறது. அது கூடியோ குறைந்தோ காணப்பட்டால் உடலில் பல நோய்கள் தோன்றுகின்றன.

வாதபித்த கபங்கள் மிகுந்து அவை உடலுக்குக் கேடு செய்யும் சமயத்தில், அவற்றை ஒரே சொல்லில் 'திரிதோஷம்' என்பார்கள். ஒரு வகையில் மனித உடலுக்கு

மூலம்: பிரகிருதி (தெலுங்கு), விஜயவாடா.

வாத பித்த கபங்கள் அவசியமாக இருப்பதால் அவற்றைத் தாதுக்கள் என்றும் சொல்லுகிறார்கள். உடலில் நோய் இல்லாமல் சுயேச்சையாக நாம் நடமாடவேண்டுமென்றால், வாத பித்த கபங்கள் சமநிலையில் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

வாத உடல்காரர் என்பதற்கு அடையாளம்: சாதாரணமாக இவர்கள் கடினமான ஒற்றை நாடி உடல் உள்ளவர்கள்; தூக்கம் வராமல் கஷ்டப்படுவார்கள். பேசுவதில் திறமை, நல்ல திடமான கொள்கை, அற்பக் காரணத்துக்குக் கோபித்தல், பயம், அதிருப்தி, ஞாபகக் குறைவு, பொறுமையின்மை, வெடுவெடுத்தல் முதலியவை இவர்களிடம் அமைந்திருக்கும். இவர்கள் தலையிலும் உடலிலும் ரோமங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் தெரியும். இவர்கள் குளிர் தாங்கமாட்டார்கள். நடக்கும்போது கீல்களிலிருந்து 'கிர்' 'கிர்' என்று சத்தம் கேட்கும். வாதம் மிக அதிகமானால் முகம் வறண்டுபோகும். நாக்கில் உப்புக் கரிக்கும். சிறுநீர் சிவப்பாக இருக்கும். இவர்கள் தூக்கத்தில் ஆகாயத்தில் எழும்பிப் பறப்பதுபோல் சொப்பனம் காண்பார்கள்.

உணவு: வாதத்தை அதிகரிக்கச் செய்யும் பொருள்களை விட்டுவிடவேண்டும். துவர்ப்பு, கசப்பு, மிகக் காரமான உணவுகள், புழுங்கல் அரிசி, பிஸ்கோத்து, கள், ரொட்டி முதலியவற்றையும் குளிர்ச்சியான உணவுகளையும் உண்ணக் கூடாது. உலர்த்திய கீரைகள், காய்ந்த மாமிசம், வேர்க்கடலை, உளுத்தம் பருப்பு, அவரைப் பருப்பு, பட்டாணி, கடலைப் பருப்பு முதலியவற்றை முக்கியமாய் மழைக்காலத்தில் விட்டுவிட வேண்டும். தித்திப்பு, புளிப்பு, உப்புச் சேர்த்த பண்டங்களையும் நெய், துவரம் பருப்பு முதலிய எண்ணெய்ப் பொருள்களையும் இவர்கள் உபயோகிப்பது நலம். சாப்பிடும் உணவு சூடாக இருக்க வேண்டும். பட்டினி கிடக்கக் கூடாது.

பித்த உடல்காரர்களின் அடையாளம்: இவர்களால் உஷ்ணத்தைத் தாங்க முடியாது. இவர்களுக்கு ஏராளமாக வேர்வை விடும். குளிர்ந்த உணவுகளின்மேல் அதிக ஆசை இருக்கும். சாதாரணமாக, இவர்களுடைய உள்ளங்கை, உள்ளங்கால், கண்கள் ஆகியவற்றில் எரிச்சல் இருக்கும். இவர்களுக்குப் பசிதாகம் அதிகமாக இருக்கும். இவர்களுடைய தலைமயிர் பொன்னிறமாய் இருக்கும்; தலையில் வழுக்கை விழுந்திருக்கலாம். மயிர்க்கால்கள் தேய்ந்திருக்கும். இவர்கள் வருந்தி வேலை செய்ய இயலாத மென்மையான உடலை உடையவர்கள். கோபம் வந்தபோதும் வெயிலிலும் இவர்களுடைய கண்கள் சிவந்து விடும். இவர்களுக்குச் சிரங்கு, சொறி போன்ற சரும நோய்கள் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுக்கும். இவர்கள் உடம்பில் மச்சம் நிறைய இருக்கும். பித்தம் தலைக்கேறினால் வாய் புளிக்கும்; சிறுநீர் மஞ்சளாக இருக்கும். வேர்வை நாறும். இவர்கள் கனவில் நெருப்பையும் ஒளியுள்ள பொருள்களையும் காண்பார்கள்.

உணவு: சரியான காலத்தில் சாப்பிடாததாலும், துவர்ப்பு, கசப்பு, உப்புப் பொருள்களைத் தின்பதாலும், கள், சாராயம் குடிப்பதாலும் எண்ணெயில் வதக்கிய கறி

காய்களை உண்பதாலும் பித்தம் அதிகரிக்கும். நல்லெண்ணெய், கிராம்பின் இலை, மீன், ஆட்டு மாமிசம், புளித்த தயிர், தயிரில் தெளிந்த நீர், வெண்ணெய் எடுக்காத மோர், புளிப்பு உள்ள பழங்கள், சூடாக இருக்கும் உணவு இவை எல்லாம் பித்தத்தை மிகுதியாக்கும்; மிக ஆபத்தை உண்டாக்கும். இவற்றைக் கட்டாயம் நீக்கவேண்டும்.

கபம் அதிகம் உள்ளவர்கள்: இவர்கள் சாந்தமாக இருப்பார்கள். தலையில் மயிர் அடர்ந்திருக்கும். சிறு தூக்கமும் சோம்பேறித்தனமும் இருக்கும். போதும் போதாமல் குறைவாய்ச் சாப்பிட்டாலும் இவர்கள் உடம்பில் கொழுப்பு உற்பத்தி ஆகும். உடல் வருந்த வேலை செய்தாலும் இளைப்படைய மாட்டார்கள். கபம் மேல் நோக்கியபோது, ஜீரண சக்தி குறைந்து வாய் தித்திப்பாகவும் உப்பாகவும் இருக்கும். இவர்கள் கனவில் நீர்நிலை முதலியவற்றைக் காண்பார்கள்.

உணவு: தித்திப்பு, புளிப்பு, உப்பு, காரம், குளிர்ச்சி இவை உள்ள உணவைச் சாப்பிட்டால் கபம் (இருமல்) அதிகரிக்கும். பார்லி, கோதுமை, துவரை, அவரைப் பருப்பு, தயிர், பால், தித்திப்புக் கலந்த அன்னம், தாளித்த சாதம், வெல்லம், வாழைப் பழம், பப்பாளி, சுரைக்காய் இவற்றை விலக்க வேண்டும். கசப்புப் பொருள், முறைப்படி சாப்பாடு, உடல் பயிற்சி, உபவாசம், சூடான பண்டங்கள் இவை இவர்களுக்கு நன்மை செய்யும்.

மேலே சொன்ன மூன்று தாதுக்களின் இந்த அறிகுறிகளை அறிந்து பத்தியத்தை அநுசரிக்க வேண்டும். வாத பித்த கபங்கள் கலப்புள்ள மனிதர்கள் அதற்குத் தகுந்தபடி கலப்பு உணவு சாப்பிட வேண்டும்.

இங்கே மற்றொரு விஷயமும் சொல்ல வேண்டியிருக்கிறது. இளமையில் கபமும் முதுமையில் வாதமும் அதிகரிக்கும். நோய் வராமல் தடுக்கத் தம் தம் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவையே எவரும் சாப்பிட வேண்டும். மருந்து சாப்பிடுவதைவிட உணவு சாப்பிடுவதைக் கவனித்து ஒழுங்கு படுத்திக்கொண்டு, இயற்கையை ஒட்டி வாழப் பழக வேண்டும். அப்போது முதுமையிலும் கூடத் தாது விருத்தியுடனும் பலத்துடனும் நீடித்து வாழலாம்.

உணவு விஷயத்தில் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுபவர்கள் தம் வாழ்க்கையில் கூடிய மட்டும் திரிதோஷத்தின் பிடியிலிருந்து விடுபடுவார்கள். நம் உடலுக்கு ஒவ்வாத உணவைச் சாப்பிடுவதால் ஆரோக்கியம் கெடுகிறது. நாக்குக்கு அடிமைப் படுகிறோம். உசிதம் இல்லாத நாகரிகத்துக்கு அடிகோலி அதன் பலனாக அற்பாயுளையும் தேடிக் கொள்கிறோம். இயற்கை வாழ்க்கை, நோயிலிருந்து நம்மை விடுவிக்கும்.

கல்வி என்பது என்ன?

பள்ளியிலே நாம் கற்றதையெல்லாம் அடியோடு மறந்து போன பிறகு மிஞ்சுவதுதான் கல்வி.

—லார்டு ஹாலிஃபாக்ஸ்



அபூர்வப் பாலங்கள்

★

பெரிய பெரிய ஆறுகளையெல்லாம் கடக்க ஓடங்களும் பரிசல்களுந்தான் மிகப் பழங்காலத்தில் உதவின. பாலங் கட்டத் தொடங்கிய பிற்காலத்தில், அந்தக் கலை பெரிதும் வளர்ந்திருக்கிறது. லண்டன் 'தி டெய்லி டெலிகிராஃப்' பத்திரிகையில் ஸர் டொனல்டு பெய்லி என்பவர் எழுதியிருப்பதன் சுருக்கம் இது.

பாலங்களைப் பல இடங்களில் பார்க்கிறோம். அன்றாடம் நம்மைச் சுற்றிப் பார்க்கிற பல பொருள்களைப்போல் அவையும் சர்வசகஜமாகவே நமக்குப் படுகின்றன. ஆகவே, அவைகளைப்பற்றி யாரும் பிரமாதமாக எண்ணுவதில்லை.

'இவ்வளவு பெரிய பாலத்தை எப்படி அமைத்தார்கள்? இது பின்னால் நீடித்து வண்டிப் போக்குவரத்தின்போது இன்ன அளவு பாரமாவது தாங்குமா?' என்றெல்லாம் சாதாரண மக்கள் யோசிப்பதில்லை.

அவர்களுக்கு வேண்டியது இதுதான்: தாம் சௌகரியமாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போய்வரப் பாலம் ஒன்று இருந்தால் போதும். அதைக் கட்ட எடுத்துக்கொண்ட சிரமம், அதைக் குறித்து ஆராய்ந்து திட்டமிட்டது இதைப் பற்றியெல்லாம் அவர்கள் அக்கறைப்படுவதில்லை.

ஆனால் யுத்த காலத்திலோ, வெள்ளம், பூகம்பம் ஏற்படும் போதோ பாலம் இடிந்துவிட்ட பிறகுதான் அது எவ்வளவு அவசியமானது என்று அவர்களுக்குத் தெரிகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட், "பாலம் கட்டுவதென்றால், அது ஒரு நாட்டின்

நாகரிகத்தைக் குறிக்கும். அதிலிருந்து அங்கே உள்ள மக்கள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் உணரலாம்'' என்று ஒரு சமயம் சொன்னார்.

ஆதியில் பாலம் எப்படி ஏற்பட்டது என்பதை ஆராயும்போது ஷெர்லி ஸ்மித் என்ற ஆசிரியர் பல ரசமான தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு மரமோ பெரும் பாறையோ வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வருகிறது. கடைசியில் இது ஆற்றுக்குக் குறுக்காகத் தங்கி, ஆற்றைக் கடக்க உதவுகிறது. இதுவே ஆதிகாலத்து இயற்கைப் பாலம். பின்னால் ஆதி மனிதன் சில தொழிற் கருவிகளைக் கண்டுபிடித்தான்; அப்போது மரம், கல் போன்ற இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டான். நாளடைவில் இப்போது நாம் காண்பதுபோன்ற பெரிய பாலங்களை அமைக்கத் தெரிந்துகொண்டான்.

ரோம் சாம்ராஜ்யம் ஓங்கியிருந்த காலத்தில் டிராஜன் சக்கரவர்த்தி, கெயஸ் ஜூலியஸ் லேசர் என்ற சிற்பியை அழைத்து, டாகஸ் ஆற்றில் ஒரு பாலம் கட்டச் சொன்னான். அதைக் கட்டி முடித்ததும் அந்தச் சிற்பிக்குப் பெருமை தாங்கவில்லை: ''இதோ நிரந்தரமாக ஒரு பாலம் கட்டிவிட்டேன்!'' என்று சொன்னான். 2,000 ஆண்டுகளாகியும் இன்றும் அவன் கட்டிய அந்த அல்காண்டாரா பாலம் அப்படியே இருக்கிறது.

முன் காலத்தில் சர்ச்சுகளில் வாழ்ந்த பாதிரிமார்களேகூடக் கட்டிடம் கட்டுவதில் ஈடுபட்டு வந்தார்கள். சர்ச்சுகளில் மாடம் முதலியவை அமைக்கும்போது மிகவும் பொறுமையாக இருந்து வேலை செய்வார்கள். பிரிட்டனிலும் ஐரோப்பாவில் மற்ற நாடுகளிலும் முன்னெல்லாம் இவர்களே பாலங்களை அமைத்து வந்தார்கள்.

பழைய லண்டன் பிரிட்ஜ் என்ற பாலம் ஒரு காலத்தில் பாதிரிமார்கள் கட்டியதுதான். எத்தனையோ யுத்தங்கள், தீ விபத்து எல்லாம் நேர்ந்தும் அது இன்னும் இருக்கிறது. அதைக் கட்டிய பீட்டர் என்பவர் அந்தப் பாலத்திலேயே ஓர் இடத்தில் புதையுண்டதாகத் தெரிகிறது.

நாளடைவில் மரத்துக்குப் பதில் கெட்டி இரும்பையும், வளையக் கூடிய இரும்பையும், பிற்காலத்தில் எஃகையும் பாலங் கட்ட உபயோகிக்கலானார்கள். இதனால் பெரிய பெரிய பாலங்கள் அமைக்க முடிந்தது.

ஆயினும் பாலம் கட்டும் கலையறிவு அபிவிருத்தி அடைய வெகு காலமாயிற்று. பாலங் கட்ட உபயோகித்து வந்த பொருள்களும் முதலில் நீடித்திருக்கும்படியாக அமையவில்லை.

இது சம்பந்தமாக 1716-இல் பிரான்ஸில் 'கோர் டி பாண்ட்ஸ் எட் சாஸீஸ்' என்ற ஸ்தாபனத்தார் விஞ்ஞான முறையில் ஒழுங்காகப் பாலம் இன்னபடி அமைய வேண்டும் என்று வகுத்தார்கள். அதுமுதல் பால அமைப்பு முறை சீர்பெற்று வருகிறது. இன்று அது அபாரமாக முன்னேறி விட்டது.

இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பாலங்களும் கால்வாய்களும் கட்டுவது, பாட்டைகள் போடுவது இவைபற்றிப் பல

திட்டங்களையும் அமைப்புக்களையும் நன்கு பரிசீலனை செய்தே அவற்றுக்கு அநுமதி அளிப்பது வழக்கம். இந்தப் பொறுப்புக்குத் தகுதியுள்ளவர் என்பதற்காக, இவர்கள் ‘எகோல் டி பாரிஸ்’ என்ற கலைநிலையத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இதேமாதிரி 1820-இல் இங்கிலாந்திலும் சிவில் எஞ்சினீர்கள் ஸ்தாபனம் ஒன்று ஏற்பட்டது. அதற்குத் தாமஸ் டெல்ஃபோர்டு என்ற பிரபல எஞ்சினீர் தலைவரானார். (இவர் மேனாய் ஸஸ்பென்ஷன் பிரிட்ஜ் என்ற தொங்கும் பாலம் ஒன்றைக் கட்டிப் பிரசித்தி பெற்றவர்.) இன்றும் அந்த ஸ்தாபனம் சிறந்து விளங்குகிறது.

ரெயில் பாதைகள் ஏற்பட்டதும் ஏராளமான பாலங்கள் கட்ட வேண்டியதாயிற்று. 70 ஆண்டுகளில் 25,000 பாலங்கள் இப்படி அமைத்தார்கள் என்றால் எஞ்சினீர்களின் சாதனையைப் பாராட்ட வேண்டியதுதானே? ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தச் சமயத்தில் சில பாலங்கள் இடிந்து விபத்துக்களும் நேர்ந்தன. இப்படித்தான் 1879-இல் ஒரு நாள் இரவு ‘டே பிரிட்ஜ்’ என்ற பாலத்தை எடின்பரோ மெயில் கடந்துகொண்டிருக்கும்போது பெரிய விபத்து நேர்ந்தது. தூரத்திலிருந்து பார்த்தவர்கள் இருளில் வான் நட்சத்திரம் போல் தீப்பொறி பறக்க ரெயில் வண்டியும் பாலமும் ஒரே மொத்தமாக ஆற்று நீரில் மறைவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்கள்.

காற்று வேகம் காரணமாகவே இந்த மாதிரி விபத்துக்கள் நேர்ந்தன. அதுவரை நடந்த விபத்துக்களில் இதுதான் மிகப் பெரியது. இதற்குப் பிறகு காற்று வேகம் சம்பந்தமாகத் தீவிரமாய் ஆராயலானார்கள்.

சமீப காலம் வரையில் இதைத் தடுக்கச் சரியான முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டாகிவிட்டது என்றுதான் எண்ணி வந்தார்கள் எஞ்சினீர்கள். ஆனால் 1940-இல் ஐக்கிய அமெரிக்காவில் டகோமா என்ற இடத்தில் 2,800 அடி நீளம் உள்ள தொங்கும் பாலம் ஒன்று முறிந்து விழுந்துவிட்டது. கட்டிய நாலாம் மாதத்தில் மெல்லிய காற்று வீசும்போதே இந்தப் பாலம் ஆடத் தொடங்கி, முறிந்து விட்டது.

ஏரோப்ளேனில் ‘விங்’ (இறக்கை) என்ற பாகம் அமைக்கும்போது காற்று ஓட்டத்துக்கு ஈடு கொடுக்கும்படி சில சாதனங்கள் இருக்கும். அதே முறையில் பாலங்களிலும் காற்றுப் புகுந்து செல்லும் ‘டன்னல்’களை அமைக்க வேண்டியிருந்தது.

உலகின் பல பாகங்களில் அநேகம் பாலங்களைப் பிரிட்டிஷ் எஞ்சினீர்களும் கண்டிராக்டர்களும் அமைத்துப் புகழ் பெற்றிருக்கிறார்கள். இப்படிப் பிரபலமான பாலங்களில் சில, சென்ற நூற்றாண்டில் டெல்ஃபோர்டு கட்டிய மேனாய் பாலமும், ஸால்டாஷ் பாலமும், சமீப காலத்து எஞ்சினீர்கள் கட்டிய ஃபோர்த் பாலமும், ஸிட்னி துறைமுகப் பாலமுமாகும்.

இவை தவிர, இன்னும் அநேகம் பேருக்குத் தெரியாத சிறந்த பாலங்களும் உண்டு. இவற்றில் இந்தியாவில் (1500 அடி கொண்ட கண் உள்ள) ஹாவுரா பாலம், ஆப்பிரிக்காவில் $2\frac{1}{4}$ மைல் நீளத்தில் 33 கண்களுள்ள ஜாம்

பெஹி பாலம், டென்மார்க்கில் உள்ள (உலகிலேயே) மிக நீளமான ஸ்டார்ஸ்ட்ராம் பாலம் இவை குறிப்பிடத் தக்கவை.

ஐக்கிய அமெரிக்காவில் ரோப்ளிங் என்பவரும் அவர் மகனும் சேர்ந்து, தொங்கும் பாலங் கட்டும் முயர்சியில் முதல் முதலாக ஈடுபட்டுப் பெயர் எடுத்தவர்கள். இங்குள்ள பாலங்கள் பிரம்மாண்டமாக இருப்பதோடு அழகாகவும் கம்பீரமாகவும் அமைந்திருக்கின்றன. இவற்றில் ரோப்ளிங் கட்டிய ப்ரூக்ளின் பாலம் குறிப்பிடத் தக்கது. இதில் 1,600 அடி கொண்ட பெரிய கண் ஒன்று இருக்கிறது. அந்தக் காலத்தில் கட்டிய பாலங்களில் இது மிகப் பெரியதாகும். பணத் தட்டுப்பாடு, அதிகாரிகள் செய்த இடையூறு, இயற்கையினால் ஏற்பட்ட தடை இப்படிப் பல காரணங்களால் சிரமப்பட்டு 16 ஆண்டுகளில் தந்தையும் மகனும் கட்டி முடித்த பாலம் இது. இதே கவலையில் தந்தை இறந்து போனார்; மகனின் உடல் நிலை மிகவும் குன்றிவிட்டது.

இன்று உலகத்திலேயே மிகப் பெரிய கண் கொண்ட பாலம் ஸான் ஃபிரான்ஸிஸ்கோவில் உள்ள கோல்டென்கேட் பிரிட்ஜ். இதில் நடுவில் அமைந்த கண் 4/5 மைல் நீளமுள்ளது. 6 வண்டிகள் தாராளமாகப் போய் வரும்படி அகலமாக இருக்கிறது. எஃகினால் செய்த 36½ அங்குல கனமுள்ள கெட்டிக் கம்பிகள் இரண்டு இதைத் தாங்குகின்றன. 80,000 மைல் நீளமுள்ள 'வொயர்'களைக் கொண்டு தயாரானவை இந்தக் கெட்டிக் கம்பிகள்.

இன்னும் பெரிய பெரிய கண்கள் அமைத்துப் பாலம் கட்டப் பெரு முயற்சிகள் நடந்துதான் வருகின்றன. பிரிட்டனில் உள்ள ஸெவெர்ன், ஹம்பர் என்ற ஆறுகளின்மேல் பாலம் அமைக்கத் திட்டமிட்டு வருகிறார்கள். பாலத்தில் கண்களை அமைக்கும்போது எவ்வளவு தூரம் பாலத்தின் பளுவை அவை தாங்கி, போக்குவரத்து வண்டி முதலியவற்றின் கனத்தையும் தாங்கும் என்று முன்னமே நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும். இதைவிடச் சற்று அதிகமானாலும் வண்டிப் போக்கு வரத்தின்போது பாலம் தாங்காது. ஆகவே, கனம் தாங்குவதற்கேற்ற உறுதி உள்ள பொருள்களையே பாலங்கட்ட உபயோகிக்க வேண்டும். இப்படிப்பட்ட உறுதியுள்ள எஃகை உற்பத்தி செய்யும் துறையில் பெரிதும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அலுமீனியம் கலந்த உலோகப் பொருள் ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். சாதாரண எஃகைவிட இது உறுதியானது; அதுவுமன்றி, இதன் கனம் எஃகின் கனத்தில் மூன்றில் ஒரு பாகமே இருக்கிறது. பிரிட்டனிலும் கனடாவிலும் இதைப் பாலங் கட்டப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தொங்கும் பாலங்களின் அடிப்பாகத்தில் உள்ள 'கர்டர்'களை இழுத்து உறுதியாக நிறுத்த இந்த மாதிரி அலுமீனியக் கலப்பு உலோகத்தைப் பயன்படுத்துவது நலம் என்று தெரிகிறது. சாதாரணமான பாலங்களில் கண்களை அமைக்கும்போது 'ரீ-இன்ஃபோர்ஸ்டு கான்கிரீட்', 'ப்ரீ-ஸ்ட்ரெஸ்டு கான்கிரீட்' இவைகளை உபயோகிக்கலாம்; செலவும் குறையும்; கட்டிட அமைப்புக்கும் வசதியாயிருக்கும்.

குண்டோதரனைப்போல் வந்ததையெல்லாம்
விழுங்கும் ஒரு பிராணி இது.

குளத்து ராட்சசன்

ஹ்யூ எம். ஹாலிடே

அந்தி பங்கல். உள்ளூரில் எங்கோ ஏரிக்கால் பக்கம் தங்கியிருக்கிறோம். அங்கே சேறு படிந்து தேங்கியிருக்கும் கரு நீரின்மேல் அல்லி இலைகள் பச்சைப் பசேல் என்று பளபளக்கின்றன. அப்போதுதான் ஏதோ 'ட்ரம் ட்ரம்' என்று கத்தத் தொடங்குகிறது. நமக்கும் தண்ணீருக்கும் நடுவில் புதரில் இருக்கும் இந்த ஜந்து எப்படி இருக்கிறது என்று பார்க்கத் தோன்றுகிறது. மறுபடியும் 'ட்ரம் ட்ரம்' என்று இதன் குரல் கேட்கிறது. "இங்கே வந்தாயானால் இதில் மூழ்க வேண்டியதுதான்" என்று முன்னெச்சரிக்கை செய்வதுபோல் இருக்கிறது அந்தக் குரல்.

சற்றுத் தள்ளி நாம் தங்கியிருக்கும் கூடாரத்துக்குப் போகிறோம். அப்போதும் அந்தச் சத்தம் ஓய்வதில்லை; இரவு முழுதும், 'ட்ரம்', 'ட்ரம்' என்று கேட்டுக்கொண்டேயிருக்கிறது. சேற்றில் வாழும் பச்சைத் தவளைதான் இப்படிக் கத்துகிறது. ஆங்கிலத்தில் 'புல்-ஃப்ராக்' (காளைத் தவளை) என்று இதற்குப் பெயர். அதற்குக் காரணம், காளை கூவுவது போல் இதுவும் கத்துவதுதான். "இந்தக் கிழச் சோம்பேறிக்கு ஒரு குடம் கள் (எ ஜக் அவ் ரம் ஃபார் அன் ஓல்டு பம்)," "இன்னும் கள் (மோர் ரம்)" என்று இது கத்துவதாகவும் சொல்வது வழக்கம். இந்த இனத்தில் மற்றவைகளைவிட மிகவும் பெரிதாயும் கொழுத்தும் அதிகமாகச் சோம்பியிருப்பது இந்தத் தவளைதான். இதற்கு எப்போதும் வெதுவெதுப்பு வேண்டும். 8 மாதகாலம் குளங்குட்டைகளின் அடியில் பாதி உறைந்து போன நிலையில் மூர்ச்சை அடைந்தது போல் இது கிடக்கும். இளவேனில் வந்ததும், மழைக்காலத்திலே பதுங்கியிருந்த இடத்திலிருந்து மற்றத் தவளைகள் எல்லாம் வெளியேறின பிரகுதான் இது நிதானமாக வெளிக்கிளம்பும். பனி உருகிக் காடுகளில் குட்டைகள் தோன்றும். அப்போது 'ஹைலாஸ்' என்ற சின்னஞ்சிறு தவளைகள் இலை சருகுகளின் மறைவிலிருந்து வெளி வந்து சேற்றில் மற்றப் பிராணிகளுடன்

காப்பிரைட்; அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 22-11-'53), கல்கத்தா.

சேர்ந்து கீதம் பாடிக் களிக்கும்.

கொட்டை கொட்டையாக விழித்துக்கொண்டு சிரிப்பை அடக்குவது போல் பெரிய பச்சைத் தவளை வாய் மூடிக் கிடந்தால், அது முதல் ஒரு வருஷ காலம் மறந்த் தவளைகளும் சரி, தேரைகளும் சரி, அதேபோல் கத்தாமல் சும்மா இருக்கும். சுற்றிலும் கிட்டத்தட்ட 80 டிகிரி உஷ்ணமாவது இருந்தால்தான் இது கத்தும். நீரின் உஷ்ணம் 65 டிகிரியாவது இருக்கவேண்டும். இது வயிறு புடைக்கச்சாப்பிடும். ஏதாவது நீர்க்கொடியின் அருகில் இதன் தலையும் தோள்பாகமும் மட்டுமே தெரியும். பூச்சி, மீன், குட்டி ஆமை, குட்டித் தவளை இப்படித் தன்னை விடச் சிறிய பிராணி ஏதாவது கிட்ட வந்ததோ இல்லையோ சடக்கென்று தன் நாக்கை நீட்டி அதை விழுங்கிவிடும். இதன் நாக்கில் ஒரு விதப் பசை இருக்கிறது.

அப்படி இப்படி ஏதாவது நகர்ந்தாலும் இதன் கண்ணில் பட்டுவிடும்; அப்புறம் வயிற்றுக்குள் தள்ள வேண்டியதுதான். முழு வளர்ச்சி அடையாத பருவத்தில் இது குப்பையையும் அழுக்கையும் உண்ணும்; ஆனால் பெரிதானவுடன் உயிரோடு இருக்கும் ஜந்துக்களைத்தான் உண்ணுவது வழக்கம். மிதப்பது சிவப்புக் கம்பளி சுற்றிய தூண்டிலாகக்கூட இருக்கலாம். சற்று அசைந்தாலும் போதும்; எந்த நிறமாக இருந்தாலும் இதற்கு அக்கறையில்லை. ஏதோ பூச்சி பொட்டு என்று எண்ணித் தண்ணீரைவிட்டு ஒரு தாண்டு தாண்டி அதன்மேல் பாய்ந்து ஒரே விழுங்கில் உள்ளே தள்ளிவிடும். பத்து அங்குல நீளத்துக்கு மேல் கூட இருக்கும் இதன் கால்கள். சில சமயம் இப்படித் தாண்டி மனிதர் கையில் சிக்கி வாணலியில் வறுபடுவதும் உண்டு.

தன் இனத்தைச் சேர்ந்த குட்டித் தவளையேகூட அருகில் வந்தாலும் இது சும்மா விடாது. வயிற்றில் தள்ளிவிடும். அதேமாதிரி, நீர் குடிக்க வரும் சிறு பறவைகளும் இதன் வாயில் சிக்குவதுண்டு. சில சமயம் இப்படி விழுங்கும்போது பறவைகளின் இறகும் கால்களுங்கூட இதன் வாய்க்கு வெளியே நீட்டிக்கொண்டு தெரியும். மெல்ல மெல்ல இது முன்னங்காலால் அவைகளைத் தொண்டைக்குள் தள்ளும். இதற்கு விலா எலும்புகள் இல்லை. ஆகவே, வயிறு வெடிக்கும் அளவுக்கு உண்ணும். சுவாசிக்கும்போது மற்றப் பிராணிகளைப் போல் இராமல், வயிறு நிரம்பக் காற்றை உட்கொள்ளும். நீரில் வெகு நேரம் இருக்கும். அப்போது வாயை மூடிக்கொண்டிருக்கும். ஆனாலும், தோலிலுள்ள நுண்ணிய துவாரங்களின் வழியே பிராணவாயுவை உட்கொள்ளும். சில சமயம் தரையில் 'ஐஸ்' மூடியிருக்கும் இடங்களில் சிறு துவாரம் ஏதாவது தெரியும். அதற்குள் கூர்ந்து கவனித்தால் இந்தத் தவளை மூன்று அல்லது நாலு அடி ஆழத்தில் இருப்பது தெரியும். அப்போதும் தோலின் வழியாகத்தான் இதற்கு வேண்டிய காற்று உட்செல்கிறது.

இளவேனில் முடிந்து கோடை வரும்போதுதான் இந்த வகையில் ஆண் தவளை தோலிலுள்ள விறைப்பு நீங்கி, பழைய வேர்களும் சத்தைகளும் சருகுகளும் கிடக்கும் சதுப்பான குளங் குட்டைகளருகில் இடம் தேடும்.

பொதுவாக, இது தனியாகத்தான் வசிக்கும். இதைவிடச் சிறிய தவளை அங்கே வந்தாலும் போதும்; இது சும்மா விடாது. அதை லபக் என்று விழுங்கிவிடும்: மூன்று அல்லது நாலு வார காலம் விரல் வீங்கும் வரை கத்திக்கொண்டிருக்கும். அப்பொழுது இந்த இனத்தில் பெண் தவளை ஏதாவது அங்கே வந்து சேரும்; பிறகு ஏதாவது குப்பைக் குழியில் கொள கொள என்று அதிரசம் மாதிரி ஒரு பொருளை இடும். இதில் 10,000 முதல் 20,000 வரை முட்டைகள் இருக்கும்.

நாலைந்து நாட்களுக்கெல்லாம் நீண்ட வாலுடன் தலை தட்டையாய்க் குட்டிகள் அந்த முட்டையிலிருந்து வெளிவரும். இவை குளக்கரையோரம் பாசியில் அப்படியும் இப்படியும் ஓடிக்கொண்டிருக்கும். இவற்றைப் பிடித்துத் தின்ன வரும் பிராணிகளுக்கோ குறைவில்லை. அப்படித் தப்பினாலும் சில சமயம் குளங் குட்டை வறண்டுவிட்டால் இவை சாக வேண்டியதுதான். இவை மட்டுமல்ல; பொதுவாகக் குளங் குட்டைகளில் வாழும் எல்லாச் சிறு பிராணிகளுமே இப்படிச் சாகத்தான் நேரும். அதிக நீர் இருக்கும் இடத்தில்தான் இந்தத் தவளை வாழும். நீரை விட்டு வருவதென்றால் இதற்கு மனசும் வராது.

மற்ற வகைத் தவளைக் குட்டிகள் ஏழெட்டு வாரத்தில் முழு வளர்ச்சி அடைந்துவிடும் என்றாலும், இந்தப் பெரிய தவளைமட்டும் முழு வளர்ச்சி பெறாமல் ஒரு வருஷம் - ஏன், இரண்டு வருஷங் கூட - அப்படியே இருக்கும். ஐந்தாறு அங்குல நீளத்திலிருந்து இது வளர்ந்து முழுத் தவளையாகிற வரையில் பார்க்க வேடிக்கையாக இருக்கும். அப்போதுதான் முதல் முதலாகப் பின்னங்கால்கள் தோன்றும். அப்போதும் இதைக் குட்டி என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் சில நாட்களுக்கெல்லாம் நாணிக் கூசிக் கண்மறைவாக எங்காவது ஒளிந்துகொள்ளும். இதற்கே தனக்குள் என்னவோ ஏதோ நேருகிறது என்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. அவ்வப்போது காற்று உட்கொள்ள மேலே வரவேண்டியிருக்கிறது. அப்போதுதான் சுவாசப்பை வளருகிறது; கன்னத்தின் உட்பாகத்தில் முன்னங்கால்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன; இந்த நிலையில் நீருக்குள்ளேயே இருப்பதென்றால் இதற்கு மூச்சுத் திணறுகிறது. சட்டென்று ஒரு நாள் கன்னத்தின் பக்கம் துவாரங்களிலிருந்து ஒவ்வொன்றாக முன்னங் கால்களை வெளியே நீட்டுகிறது. உடனே அந்தத் துவாரங்கள் அடைபட்டுவிடுகின்றன. அதுமுதல் பெரிய தவளை போல் சுவாசப்பை மூலமும் தோலிலுள்ள நுண்ணிய துவாரங்களின் மூலமுந்தான் இது வெளிக் காற்றைச் சுவாசிக்க முடியும்.

தவளைக்குட்டிகளாக இருந்தபோது தோன்றிய உறுப்புக்கள் சுருங்கி மறையும் அதே சமயத்தில், பெரிய தவளைக்குரிய உறுப்புக்கள் வெளிப்படுகின்றன. இந்தச் சமயத்தில் இதற்கு ஏதோ புதிய உலகில் புகுந்தது போல் எல்லாம் விநோதமாகப் படுகிறது. புது முறையில் இனி வாழத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. குளங் குட்டையோரம் அழுக்கைத் தின்று வாழ்ந்தபோது சின்னஞ் சிறியதாக இருந்த இதன் வாய்ப் பாகம் மிகப் பெரிதாக அகன்று

வருகிறது. வால் உள்ளுக்குள் சுருங்கிப் போகிறது. இதன் ரத்த ஓட்டத்தில் அது கலந்து பிற உறுப்புக்களை வளர்க்க உதவுகிறது. இப்படி இது மெல்ல மெல்ல முழுத் தவளையாக வளர்ந்து புதிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி வாழத் தெரிந்து கொள்கிறது.

குட்டியாக இருந்தபோது இதற்கு வால்தான் மிகவும் முக்கியமான உறுப்பு. அதனால்தான் நகரவும் பிற பிராணிகளிடமிருந்து தப்பியோடவும் முடிந்தது. அப்போது தப்பித் தவறி மீன் ஏதாவது அந்த வாலைக் கடித்துத் துண்டித்துவிட்டால், புதிய வால் வளர்ந்துவிடும். 'வால் போனாலும், ஆள் தப்பினால் போதும்' என்பது இது கண்ட அநுபவ சித்தாந்தம். வால் இல்லாவிட்டால் இது இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியுமா? மாறும்போது வால் சுருங்கி உடலுக்கு உணவாக அமைந்ததால்தான் இது பட்டினி கிடந்து சாகாமல் தப்ப முடிந்தது. நூற்றில் ஏதோ ஒரு தவளைக் குட்டிதான் கடைசியில் முழு வளர்ச்சி பெற்ற தவளையாக உயிர் வாழ்கிறது. இருந்தாலும், இந்தக் குட்டிகளின் தொகை ஏராளமாக இருப்பதால் மற்ற எதிரிப் பிராணிகளிடமிருந்து ஒரு சில குட்டிகளாவது தப்பி உயிர் வாழ முடிகிறது.

ஏரிகளிலும் கால்வாய்க் கரைகளிலும் வாழும் சில பிராணிகளுக்கு இந்தக் குட்டி உணவாகப் பயன்படுகிறது. இந்தப் பெரிய வகைத் தவளைக் குட்டியைப் பார்த்துவிட்டால் பெரிய மீன்களும் சரி, ரகூன், மிங்க் போன்ற சிறு விலங்குகளும் சரி, நாரை, வல்லூறு முதலிய பறவைகளும் சரி, இதைக் கொத்திக்கொண்டு போய்விடும். இதனால்தான் பாசி, நீர்க்கொடி, புதர் இவற்றின் மறைவில் இந்தத் தவளைக்குட்டிகள் பதுங்கி வாழ்கின்றன. ஏதாவது பிராணி கொத்த வந்தால் உடனே வாலை அடித்துக்கொண்டு சதுப்பு மண்ணில் நுழைந்து மறைந்துவிடும்.

முழு வளர்ச்சி அடைந்த பிறகு இது பின்னும் கூச்சத்துடன் மறைவாகவே இருந்து வரும். இரவில்தான் வெளியே வரும். ஒரு வருஷம் கழித்துத்தான் காளைக் குரல் எடுத்துக் கத்தத் தொடங்கும். இதன் நிறம் சூழ்நிலையில் அமைந்த பொருள்களையொத்து இருக்கும். ஆனாலும் பொதுவாக, மங்கிய பச்சை நிறமாக இருக்கும் எனலாம். ஆணாக இருந்தால், தொண்டைப் பாகம் நல்ல மஞ்சளாக இருக்கும்; பெண்ணின் தொண்டை மண் நிறமாக இருக்கும். நீந்துவதற்கு ஏற்றபடி இதன் கால்கள் அமைந்திருக்கின்றன. நூறு ஆண்டுகளுக்குமுன் நாம் மார்பில் கைபட நீந்தும் பழைய முறை, தவளை நீந்தும் ரீதியில்தான் அமைந்திருந்தது. நீரில் மூழ்கும்போதும் நீந்தும்போதும் இது கண்ணை மூடிக்கொண்டிருக்கும். ஆகவே, அடிக்கடி சுற்றிலும் என்ன இருக்கிறது என்று கவனிக்க இது நீர்மட்டத்துக்குமேல் வருவது வழக்கம்.

இந்தத் தவளை தொடர்ந்து காளைக் குரலெடுத்துக் 'கீதம்' பாடும்போது, வேகமாக ஓடும் ஆற்றுநீரின் சலசலப்போசையை நினைவூட்டும். மற்றத் தவளைகள் போல் இது கூட்டத்தில் சேர்ந்து குரலெடுத்துப் பாடுவதில்லை. தன்னந்தனியே நன்றாக மூச்சு இழுத்து வயிற்றை உப்பவைத்துக்கொண்டு பிறகு தொண்

டைக்குள் ஓர் உறுப்பு வழியாக அதை வெளிவிடும்; உடனே குரல் எழும்பும். சில சமயம் இதன் குரல் யாரோ ஆபத்தில் சிக்கி, 'ஐயோ! ஐயோ!' என்று கூவுவது போலக் கேட்கும். இதை யாராவது பிடித்துவிட்டால் போதும்; கத்து கிற கத்தலில் பிடித்த ஆள் பயந்து போய் இதை விட்டுவிடுவான்.

குளங்குட்டைகளில் இதை விடச் சிறுபிராணிகளுக்கு இதைக் கண்டால் நடுக்கந்தான். தன் இனம் என்றுகூட இது பார்க் காது. இதைப் பிடித்து மற்றத் தவளைகளோடு அடைத்துவிட் டால் பொழுது விடிந்து பார்ப்பதற் குள் அவையெல்லாம் இதன் வயிற் றுக்குள் போய்விட்டிருக்கும்.

சித்திரத்தின் பெருமை

'மார்ஸ் கோடு' என்று உலகெங்கும் இன்று வழங்கும் தந்தி சமிக்ஞை முறையை வகுத்த நிபுணர் ஸாமுவேல் எஃப். பி. மார்ஸ் என்பவர். தந்தி ஆராய்ச்சியில் ஈடுபடுவ தற்கு முன்பு, அவர் ஒரு பிரபல ஓவியராகவே இருந்தார்.

மரண வேதனையில் இருக்கும் மனிதனின் சித்திரம் ஒன்றை ஒரு சமயம் அவர் வரைந்தார். தமக்கு நண்பரான ஒரு டாக்டரிடம் அதைக் காட்டி, "இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

படத்தைச் சிறிது நேரம் மேலுங் கீழும் பார்த்தார் டாக் டர். பிறகு மிக உறுதியான குரலில், "அதில் ஒன்றும் சந்தேகமேயில்லை. மலேரியா" என்று சொன்னார்.

—'டைப்போ க்ராஃபிக்'

வழி காட்டிகள்

கம்பிமீது உலர்த்திய துணி காற்றிலே ஆடிக்கொண் டிருந்ததே பிரம்மாண்டமான ஜெப்பலின் விமானம் அமைக்க வழி காட்டியது.

தோட்டத்துப் பாதையின் குறுக்கே சிலந்தி கட்டி யிருந்த கூடே தொங்கும் பாலம் அமைக்க வழி காட்டியது.

அடுப்புமீது வைத்த டீ கெட்டில் பொங்கிக் கொந் தளித்ததே நீராவி எஞ்சின் அமைக்க வழி காட்டியது.

கோபுரம் ஒன்றில் தொங்கி ஊஞ்சலாடிக்கொண் டிருந்த ஒரு தீபமே பெண்டுலம் அமைக்க வழி காட்டியது.

மரத்திலிருந்து ஓர் ஆப்பிள் பழம் கீழே விழுந்ததே 'க்ராவிடி' என்ற ஆகர்ஷண சக்தியைக் கண்டுபிடிக்க வழி காட்டியது.

'என்னால் என்ன செய்ய முடியும்?' என்றோ, 'நான் செய் யும் அற்பக் காரியம் எதற்கு உதவும்?' என்றோ நீங்கள் எண்ணினால், இந்த விஷயங்களைச் சிந்தித்துப் பாருங்கள்.

—'டேல்ஸ் அவ் ஹாஃப்மான்'

சிருங்கேரி ஜாகீர்

நீல்கன் பெருமாள்

சிருங்கேரி சாரதாபீடம் ஆதிசங்கரர் ஸ்தாபித்தது; அரிய சேவை செய்து வருவது. இதற்குச் சொந்தமான ஜாகீரை ஒழித்துவிட மைசூர் சர்க்கார் முயல்கிறது. இந்தப் பீடம், ஜாகீர் இவைபற்றிய விவரங்களைத் தருகிறார் கட்டுரையாளர்.

மைசூர் ராஜ்யத்தில், அழகிய துங்கை நதிக்கரையில் இருக்கிறது சிருங்கேரி. இது சின்ன ஊராக இருந்தாலும் ஆதி சங்கரரின் பக்தர்கள் போற்றும் புனித ஸ்தலம். மிகவும் சிரமப்பட்டு உழுது பயிரிடும் பல கன்னடக் குடியானவர்களும் சாதுக்களும் வாழும் இடம். இந்தச் சாதுக்களில் சிலர் முன்பு இல்லறத்தில் ஈடுபட்டிருந்து பின்னால் சுகபோகங்களை வெறுத்துத் தள்ளி இங்கே முக்தி சாதனை செய்ய வந்தவர்கள்.

சென்ற 1,200 ஆண்டுகளாக இந்த ஊர் பிரசித்தி பெற்று விளங்குகிறது. கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த மதாசாரியரான ஆதிசங்கரர் தம் திக்விஜயத்தின்போது முதல் முதல் பிரதிஷ்டை செய்த நாலு பீடங்களில் இங்கே உள்ள சாரதா பீடமும் ஒன்று. நாசிகை, காசி, காலடி இந்த இடங்களில் மற்ற மூன்று பீடங்களும் அமைந்திருக்கின்றன. தம் அபாரமான அறிவு வன்மையாலும் ஒப்பற்ற வசீகரத் தோற்றத்தாலும் மக்கள் மனத்தைக் கவர்ந்தார்; பௌத்தர்களோடு வாதம் செய்து அவர்களை வென்று இந்து மதத்துக்குப் புத்துயிர் அளித்தார். பண்டித ஜவாஹர்லால் தாம் எழுதிய இரண்டு நூல்களில் சங்கரரைப்பற்றிச் சொல்லும்போது, "மிகவும் இளம் வயதிலேயே-35-ஆம் வயதிலேயே-அவர் காலமாகிவிட்டார். ஆனாலும் அதற்குள் இந்தியாவின் கலாசார ஒற்றுமைக்காக எவ்வளவு அரும்பாடு பட்டார்!" என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் சிருங்கேரியில் சந்திர மௌளீசுவர

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 31-1-'54), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

ஸ்வாமிக்கும் சாரதாம்பிகைக்கும் தனித் தனியே கோயில் அமைத்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த பீடாதிபதிகளில் சிலரும் இப்படிச் சில கோயில்களைக் கட்டுவித்தார்கள்.

இந்தப் பீடாதிபதிகளுக்கும் 'சங்கராசாரியர்,' 'ஜகத்குரு' என்ற பட்டம் உண்டு. இந்தப் பீடத்தில் 10-ஆம் சங்கராசாரியராக இருந்த வித்தியாசங்கரர் மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் ஏற்கனவே தெரிவித்தபடி இறுதியில் சமாதியில் ஆழ்ந்ததும் அதை மூடிக் கட்டிடம் எழுப்பிவிட்டார்கள். பல மாதங்கள் கழித்து அதைத் திறந்து பார்த்தபோது அதில் ஒரு லிங்கம்மட்டுமே இருந்தது! இவருக்குப் பின்னால் வந்த வித்தியாரண்யரும் பிரசித்தி பெற்றவர்தான். அவர் தம் குருவின் நினைவாக அபூர்வமான சிற்பத் திறன் அமைந்த அழகான கோயில் ஒன்று கட்டுவித்தார். அதில் உள்ள மண்டபத்தில் 12 தூண்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 'சௌரமானம்' என்று வழங்கும் சித்திரை முதலிய 12 மாதங்களை உத்தேசித்து அமைத்தவை. உதயமாகும்போது பார்த்தால் அந்த அந்த மாதத்தைக் குறிக்கும் தூணுக்கு நேர் எதிரில் சூரிய கிரணம் விழுவது தெரியும். எத்தனையோ நூற்றாண்டுகளாகச் சிற்பிகளும் சரி, சமீப காலத்தில் எஞ்சினீர்களும் சரி, இந்த அதிசயத்தைப் பார்த்து இதெப்படி முடிந்தது என்று வியப்புற்றிருக்கிறார்கள். பிரபல மேதையான ஸர் எம். விசுவேசுவரையாதான் இதைப்பற்றி ஆராய்ந்து, 'இதைக் கட்டின சிற்பிக்குக் கணித சாஸ்திரத்தில் நுண்ணிய அறிவு இருந்ததே இதற்குக் காரணம்' என்று ஒருவாறு கண்டுபிடித்தார்.

ஆதிசங்கரருக்குப் பின் நைஷ்டிகப் பிரம்மசரிய விரதம் பூண்டு 34 சங்கராசாரியர்கள் தொடர்ந்து இந்தப் பீடத்தை அலங்கரித்திருக்கிறார்கள். முன்பு பட்டத்தில் இருப்பவர் பின்னால் ஒருவரை நியமித்துவிட்டுச் செல்வது வழக்கம். ஆதியில் விஜயநகர மன்னர்களும், பின்னால் பீஷ்வாக்கள், நிஜாம், ஹைதர், திப்பு, மைசூர் உடையார் வம்ச மன்னர்கள், திருவாங்கூர் மன்னர்கள் இவர்களும் சிருங்கேரி பீடத்துக்கு ஏராளமான சொத்துக்களை மானியமாக வழங்கினார்கள். இப்படி எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய ஜாகீராக அமைந்தது. 44 சதுர மைல் பரப்புக்குள் 27,000 ஏக்கர் நிலம் அடங்கிய ஜாகீர் இது. இது தவிர, வெளியூர்களிலும் இந்த மடத்துக்குச் சொத்துக்கள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 35,000 ரூபாய் வருமானம் இதிலிருந்து கிடைக்கிறது. 1897-இலிருந்து இந்த ஜாகீருக்குட்பட்ட 24 கிராமங்களில் ஏற்கனவே அங்கே பயிரிட்டு வந்தவர்களையே அந்த அந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகக் கருதி வருகிறார்கள். அவர்களுக்கு அந்த நிலத்தை விற்கவும், அடைமானம் வைக்கவும், தானபத்திரம் எழுதவும் உரிமை உண்டு. குத்தகைக்கு விடுவது என்பதே முன்பு தெரியாது; சென்ற மகாயுத்தத்தின்போது, 'அதிக உணவு உற்பத்தி செய்' என்ற இயக்கம் ஏற்பட்டபோதுதான் இப்படிக் குத்தகைக்கு விட வேண்டியிருந்தது. ஜாகீரை நிர்வகித்து வந்த தர்மகர்த்தாக்களே இந்த விவசாயிகளிடமிருந்து நில

வரி வசூல் செய்து வந்தார்கள். இந்த நில புலன்களைத் தவிர, பச்சைக்கல், கெம்புக்கல், அபிரகச் சுரங்கங்களும் சந்தன மரக் காடுகளும் இந்த ஜாகீருக்குச் சொந்தமாக உள்ளன. இவைகளையெல்லாம் இந்தப் பீடாதிபதிகள் பயன்படுத்தாமல் அப்படியே விட்டுவைத்திருக்கிறார்கள்.

சென்ற பதினேழு ஆண்டுகளாக, பீடாதிபதியவர்கள் கேட்டுக்கொண்டபடி மைசூர் சர்க்காரே ஜாகீர் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள். முன்னே இதற்குச் சொத்து வைத்துவிட்டுப் போனவர்கள் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை இன்ன இன்ன தர்ம கைங்கரியத்துக்காகச் செலவிடவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பப்படியே ஜாகீருக்குட்பட்ட பல கோயில்களிலும் சரிவரப் பூஜை நடந்தேறி வருவதற்காகவும், வேத அத்தியயனம் போன்ற மத சம்பந்தமான கல்விப்பயிற்சி அளிப்பதற்காகவுமே இந்தத் தொகையைச் செலவிட்டு வருகிறார்கள். இதற்கென்று தேர்ந்தெடுத்த சில சிறுவர்களுக்கு ஆகமம், தர்க்கம், வேதாந்தம் இப்படிப் பல துறைகளில் பயிற்சி அளிக்க ஏற்பாடாகியிருக்கிறது. முடிவில் பீடாதிபதியவர்களே அவர்களுக்குப் பாடம் சொல்லுகிறார். இதுதவிர, பொதுக் கல்வி வளர்ச்சிக்காகவும், மைசூரில் செவிடு ஊமைக் குழந்தைகளுக்குக் கல்வி வசதிக்காகவும் கொஞ்சகாலமாக உதவி வருகிறார்கள். சில சமயம் ஜகத் குருவே பல்லக்கில் புறப்பட்டுச் சுற்றுமுள்ள பல இடங்களுக்குப் போய்வருகிறார். அப்போது கூடவே ஒட்டகங்களும் யானைகளும் வரும்; தாரைகளை ஊதிக்கொண்டு ஆட்கள் முன்னே செல்வார்கள். தென்னாட்டில் பல இடங்களிலுள்ள தம் சிஷ்யர்களுக்கு இவர் வேதாந்த சம்பந்தமான உபதேசங்கள் செய்து வருகிறார். இவருடைய கடமைகளில் இது ஒன்றாகும். இந்த மாதிரி விஷயங்களைத் தவிர வேறெதற்கும் ஜாகீர்ப் பணத்தைச் செலவு செய்வதில்லை. ஆயினும், மைசூர் ராஜ்யத்திலுள்ள சில அரசியல்வாதிகள் நிலச் சீர்திருத்தம் என்ற சாக்கில் இந்த ஜாகீரையும் கலைத்துவிடுவதில் கண்ணாக இருக்கிறார்கள்.

மைசூர்ச் சட்டசபையில் ஜமீன்தாரி, ஜாகீர்தாரி ஒழிப்பு மசோதா ஒன்று கொண்டு வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாகச் சிருங்கேரியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. "அக்கம் பக்கம் ராஜ்யங்களில் செய்தது போல் இந்த ஜாகீரையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளப் பார்க்கிறார்களே! இது நியாயமா? ஆடம்பரமாக வாழ்ந்த ஜமீன்தார்களுக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்து அவர்களை ஒழித்துக் கட்டினார்கள். அதைப்போல் ஜகத்குருவுக்கும் ஆண்டுதோறும் ஏதோ 'ஜீவனாம்சம்' வழங்கி ஒழித்துக் கட்டப் பார்க்கிறார்களே! வெகு நாளாக இருந்து வரும் தர்ம ஸ்தாபனமாயிற்றே இது! இப்படியெல்லாம் செய்தால் இதன் மதிப்பே போய்விடுமே! மதவிஷயத்தில் வேண்டுமென்றே இப்படித் தலையிடுகிறார்களே! நம் அரசியல் விதிகளுக்கே இது முரணாயிற்றே! ரோம் நகரத்தில் போப்புக்கு மதிப்புக் கொடுத்து அவர் விஷயத்தில் சர்க்கார் தலையிடா

மல் இருக்கிறார்களே! அதேமாதிரிதான் சிருங்கேரி ஜாகீரும். சோமநாதபுரம் கோயிலைப் புதுப்பிக்க இந்திய சர்க்கார் சில லட்சம் ரூபாய்கள் செலவழிக்கவில்லையா? போல்புரிலுள்ள 'சாந்திநிகேதன' ஆசிரமத்தைப் பாதுகாக்கத் தனி மசோதாவே ஒன்று கொண்டு வந்தார்களே, பார்லிமெண்டில்! இந்த 1,200 வருஷங்களாக இருந்தது போல் சிருங்கேரி ஜாகீரையும் ஆசாரிய ஸ்வாமிகளையும் ஏன் மதித்து நடக்கக்கூடாது?" என்று ஜகத்குருவின் பக்தர்கள் முறையிடுகிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ குண்டப்ப கௌடா என்பவர் தலைமையில் இது விஷயமாக ஆராய ஒரு கமிட்டியை மைசூர் சர்க்கார் நியமித்தது. இப்போது மைசூரில் சட்ட மந்திரியாக இருக்கும் ஸ்ரீ ராமசந்திர ராவ் என்பவரும், டாக்டர் சந்திரசேகரையா என்பவரும் அந்தக் கமிட்டியில் அங்கம் வகித்தார்கள். அவர்கள் தர்மஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்டமட்டில் தலையிடக் கூடாது என்றார்கள். "மன்னர்களுக்குச் சேவை செய்ததற்காக 'இனாம்' அளித்த விஷயம் வேறு; இது வேறு. அந்த இனாம்கள் பழைய ஊழியத்துக்காக அளித்தவை. தர்ம ஸ்தாபனங்களுக்கு அளித்த 'இனாம்' இப்போதும் சரி, பின்னாலும் சரி, தர்ம காரியங்களுக்குப் பயன்படும். ஆகவே, சிருங்கேரி ஜாகீரைப் பொறுத்தவரையிலாவது விலக்கு அளிக்கவேண்டும்" என்றார்கள். அப்படியிருந்தும் இப்போது சில சட்டசபை அங்கத்தினர்கள் சிருங்கேரி ஜாகீரையும் ஒழிக்கப் பார்ப்பது விநோதமாகத்தான் இருக்கிறது. இனி மேலாவது அவர்கள் தீர்க்கமாக யோசித்துச் சிருங்கேரி பீடத்துக்குத் தீங்கு ஒன்றும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வார்கள் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதைப்பற்றித் துளிக்கூடக் கவலைப்படாமல் இருப்பவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்தான். இவர் சிறந்த ஹடயோகி. பெரும்பாலும் தனிமையில் தியானத்தில் ஈடுபட்டிருக்கிறார் ஸ்வாமிகள். உலக விவகாரங்களிலேயே இவர் ஈடுபடுவதில்லை. பரந்த கல்விமான்; சிறந்த மதாசாரியர் என்ற கியாதி உண்டு. எப்போதாவது இவரை நேரில் தரிசிக்க வேண்டுமென்று யாராவது வந்தால் சகஜமாகப் பேசுவார். இருந்தாலும், முன்னதாகவே சொல்லி ஏற்பாடு செய்யவேண்டும். பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்காவிட்டாலும் சொந்த முயற்சியாலேயே அதை நன்கு கற்றுத் தேர்ந்தவர். சென்னைக் கவர்னராக இருந்த பாவ்நகர் மகாராஜா சிருங்கேரிக்கு வந்தபோது இவரைத் தரிசித்தார். அப்போது ஸ்வாமிகள் கன்னடத்தில் பேசினார். மைசூர்ப் பிரமுகரான ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீநிவாசன் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லிக்கொண்டிருந்தார். ஓர் இடத்தில் அவர் சரியான பதம் நினைவுக்கு வராமல் சற்றுத் தயங்கினார். உடனே ஸ்வாமிகள், "தெய்விக அருள் (டிவைன் க்ரேஸ்) என்று சொல்லுங்கள்; தெய்விக ஆசி (டிவைன் ப்ளெஸ்ஸிங்) என்று நீங்கள் சொன்னது சரியல்ல" என்று திருத்தினார். தமிழ் மொழியில் தமக்குப் பாண்டித்தியம் இருப்பதாக இவர் காட்டிக் கொள்ளாவிட்டாலும் சமீபத்தில்

சேலம், கோயம்புத்தூர் இங்கெல்லாம் விஜயம் செய்தபோது இவர் நல்ல தமிழில் பிரசங்கம் செய்ததைக் கேட்டுத் தமிழ்ப் பண்டிதர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நீதிபதி சந்திரசேகரையர் உடல் நலங் குன்றிப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். டாக்டர்கள் உடம்பு தேருது என்றுகூடச் சொல்லிவிட்டார்கள். அப்போது யாரோ, "சிருங்கேரி ஸ்வாமிகளைப் போய்த் தரிசித்து வாருங்கள்" என்று சொன்னார்கள். அப்படியே அவர் சிருங்கேரிக்குப் போனார். விரைவில் உடம்பு குணமாகிவிட்டது. ஆசாரிய ஸ்வாமிகளின் ஆசீர்வாதத்தினால்தான் தாம் பிழைத்தெழுந்ததாக அவர் மனப்பூர்வமாக நம்புகிறார். வெளி நாட்டிலிருந்து ஸ்வாமிகளைக் காண வந்த பிற மதஸ்தர்கள் பலர் கூட இப்படித்தான் நம்பிக்கையோடு ஸ்வாமிகளிடம் தாங்கள் பெற்ற அநுபவத்தைப்பற்றி உருக்கமாகச் சொல்கிறார்கள்.

உத்தரவின் ரகசியம்

ஓர் இடத்தில் பல ஆட்களை விட்டுப் பள்ளம் தோண்ட வேண்டியிருந்தது. அங்கே எந்த நிமிஷமும் வெள்ளம் வந்து மூழ்கடிக்கக் கூடிய அபாயம் இருந்துகொண்டேயிருந்தது.

திடீரென்று மேஸ்திரி, "எல்லாரும் வெளியேறுங்கள்!" என்று கத்தினன். அத்தனை ஆட்களும் உடனே வெளியேறினார்கள்.

அப்போது அவன், "எல்லாரும் உள்ளே இறங்குங்கள்!" என்று கத்தினன். ஆட்களெல்லாம் தொப் தொப் என்று பள்ளத்தில் குதித்தார்கள்.

மேஸ்திரி இப்படியே மீண்டும் மீண்டும் மாற்றி மாற்றி உத்தரவு போட்டுக்கொண்டிருந்தான். ஆட்களும் மாறி மாறி ஏறுவதும் குதிப்பதுமாயிருந்தார்கள்.

இதைப் பார்த்த ஜில்லா சூப்பர்வைஸர் பிரமித்துப் போனார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னப்பா இது! இங்கே தண்ணீர் ஒன்றும் வரக் காணவில்லையே!" என்று மேஸ்திரியைக் கேட்டார்.

"அது சரிதான்" என்று தொடங்கிய மேஸ்திரி, "ஆனால், இந்த ஆட்கள் தங்கள் மண்வெட்டியைக் கொண்டு வெளியேற்றும் மண்ணைவிட, தங்கள் ஜோட்டைக் கொண்டு வெளியேற்றும் மண் அதிகமாயிருக்கிறது. அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன்" என்று விளக்கினன்.

—எலீனர் ஸி. வுட், 'காரோனெட்.'



வில்வம்

பி. எல். சௌதுரி

உணவுக்கு உணவாகவும் மருந்துக்கு மருந்தாகவும் உபயோகிக்கக்கூடிய பழங்களுள் ஒன்று வில்வப் பழம். அதைப் பயிரிடும் முறைகளையும் பயன்படுத்தும் வழிகளையும் விவரிக்கிறது இந்தக் கட்டுரை.

பொதுவாக, நம் உணவில் பல சத்துக்கள் குறைவாக இருக்கின்றன. இந்தக் குறையை ஈடு செய்யக்கூடிய பழ வகைகளை நாம் அடிக்கடி சேர்த்துக்கொள்வதில்லை. காரணம், அவைகளின் விலைவாசி உயர்ந்திருப்பதுதான். அநேகம் பேர் ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு இவைகளைப் போன்ற பழங்கள்தான் உயர்ந்த சத்துள்ளவை என்று எண்ணுகிறார்கள். இது உண்மை அல்ல. உள்ளூரிலேயே எத்தனையோ பழங்களில் இந்த மாதிரி சத்து இருக்கிறது. அந்தப் பழஙகள் சர்வசகஜமாக எங்கும் கிடைக்கக் கூடியவை. அவைகளில் ஒன்று வில்வப் பழம்.

இதை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் காணலாம். மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஹோஷங்காபாது ஜில்லாவில் ஒரு கிராமத்தில் குறைந்தது இரண்டு வில்வ மரமாவது இருக்கும். யாரைக் கேட்டாலும் இந்தப் பழத்தைச் சும்மா தருவார்கள்.

இதைத் தோட்டத்தில் சகஜமாக நட்டு வளர்ப்பதில்லை. ஆனால் இந்த மரம் பெரிய தோட்டங்களில் இருப்பது நல்லதே. விதையை நட்டாலே போதும். ஜூன்-ஜூலை மாதங்களில் பழுத்த பழத்தின் விதையைப் போட்டால் நல்லது. அடுத்த வருஷத்துக்குள் ஓரளவு உயரம் வந்துவிடும். தரத்துக்குத் தக்கபடி 30, 35 அடி தூரத்துக்கு விட்டு விட்டு நட்டுவிட வேண்டும்.

முதல் வருஷம் சற்றுக் கருத்தோடு இதைக் கவனித்து வர வேண்டும். மழைக்குப் பின் எருவிடுவது நல்லது. ஆடுமாடு மேயாதபடி பார்த்துக்கொண்டால் போதும். சிலபேர் சிவ பூஜைக்கு வில்வ தளம் வேண்டும் என்று இளமரத்தைப் பிய்த்துத் தீர்த்துவிடுவார்கள். அதனால் அப்போது ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவ்வப்போது நீர் பாய்ச்சியும் வர வேண்டும். இது முளைத்து ஐந்து வருஷத்துக்கெல்லாம் காய்க்கத் தொடங்கும்.

மூலம்: இண்டியன் ஃபார்மிங் (ஆங்கிலம்: நவம்பர்'53), புது டில்லி.

இதில் அப்படிக் குறிப்பிடக் கூடியபடி வகைகள் பிரமாதமாக இல்லை. பழத்தின் அளவு மட்டும் மாறுபடும். சில கோழி முட்டை வடிவமாகவும், சில பந்துபோல் உருண்டையாகவும் இருக்கும். சில வகை வில்வப் பழங்களை மோந்தால் குமட்டும். சிலவகை மணமாகவும் தின்பதற்கு ருசியாக வும் இருக்கும். பின் சொன்ன வகையைத்தான் நடவேண்டும்.

ஒரு மரத்தில் வருஷத்துக்கு 300 அல்லது 400 பழங்கள் கிடைக்கும். பெரிய வகையாக இருந்தால் சுமார் 200 - ஆவது காய்க்கும். ஒரு மரத்திலிருந்து 6 மணங்கு பழமாவது கிடைக்கும்.

ஆப்பிள், மாதுளை இந்த இரண்டில் இருக்கும் அளவு சத்து இதிலும் உண்டு. இவைகளிலுள்ள சத்தின் தராதரத்தைக் கீழே காணலாம்.

கோடைக்காலம் முழுவதும் வில்வப்பழம் கிடைக்கும். சர்பத் பண்ணிச் சாப்பிட்டால் உடம்புக்கு மிகவும் குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். அஜீர்ணம் முதலிய வயிற்றுக் கோளாறுகளுக்குக் காயிலிருந்து பருப்பை எடுத்துச் சுட்டுச் சாப்பிட்டால் உடனே கேட்கும். விடாத சீதபேதி, மந்த பேதி இவைகளுக்கும் இது மருந்தாகப் பயன்படுகிறது. இந்தச் சந்தர்ப்பங்களில் ஜுரமாக இருந்து உடல்நிலை பலவீனமாக இருந்தாலும் பரவாயில்லை; இதை உபயோகிக்கலாம். பழுக்காத நிலையிலும் பாதி பழுத்த நிலையிலும் உள்ள வில்வக்காய் மணமாகவும் இருக்கும்; ஜீரணமும் எளிதில் ஆகும். உஷ்ண உடலுக்குக் குளர்ச்சி தரும். குடலைச் சரிப்படுத்திச் சரிவர மலசுத்தியாகும்படி செய்யும்.

பழம்	ப்ரோட்டீன்	அவுன்ஸ் ஒன்றில் காபோ ஹைட்ரேட்	கொழுப்பு	கலோரி என்ற உஷ்ணம்
வில்வம்	0·18	9· 5	0·2	20 8
ஆப்பிள்	0·11	2·19	—	9·2
மாதுளை	0·18	0·19	—	9·0

பயன் என்ன?

பெஞ்சமின் ஃப்ராங்கிளின் என்ற அமெரிக்கர் பிரபல விஞ்ஞானி; அதோடு ஒரு ராஜதந்திரி. இவர் ஒரு சமயம் பிரான்ஸில் அமெரிக்க ஸ்தானிகர் பதவி வகித்துக்கொண்டிருந்தார். முதல் முதலாக ஒரு பலூனை அப்போதுதான் பறக்கவிட்டார்கள். அதை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த பலருள் இவரும் ஒருவர்.

எதைக் கண்டாலும் பிடிக்காத ஓர் ஆசாமி இவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். "இந்தப் பலூன் இருக்கிறதே, இதனால் உலகத்துக்கு என்ன பயன்?" என்று இவரை அவர் கேட்டார்.

உடனே ஃப்ராங்கிளின், "சரி, நண்பரே; புதிதாய்ப் பிறந்த ஒரு குழந்தையினால் என்ன பயன்?" என்று பதில் கேள்வி போட்டார்.

—மேரி ஆல்கஸ்

அம்மா

மூலம்: **ஸ்ரீ வாணி**

தமிழ் ஆக்கியவர்: **ஜயலட்சுமி ஸ்ரீநிவாசன்**

அறையில் பச்சை விளக்கு ஒன்று மினுமினுத்துக் கொண்டிருந்தது. தீட்சிதர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எதிரே கிடந்த கட்டில் கொசு வலைக்குள்ளிருந்து மெல்லிய மூச்சுச் சத்தம் வந்தது. தீட்சிதரின் பார்வை கட்டிலின்மீது படிந்திருந்தது. அவருக்கு ஒரே ஒரு கவலை: 'இவ்வளவு சௌகரியமெல்லாம் அமைந்திருந்துங்கூட இந்த மனிதனுக்குச் சுகமில்லையே; என்ன பரிதாபம்! இவன் ஒருவன்மட்டும் அல்ல, இந்த வீட்டில் உள்ள எவருமே சுகப்படுவதாகத் தோன்றவில்லை. இதற்கு ஏதாவது பரிகாரம் செய்தாக வேண்டும்....'

தீட்சிதர் இப்படி ஏதேதோ எண்ணினார். இந்த வேளையில் பின் பக்கத்தில் ஏதோ காலடிச் சத்தம் கேட்கவே, திரும்பிப் பார்த்தார். "நமஸ்காரம். உட்கார வேண்டும்" என்றார்.

"நமஸ்காரம், ஸ்வாமி. அனந்தராமன் இன்னும் விழித்துக் கொள்ளவில்லையா?" என்றார் வந்தவர்.

"இன்னும் விழித்துக்கொள்ளவில்லை. எழுப்பலாமா, வேண்டாமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் நீங்களே வந்துவிட்டீர்கள்" என்றார் தீட்சிதர்.

"இன்னும் கொஞ்சம் பார்க்கலாம். அவனே விழித்துக்கொள்வான்" என்றார் வந்தவர்.

"டாக்டர், நீங்கள்தான் எங்கள் குல தெய்வம். நானும் பதினெட்டு நாளாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் மட்டும் அனந்துவை இவ்வளவு கண்ணுங் கருத்துமாகப் பார்க்காமல் போயிருந்தால், என்ன நேர்ந்திருக்குமோ? எங்கள் முன் ஜன்மசுகிர்தந்தான் உங்களை எங்களிடம் கூட்டி வைத்தது" என்று சொன்னார் தீட்சிதர்.

"வேண்டாம், ஸ்வாமி; அவ்வளவு பெரிய வார்த்தை வேண்டாம். எல்லாம் கடவுளின் அருள். நான் எம்மாத்திரம்? நிமித்த மாத்திரந்தான். நடுவில் இரண்டு நாள், எனக்கே தைரியமில்லை. கிழவி ஒருத்தி உள்ளே; வெளியில் இந்தப் பெண் ஒருத்தி. வேறு துணை யாரும் இல்லை. கடைசியில் நான்தான், 'உங்கள் உறவினரான பெரியவர்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள்' என்று விசாரித்தேன். அந்த வேளையில் சொல்லிவைத்தாற் போல் நீங்களே வந்துவிட்டீர்கள்! அனந்தராமன் உங்களுக்குத் தமையன் பிள்ளையா?" என்று டாக்டர் கேட்டார்.

"இல்லை; அவன் தகப்பனும் நானும் நண்பர்கள்; குழந்தைப் பருவத்தில் ஒன்றாக விளையாடினவர்கள். அவன் போய்விட்டான்; புண்ணியாத்மா! இப்போதும் இந்தக் குடும்பத்தில் எல்லாரும் என்னைச் 'சித்தப்பா' என்றே

அழைக்கிறார்கள்'' என்று பதில் அளித்தார் தீட்சிதர்.

''சாரதா, டாக்டர் சொன்னது உண்மை. உன்னால்தான் நான் பிழைத்தேன். ராத்திரி எவ்வளவு இன்பமாக இருக்கிறது! இப்போது அதன் பெருமை புரிகிறது. இல்லை, உன்னைத் தொந்தரவு செய்ய வில்லை. தூங்கு. எவ்வளவு நாளாச்சோ கொஞ்சம் கண்மூடி! அழகு! எல்லாம் அழகு! இந்த இரவு, ஆகாயம், நிலம், நட்சத்திரம், நான், நீ...'' இப்படியெல்லாம் உளறும் சத்தம் கொசு வலைக்குள் ளிருந்து வந்தது.

''அம்மா சாரதா, இப்படி வாயேன். உன் கணவர் தூக்கத்தி லும் உன்னைக் கண்டு உளறுகிறார்'' என்று அழைத்தார் டாக்டர்.

''அனந்த, அனந்து, விழித்துக் கொள், அப்பா. டாக்டர் வந் திருக்கிறார். ஒரு தடவை வந் தார். நீ தூங்கிக்கொண்டிருந்தாய்'' என்றார் தீட்சிதர்.

''ஆ, வந்தாரா? இதென்ன அதற்குள் விளக்கு ஏற்றி இருக் கிறது'' என்று கேட்டான் கட்டி லில் படுத்திருந்த அனந்தராமன்.

''விழித்துக்கொள், அப்பா. உன் னால் காபி வேளை தப்பிவிட்டது. மூன்று மணிக்கு வரச் சொல்லி விட்டு, ஏழு மணி வரைக்கும் நீ தூங்கிக்கொண்டிருந்தால் எங்கள் கதி என்ன?'' என்றார் டாக்டர்.

''என்ன, சாரதா, நீயாவது எழுப்ப வேண்டாமா? டாக்டரை இவ்வளவு நாழிகை காக்க வைக்க லாமா? அவருக்கு எத்தனை காரி யம் இருந்ததோ?'' என்றான் அனந்து.

''இந்த அவவேளையில் எதற் கப்பா?'' என்று உபசாரமாகச் சொன்னார் டாக்டர்.

''காபி சாப்பிடப் போதும் வேளையும் உண்டா? வேண்டு மானால் சனிக்கிழமை விரதம் இருந்துவிடுங்கள்'' என்று கேலி செய்தான் அனந்தன்.

''எங்கே, பாட்டியம்மாளைக் காணவில்லை? சாதம் போடாமல் டாக்டர் தன் பிள்ளையைக் கொல் கிறார் என்று மூன்று நாள் பட்டினி கிடந்து சத்தியாக்கிரகம் செய் தாளே! பார்த்தீர்களா, ஸ்வாமி. காந்தி மகாத்மாவின் கொள்கை எவ்வளவு தூரத்துக்கு வந்திருக் கிறது!'' என்று சொல்லிச் சிரித் தார் டாக்டர்.

அனந்தனும் சிரித்தான். முழுக்க முழுக்க மூன்று நாள், வேறு என்ன செய்யவும் தோன்றாமல், ஸ்நானம், ஜபம், ஊண், உறக்கம் எந்த நினைவும் இல்லாமல் கதவு மறை வில் உட்கார்ந்து, கண்ணீர் உதிர்த் துக்கொண்டிருந்த அம்மாவின் உருவம் மனக் கண் எதிரே தோன்றி, அனந்தனின் இதயத் தைப் பிழிந்தெடுத்தது. ஒரு புறம் அம்மா; மறு புறம் சாரதா! இந்த இரண்டு பேரும் சொரியும் அன்புப் பிரவாகம் தன்னை அடித்துக் கொண்டு போவதுபோல் அவனுக் குத் தோன்றிற்று. தொண்டை அடைத்துக்கொண்டு இருமல் வந்தது.

கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு சொன்னான்: ''பாருங்கள், மனு ஷன் ஆசைக்கு அடி நுனி இல்லை. எட்டு நாளைக்கு முன்னால் பிழைத் தால் போதும் என்று இருந்தேன். அதற்குள்ளாகவே இச்சை இறக்கைவிட்டு நாலுபுறமும் பறக் கிறது. உச்சி வேளையில் தாகம் எடுத்தது. சாரதா, நீ கொடுத்த பால், தண்ணீர் எதுவும் அதைத் தீர்க்கவில்லை. நம் தோட்டத்து

இளநீரைப்பற்றி நினைவு வந்து, வாயில் ஜலம் ஊறியது. இனி எங்கும் அதுபோல் கிடைக்காது.''

''எங்கே பாசம் அதிகமோ அங்கே எல்லாமே நன்றாகத் தோன்றும்'' என்றாள் சாரதா.

''வெறும் பாசம் மட்டும் இல்லை, சாரதா; உண்மையாகத்தான். வேண்டுமானால் சித்தப்பாவைக் கேள். இல்லையா, சித்தப்பா?'' என்று அனந்து சொன்னான்.

''அனந்து, உன் வார்த்தை எனக்கு மிகுந்த சந்தோஷம் தருகிறதப்பா. தொலைவில் இருந்தாலும், உனக்கு ஊரின் நினைவு இருக்கிறதே! சாரதா என்னத்தைக் கண்டாள்? நீ அவளை அழைத்து வந்து அதன் ருசியைக் காட்டியிருந்தால்தானே அவளுக்குத் தெரியும்? வெறும் இளநீர் மட்டுமில்லை; அந்த ஊர்க் காற்று, நீர் எல்லாமே அருமையாக இருக்கும். மனுஷர்களோ தங்கமானவர்கள். அவர்களுக்குள்ளே மகா ஒற்றுமை. நிஜந்தான், சாரதா; நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை. நீ கட்டாயம் ஒரு தடவை அங்கே வந்து பார்க்க வேண்டும். அப்போது நான் சொல்வது உண்மை என்று நீயே தெரிந்து கொள்வாய். நீங்கள் பட்டண வாசிகள், இருக்கிறீர்களே, உங்களுக்குப் பட்டிக்காட்டான் என்றால் ஒருவித அசட்டை. ஆனால் அவனிடமிருந்தும் நீங்கள் கற்றுக் கொள்ளவேண்டிய விஷயம் ஒன்று உண்டு'' என்றார் தீட்சிதர்.

''அதென்னவோ?'' என்று கேட்டாள் சாரதா.

''அதுவா? சொல்லுகிறேன், கேள்: இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழவேண்டும்; வீட்டில் நாலு பேர் இருந்தால், ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய், மகிழ்ச்சியாய்க் குடித்தனம் நடத்த வேண்டும். இங்கே பட்டணத்தில்

அதுதான் இல்லை. வார்த்தைக்குச் சொல்கிறேன். எங்களூரில் 'சாஸ்திரிகள் வீடு' என்றால், எல்லாரும் கொண்டாடுவார்கள். ஏழைமையிலும் அவர்கள் அவ்வளவு சந்தோஷமாக இருந்தார்கள். இப்போது சாஸ்திரிகளின் பேரன் இந்தப் பக்கத்தில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான். சாஸ்திரிகள் வீட்டில் இருந்த சந்தோஷத்தில் பத்தில் ஒரு பங்கு கூடப் பேரன் வீட்டில் இல்லை. இதனால்தான் நான் சொன்னேன், பட்டணவாசிகள் அங்கே போய்க் கற்றுக்கொள்ள வேண்டும் என்று. சாஸ்திரிகளின் குடும்ப விஷயத்தைப்பற்றிச் சொல்லப் போனால் அடி நுனி இல்லாமல் போகும்'' என்றார் தீட்சிதர்.

''தேவலை, சொல்லுங்கள். உங்களூர் இளநீர், காற்று, நீர் எல்லாம் ஆச்சு! தங்கமான மனுஷர்களைப் பற்றியும் கேட்டுவிடுவோம். எப்படியும் அனந்தராமன்தான் இன்று ஒரு போது என்றுசொல்லி இருக்கிறானே'' என்றார் டாக்டர்.

''அப்படியானால் சொல்லுகிறேன். எல்லாருமே கேட்கலாம்: எங்களூர் அப்படி ஒன்றும் ரொம்பப் பெரிதல்ல. சுமாரான கிராமம். சாஸ்திரிகள் என்றால், அந்த ஊரின் தலைவர் மாதிரி. அவரிடம் எல்லாருக்குமே ரொம்ப மரியாதை. அந்த ஊரில் அவரைப்போல் பெரிய குடும்பி வேறு யாரும் இல்லை. அவருக்கு ஆறு பெண்கள்; ஐந்து பிள்ளைகள்; வீடு நிறையப் பேரன் பேத்திகள். அவர் குமாரன் கிருஷ்ணப்பனின் குணத்தைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. சுற்று வட்டாரத்தில், பத்து மைல் வரையிலும் உள்ள கிராமங்களில் எல்லாம் அவர்களுடைய புரோகிதந்தான். அவைகளில் உள்ள சில பணக்காரக் கவுண்டர் குடும்பங்கள் வாழையடி வாழையாக வந்தவை.

''ஒரு தடவை, எங்களுக்கு எட்டு மைல் தூரத்தில் ஒரு கிராமத்தில் கலியாணம் நடந்தது. கவுண்டர் வந்து அழைத்துவிட்டுப் போனார். கவுண்டர் அனுப்பி வைத்த வண்டியில் கிருஷ்ணப்பன் கிளம்பினான். தனியாகப் போவானேன் என்று என்னையும் தன்னோடு வரும்படி அழைத்தான். எனக்கும் வேறு வேலை இல்லை. அவனோடு கிளம்பினேன்.

''கலியாணத்தைச் செய்து வைத்துவிட்டு, நாங்கள் இரண்டு பேரும் மறுநாள் ஊருக்குக் கிளம்பினோம். அன்று அவன் உள்ளம் ரொம்ப உல்லாசமாக இருந்தது. காரணம் என்ன தெரியுமோ? கவுண்டர் தம் ஒரே பிள்ளையின் கலியாணத்தை வெகு தடபுடலாக நடத்தினார். கிருஷ்ணப்பனுக்குக் கை நிறையப் பணம் சம்மானம் செய்தார். தவிர, கலியாணத்துக்கென்று வரவழைத்திருந்த ஜவுளியில் மிக நல்ல புடைவையாக ஒன்றை எடுத்து அவன் முன்னால் வைத்து, 'சின்னம்மாவுக்கு நான் தண்டனிட்டுக் கொடுத்ததாகச் சொல்லுங்க' என்று சொல்லி அளித்தார். கிருஷ்ணப்பன், தனக்குக் கிடைத்த வரும்படியையெல்லாம் பெரிய வேஷ்டியொன்றில் முடிந்து தோள்மீது போட்டுக்கொண்டான். வெயில் தணிந்த பின் புறப்பட்டோம்.

''பாதி வழி நடந்திருப்போம். கிருஷ்ணப்பா நடுநடுவே தன் சம்பாவனை முடிச்சைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துகொண்டே வந்தான். அதன் இடுக்கில் புடை

வைத் தலைப்புத் தென்படுவதைக் கண்டு அவன் உள்ளம் இன்பமய மான ஒரு கற்பனையில் இறங்கி யதோ என்னவோ? ஒரு வேளை, புதுச்சேலை கட்டிக்கொண்டு, புதுப்பொலிவுடன் நடமாடப் போகும் மனைவியின் எழில் உருவ ஓவியத்தைக் கற்பனை செய்து கொண்டிருந்திருக்கலாம். இளம் வயதுச் சிந்தனைகளே இன்பமயம், சாரதா! கற்பனையில் மூழ்கியிருந்த அவனுக்கு வழிமீது அவ்வளவாகக் கவனம் இல்லை. நாங்கள் வந்து கொண்டிருந்தது ஒற்றையடிப் பாதை. அங்கங்கே மழை ஜலம் குடைந்த பள்ளங்கள் இருந்தன. இருந்தாற்போல் தடால் என்ற ஓசை கேட்டது. என்ன என்று திரும்பிப் பார்ப்பதற்குள் கிருஷ்ணப்பன் கல் தடுக்கி ஒரு பள்ளத்தில் விழுந்து கிடந்தான்.

மூர்ச்சை தெளிய அவன் முகத்தில் சிறிது ஜலத்தைத் தெளித்தேன். அங்கே மாடு மேய்த்துக்கொண்டிருந்த பையன்களிடம் ஊருக்குச் சொல்லி அனுப்பினேன். சாஸ்திரிகள் என்னவோ, ஏதோ என்று பதைபதைத்துக்கொண்டு, ஊர்க்காரர் சிலருடன் வண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு, அங்கே வந்து சேர்ந்தார். கிருஷ்ணப்பன் பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பான்; திடமான ஆள்; முகத்தில் நல்ல களை. அவன் உடல் எல்லாம் காயங்கள். நெற்றியில் கூர்மையான கல் பட்டு ரத்தம் பெருகித் துணி முழுவதும் நனைந்திருந்தது. அவன் விழுந்த வேகத்தில் இடுப்பில் செருகி இருந்த பணம் எல்லாம் நாலு புறமும் சிதறிக் கிடந்தன. மூட்டையில் இருந்த தானியம் எல்லாம் சுற்றிலும் இறைந்து கிடந்தன. அவைகளின் நடுவில் கிடந்த பிள்ளையைக் கண்டு சாஸ்திரிகளுக்கு உண்டான துயரம் சொல்லி முடியாது'' என்றார் தீட்சிதர்.

அனந்து குறுக்கிட்டு, ''சித்தப்பா, இதென்ன நம்ம..'' என்று கேட்க வந்தான்.

தீட்சிதர் கண்ணைச் சிமிட்டி அவனைச் சும்மா இருக்கும்படி ஜாடை காட்டினார். அவனும் அப்படியே நிறுத்திக்கொண்டான்.

''பிறகு?'' என்றாள் சாரதா.

''கூட வந்திருந்தவர்கள் சாஸ்திரிகளுக்குத் தைரியம் சொன்னார்கள். காயங்களையெல்லாம் அலம்பித் துணி சுற்றினார்கள். உபாயமாக அவனை வண்டியில் எடுத்துப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வரும்போது, பொழுது சாய்ந்து விட்டது.

''பாவம்! சாஸ்திரிகளின் மாட்டுப் பெண் - பதினாறு வயது யுவதி - தன் எட்டு மாதக் குழந்தையை இடுப்பில் வைத்தபடி கணவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ரத்தக் காயங்களுடன் நினைவில்லாமல் வண்டியில் வந்த அவனைக் கண்டு அவள் இருதயம் வெடித்தது. ஆனால், அருகில் வந்து பார்க்கத் தைரியம் இல்லை. பெரியவர்கள் யாரும் அவளை வந்து பார்க்கச் சொல்லவுமில்லை. அவள் உள்ளேயே உட்கார்ந்து, அழுது கொண்டிருந்தாள். உள்ளூர் வைத்தியர் வந்து சிகிச்சை செய்தார். இப்படியே இரண்டு நாள் கழிந்தன. வர வர அவன் நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. மூன்றாம் நாள் அவனுக்குச் சிறிது நினைவு வந்து கண்ணை விழித்தான். ஆசையுடன் நாலு புறமும் பார்த்தான். குடும்பத்தைச் சேர்ந்த

எல்லாரும் இருந்தார்கள். ஆனல், யாரை அவன் ஆசையோடு பார்க்க எண்ணினனே, அவள் மட்டும் அங்கே இல்லை. அவன் நிராசை யுடன் கண்ணை மூடிக் கொண்டான்....

“அங்கேயே இருந்த வைத்தியர் அவன் விருப்பத்தை ஊகித்து விட்டார். பெரியவரிடம், ‘மாட்டுப் பெண்ணைக் கூப்பிடுங்கள். இவன் அவளைப் பார்க்கவேண்டும் போல் இருக்கிறது’ என்ருர். பெரியவருக்கு இது பிடிக்கவில்லை. என்ருலும், வைத்தியர் சொன்னதைத் தட்டமுடியாமல், முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போய், மாட்டுப் பெண்ணை அழைத்து வந்தார். ஆனல், அவள் படுக்கையை நெருங்குவதற்குள்ளாகவே அவனுடைய உயிர் போய்விட்டது..”

தீட்சிதர் இப்படிச் சொல்லிச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

சாரதா கண் கலங்கியபடி, “அப்புறம்?” என்று கேட்டாள்.

“அப்புறம் என்ன? சாஸ்திரிகளின் மாட்டுப் பெண்ணுக்கு அளவற்ற துக்கம். கையிலுள்ள சிசுவைத் தவிர உலகத்திலே அவளுக்கு ஆதரவு வேறு எதவுமில்லை. குழந்தைமீது உள்ள பாசம் மட்டும் அவளைக் கட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால், அவள் என்றைக்கோ ஆறு குளம் கிணறு குட்டைகளில் விழுந்து உயிரை விட்டிருப்பாள். பெரிய குடும்பம். கிராம வாழ்க்கை. அவ்வளவு பேருடைய விருப்பங்களையும் அறிந்து நடப்பதென்ருல், லேசான காரியமா, சாரதா? அந்தத் துயரக் கடலில், குழந்தைதான் அவளுக்குத் தெப்பம். அந்தக் குழந்தையின் மீதே தன் வாழ்நாள் ஆசை முழுவதையும் வைத்துக் காலங் கழிக்கலானள்.

“பையன் பெரியவன் ஆனன். சாஸ்திரிகளுக்குப் பேரனைப் புரோகிதத்தில் போட வேண்டும் என்று இஷ்டம். ஆனல், மாட்டுப் பெண்ணுக்குப் பையனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆசை. அவள் என்றும் மாமனரிடம் பேசி அறியாள். நாத்தனரின் மூலம் தன் இஷ்டத்தை அவருக்குத் தெரிவித்துத் தன்னிடம் இருந்த சில நகைகளை எடுத்துக் கொடுத்தாள்.

“எப்படியோ, பையன் கஷ்டப் பட்டுப் படித்தான். கடவுளின் அருளும் இருந்தது. படித்துப் பட்டதாரியான தன் பிள்ளையைக் கண்டு, அவள் ஆனந்தமுற்ருள். கடந்து போன சம்பவங்கள் அப்போது அவளுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும். தான் அந்தக் குழந்தையை வளர்ப்பதற்கு பட்ட சிரமம் எல்லாம் நினைவு வந்திருக்க வேண்டும். வெகு நேரம் அவளால் பேச முடியவில்லை.

“பிள்ளைக்கு மைசூரில் உத்தியோகம் கிடைத்தது. அப்போது அவர்களுடைய நிலைமை நன்ருக இருந்ததால், கலியாணமாகிப் பெரிய வீட்டுச் சம்பந்தமும் கிடைத்தது. அப்போதுதான் தாயின் சிரமம் எல்லாம் தீர்ந்தன. ஆயினும் அவள் உள்ளம் மட்டும் ஒருவித அதிருப்தியுடன் தவித்தது. சின்னஞ் சிறு குடித்தனம். அழகான பங்களா நிறைய ஏவலாட்கள். ஆனலுங்கூட அவள் உள்ளம் நிறைந்திருக்கவில்லை. எந்தச் சுகத்துக்காக ஏங்கிக் கிடந்தாளோ அந்தச் சுகத்தை அநுபவிக்கக் கூடிய சமயம் கிட்டிய போது, அதை அங்கே காண

லில்லை. தான் எவ்வளவு பாசத்துடன் பிள்ளையை வளர்த்தாளோ, அதேபோல் அவ்வளவு அக்கறையைப் பையன் தன்னிடம் காட்டவில்லை என்று எண்ணி அவள் கண் கலங்கினாள். ஆனால் கலியாணமான பிள்ளையின் அன்பை ஏகபோகமாய்த் தாய் பெற முடியுமா? அதில் ஒரு பாகத்தைப் பெற மற்றொருத்தி வந்துவிட்டதை அவளால் சகிக்க முடியவில்லை. ஐயோ, பாவம்!'' என்று சற்று நின்றார் தீட்சிதர்.

சாரதா இதுவரையில் மௌனமாகவே கேட்டுக்கொண்டிருந்தாள். இப்போது மெதுவாக, ''தாய் தன் குழந்தையை அவ்வளவு பாசத்துடன் வளர்ப்பதைவிட, அது தன் கடமை என்று அறிந்து, வளர்ப்பதுதான் சரி'' என்றாள்.

''ஆமாம், உண்மை. ஆனால் உன்னைப் போன்ற படிப்பாளியின் பேச்சு இது. அந்த அம்மா இருந்த நிலையைக் கொஞ்சம் யோசித்துப் பார்'' என்றார் தீட்சிதர்.

''ஏன்? மாட்டுப்பெண் நல்லவள் இல்லையா?'' என்று சாரதா கேட்டாள்.

''ரொம்ப நல்லவள், சாரதா. ஆனால், மாமி ஒரு துருவம்; மாட்டுப்பெண் ஒரு துருவம் - இப்படி இருந்தது அவர்களிடையே இருந்த வேற்றுமை. சுகத்தையே காணாது வளர்ந்தவள் மாமி. கஷ்டமென்ற நிழலைக்கூடக் கண்டறியாதவள் மாட்டுப்பெண். இவளுடைய நாகரிக மனப்பான்மைக்கும் அவளுடைய அறியாமைக்கும் கொஞ்சமும் பொருந்தவில்லை. இதனால் குடித்தனம் சாரமற்றுப் போய்விட்டது. அந்த இரண்டு பேருடைய அன்பும் அவன்மீது ஒரேயடியாய்க் கரை புரண்டு ஓடினாலும், அவனுக்குச் சுகம் மட்டுமில்லை. இந்த நிலைமையில் சிக்கிக்கொண்டவனின் பாடு வெகு கஷ்டம். பாக்கு வெட்டிக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்ட பாக்கைப் போல்தான் அவன் தவிக்க வேண்டும். பையனுக்கு வாழ்க்கையே கசந்துவிட்டது. இதை ஏன் சொல்ல வந்தேன் என்றால், ஒருவன் சுகப்படுவதற்குச் சௌகரியங்கள்மட்டுமே முக்கியமில்லை; அநுபவிப்பதற்கேற்ற உள்ளமும் வேண்டும். என்னவோ நாலு நாள் வாழ்க்கை. இருப்பதைக் கொண்டு வாழ்வை நன்றாக வகுத்துக்கொள்வது புத்திசாலியின் காரியம்'' என்று சொல்லித் தீட்சிதர் கதையை முடித்தார். டாக்டர் நேரமாகிவிட்டதென்று எழுந்தார். சாரதா கதவைச் சாத்துவதற்குப் போனாள்.

அனந்தன் கேட்டான்: ''சித்தப்பா, இதென்ன? உன் கதை... யாருக்காக?''

''அனந்து, நீ தவறாக நினைத்துக்கொள்ளாதே! நானுந்தான் பதினைந்து நாளாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த வீட்டில் யாருக்குமே சுகமில்லை. சீதம்மாள் ரொம்பக் கஷ்டப்பட்டவள். வாழ்வின் கடைசிக் காலத்திலாவது கொஞ்சம் சுகம் காணட்டும் என்பது என் விருப்பம். அதற்காகத்தான் இப்படிச் சொன்னேன். சாரதா புத்திசாலி; நல்ல பெண். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் என்ன செய்யலாம் என்று யோசிக்காமல் இருக்க மாட்டாள். சமயம் பார்த்து, கதையில் வந்த கிருஷ்ணப்பன் உன் தகப்பனாரே என்று தெரிவி. பிறகு எல்லாம் சரி

யாகிவிடும். தூங்கு, அப்பா; வீணே மனசை அலட்டிக்கொள்ளாதே. நானும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்'' என்றார் தீட்சிதர்.

இங்கே இப்படி எல்லாரும் பேச்சில் ஆழ்ந்திருந்தபோது, உள்ளே இருந்தாள் சீதம்மாள். அப்போது தான் கடுஞ்சுரத்திலிருந்து விடுபட்டுச் சுதாரித்துக்கொண்ட மகனின் அறையில் ஏதோ பேச்சு வார்த்தைச் சத்தம் கேட்கவே, அவள் பயந்து போய் எழுந்து வந்தாள். அறையில் நடைபெற்ற சம்பாஷணையைச் சிறிது கேட்டதும், கம்பம்போல் நின்று விட்டாள். உள்ளே சம்பாஷணை அடங்கி, எல்லாரும் தூங்கிவிட்ட பிறகுகூட, அவள் மட்டும் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. கண்ணீர் அருவி பெருகிக்கொண்டிருந்தது.

உண்மையாகவே சீதம்மாள் ஏதும் அறியாத பேதை. மகனின் சுகம் ஒன்றுதான் அவளுடைய தாரக மந்திரம். அதிகாலையிலிருந்து நடுநிசி வரையில் உழைப்பது; போட்டதைச் சாப்பிட்டுவிட்டு மகனுக்காக ஏங்கிக் கிடப்பது-தன் வாழ்வு முழுவதும் அவள் செய்துகொண்டிருந்த காரியம் இவ்வளவுதான். இதைத் தவிர அவளுக்கு வெளி உலகம் ஒன்றுமே தெரியாது! அவளுக்கு இந்த இடத்து விவகாரம் ஒன்றும் பிடிக்காமல் போனதில் ஆச்சரியமில்லை. ஆனால், பிள்ளைக்குச் சுகமில்லை என்ற வார்த்தை, அவள் இருதயத்தைக் குறி வைத்து விட்ட பாணம் போல் தைத்தது. மற்ற ஒன்றும் தெரியாவிட்டாலும், இதை வெகு சுலபமாய்ப் புரிந்துகொண்டாள். யாருடைய சுகம் அவளுடைய வாழ்க்கை லட்சியமாக இருந்ததோ, அந்த லட்சியம் தவறிவிடவே, அவள் உள்ளம் நிலையின்றித் தவித்தது. தன் சொந்தச் சுகத்தை அறியாதவள் சீதம்மாள். பிள்ளைப் பாசத்தால் 'தான்' என்ற உயர்வு இலைச்சருகு போல் பறந்து போகவே, பிள்ளையின் சுகத்துக்குக் குறுக்கில் நிற்காமல் ஒதுங்கி விடவேண்டும் என்பதுதான் அப்போது அவளுக்குத் தோன்றிய உபாயம். இந்தத் தீர்மானம் இருதயத்தைப் பிளப்பதுபோல் இருந்தாலும், அவள் பின் வாங்கவில்லை.

விடிந்தால் எல்லாருக்கும் ஆச்சரியமாயிருந்தது! சீதம்மாள் மூட்டை முடிச்சுடன் கிராமத்துக்குப் போகத் தயாராக இருந்தாள். யார் என்ன சொல்லியும் கேட்கவில்லை.

இரவு கனவில் மாமனாரைக் கண்டதாகவும், அவரைப் போய்ப் பார்த்தால் ஒழியத் தனக்கு நிம்மதி இராது என்றும் சொல்லி, பகல் வண்டிக்கே கிளம்பிவிட்டாள். அங்கிருந்தவர்களில் எவரும் அவளுடைய பிடிவாதத்தில் அடங்கி இருந்த அன்பையும் தியாகத்தையும் புரிந்துகொள்ளவில்லை.

மறுநாள் அண்டை அயல் வீட்டார்கள் பேசிக்கொண்ட பேச்சு இது:

"கேட்டாயா? சீதம்மாள் ஊருக்குப் போய்விட்டாளாம்!"

"அவ்வளவு காய்ச்சலடித்துக் கிடக்கும் பிள்ளையை விட்டுப்போக அவளுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ?"

"என்னவோ அம்மா, உலகத்திலே எந்த எந்த மாதிரி மனுஷர்கள் எல்லாம் இருக்கிறார்கள்!" ★

கும்ப மேளா

எழுதியவர்: ராணி சந்தா

தமிழாக்கியவர்: த. நா. குமாரஸ்வாமி

இந்த வருஷம் கும்பமேளா பிரயாகையில் நடந்தது உலகப் பிரசித்தியாகிவிட்டது. இது பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதடவை, பிரயாகை, ஹரித்வாரம், உஜ்ஜயினி, நாஸிகை இந்த நான்கு இடங்களிலும் மாறி மாறி நடப்பது வழக்கம். முன்பு ஹரித்வாரத்தில் நடந்தபோது, இந்த வைபவத்துக்கு யாத்திரை சென்ற அநுபவத்தை இந்தப் பெண்மணி வர்ணிக்கிருள். ரவீந்திரநாதரின் கடைசி நாட்களில் அவரை 'ஆலாபசாரி' என்ற சொல் ஓவியத்தில் பிடித்து வைத்தவள் இவள். அவ னீந்திரநாதரிடம் சித்திரக் கலை பயின்றவள்.

காப்பிரைட்: பூர்ண கும்பம் (வங்காளிப் புத்தகம்)

கும்ப மேளா

★

எனக்கு மிகவும் சிநேகமான அந்த வைஷ்ணவி மறக்க முடியாத ஒரு வார்த்தையை அன்று சொன்னாள்: "இந்த வாழ்வில் நான் அடைந்தது என்ன, அடையாதது தான் என்ன? அடைந்ததால் என்ன ஐசுவரியம் வந்துவிடப் போகிறது; அடையாது போனால்தான் என்ன போய்விடும்? இந்த லாபநஷ்டக் கணக்கைப் பார்க்க முனைந்தேன் ஒரு சமயம்; ஆனால் அந்தக் கணக்குச் சரிப்பட்டு வந்தால் தானே! தொல்லையை மறப்பதற்கு வெளியே கிளம்பிவிட்டேன், எல்லாவற்றையும் உதறிவிட்டு."

ரெயில் வண்டி ஜன்னலில் என் தலையை ஊன்றி இந்த வார்த்தையை நினைத்துக்கொண்டேன். ஹரித்வாரத்தில் நடக்கும் கும்ப மேளாவுக்குப் பயணமானேன். திடுமென வந்துவிட்டேன். இது எப்படி முடிந்தது என்பதை நினைக்க எனக்கே ஆச்சரியமாக இருந்தது. சம்சாரச் சுழலிலிருந்து விடுபட்டு வருவது சற்றுக் கடினந்தான். யாத்திரைக்கு ஏற்பாடெல்லாம் ஆனதுமே குழந்தை அபிஜித் கடும் ஜுரத்தில் படுத்துக்கொண்டான். இந்தப் பக்கம் 'டிக்கட் வாங்கியாயிற்று: கிளம்பு' என்று அண்ணாவின் தாக்கீது வந்தது. என் மனம் எப்படி அடித்துக்கொண்டிருக்கும், பாருங்கள்? வீட்டில் நான் எந்தக் கோலத்தில் இருந்தேனோ, அதே கோலத்துடன் கிளம்பி வந்துவிட்டேன். அபிஜித் ஜுரம் நீங்கி, ஜன்னலில் தன் மெலிந்த முகத்தைக் காட்டி, 'போய் வா, அம்மா' என்று சிரித்தான். எனக்குப் போகத் தெம்பு அப்புறந்தான் வந்தது.

நாலு பேர் நாங்கள்: நான், பெரிய நாத்தனார், அவளுடைய புருஷன் — அதாவது, என் தமையன், பெரிய அக்கா. வண்டியில் ஏறிக்கொண்டோம், மூட்டை முடிச்சுகளுடன். எங்கள் எதிரே பெரிய திருமேனியுடன் மார்வாடிகள் இரண்டுபேர் அமர்ந்திருந்தார்கள். வண்டி புறப்பட்டுச் சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சட்டி ரசகோலாவைத் தின்று தீர்த்தார்கள். அண்ணா எப்போதும் வம்பளப்புப் பிரியர். மெல்ல இவர்களைப் பேச்சுக்கு இழுத்தார். காசி விசுவநாத சேவா சமிதியின் சார்பாக இவர்கள் கும்பமேளாவை உத்தேசித்து முன் ஏற்பாடுகள் செய்யப் போவதாகத் தெரிந்தது. அண்ணாவிடம் இந்தியில் அச்சிட்ட அலுவல் விவரங்களைக் காட்டும் பிரசுரத்தைக் கொடுத்தார்கள். பொறுமையாக அண்ணா அதைப் படித்தார். பிரசுரத்தில் உள்ள ஒருவருடைய படத்தைக் காட்டி, "சேட் டீசுவரர், ஐயா இவர்! பத்தாயிரம் பேருக்குமேல் சாப்பாடு போட ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்றார்கள் அவர்கள். ஏன் போட மாட்டான் அந்த மார்வாடி, கலப்பட நெய்யில் வரும் லாபம் கொஞ்சம் தர்ம கைங்கரியத்துக்கும் போகட்டுமே என்று!

ரெயிலில் பொழுது போகாத சமயம் தூங்குவதைவிடச் சுவாரசியமானது ஒன்றுமில்லை. மாலைப் பொழுது வரவரக் குளிர் எடுத்தது. உடம்பில் ஆயிரம் ஊசி போட்டுக் குத்தியது. எதிரே இருந்த மகாநுபாவர்கள் குளிருக்கு இதமாக மாற்றி மாற்றிக் கஞ்சாப் புகை குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். 'உப்' என்று அவர்கள் விடும் புகைப்படலத்தில் நாங்கள் திணறினோம். வெடவெடக்கும் குளிர். இலைக்கதவு, கண்ணாடிக் கதவு எல்லாவற்றையும் மூடிவிட்டுக் கால் வரைக்கும் கம்பளியில் சுருட்டிக் கொண்டபோதிலும் கை கால்கள் விறைத்து விட்டன. எங்கள் மூச்சுக்கூடப் பனியாக உறைந்து போகுமோ என்று அஞ்சினோம். இந்த நிலையில் தூக்கம் எப்படி வரும்? பல்லைக் கிட்டிக் கொண்ட போதிலும் மீதி இரவு நேரத்தைப் பேசிப் பேசிக் கடத்தி விட்டோம்.

துணியில் நெய்த நாக சந்நியாசி உருவம்

'ஜய் ஜய் பாபா விச்வேச்வர - !' என்ற கோஷம். ஹரித்வாரத்தில் வந்து ரெயில் வண்டி நின்றது. சாமான்களை இறக்கி, இரண்டு 'டாங்கா' வண்டிகளை அமர்த்தி அவற்றில் மூட்டைகளுடன் ஒன்றிக்கொண்டு கனகல் என்ற இடத்துக்குப் புறப்பட்டோம். "ராமகிருஷ்ண மிஷனுக்கு ஓட்டு" என்றார் அண்ணா. டாங்காக்காரனுக்கு முதலில் புரியவில்லை. பிறகு, "வங்காளி ஆஸ்பத்திரியா?" என்றான். ராமகிருஷ்ண மிஷனுக்கு அந்தப் பக்கத்தார் வைத்த பெயர் இது. அண்ணா, "ஆமாம்" என்றார். நல்லபாட்டையில் வண்டி கடகடவென்று விரைந்தது. ஒரே பனிமூட்டம். அவ்வளவாக ஆள் நடமாட்டம் இல்லை. எங்கோ வழியில் ஒரு பைத்தியக்காரன் மீரா பாயின் பாட்டைப் பாடிக்கொண்டே சென்றான். நாமாவளி எழுதிய அங்கி தன் உடலிலிருந்து நழுவிக் கீழே புரள்வதைக் கூடக் கவனிக்கவில்லை அவன். வழியில் குறுக்கிட்ட ஒரு கால்வாயில் குபுகுபுவென்று கலங்கி ஓடியது நீர். ஹரித்வாரத்தின் கங்கை அவ்வளவு அழகாக இருக்குமென்றெல்லாம் கேள்வி உண்டு. என் கற்பனையில் இன்னும் அழகாக அதைப் பார்த்தேன். ஆனால் இந்தக் குழம்பிய நீரைப்பார்த்துத் திடுக்கிட்டேன். வாராவதியைத் தாண்டியதும் இந்த ஓடையும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது.

மஞ்சள் நிற மதில் சூழ்ந்த ராமகிருஷ்ண சேவாசிரமத்துக்கு வந்து சேர்ந்தோம். முன்னாலேயே அதை நிர்வகிக்கும் ஸ்வாமிகளுக்குத் தெரியப்படுத்தி இருந்தோம். எங்களுக்கென்று குறிப்பிட்ட கூடாரத்துக்கு அழைத்துப் போனார் அவர். பெரிய மாந்தோப்புக்குள் வரிசை வரிசையாக எத்தனையோ கூடாரங்கள். கீழே

களிமண் தரை; கால் எல்லாம் மண் ஒட்டிக்கொண்டது. முன்னால் பெய்த மழையினால்தான் இப்படி இருந்தது. ஆசிரமத்துச் சமையல் விடுதி அருகில்தான் இருந்தது. தகரக் குவளைகளில் எங்களுக்குச் சுடச் சுட டீ வழங்கினார்கள். என் விரல் குளிரினால் வளைந்துவிட்டது. குவளையைத் தூக்கக்கூட முடியவில்லை. ரொட்டியும் தந்தார்கள். அதைத் தின்பதற்கு விள்ளும் போது அண்ணாவின் விரல்கள் உதறலிட்டன. சேவாசிரமத்தைச் சேர்ந்தவர்கள் கணகண என்றிருக்கும் பருமனான ஒரு கொள்ளிக்கட்டையை எங்கள் முன் வைத்தார்கள்; குளிர் காய்ந்தோம். உணர்ச்சி வந்தது. அவர்கள் வழங்கிய கோதுமை மாவு ரொட்டியும் பாகு வெல்லமும் அமிர்தம்போல் ருசித்தன.

எங்கள் கூடாரத்துக்குத் திரும்பினோம். தரையில் பாய் விரித்திருந்தது. இரும்பு 'ஸ்பிரிங்' கட்டில் இருந்தது. இடம் விசாலமாக இருந்தது. வெளியிலும் உபத்திரவம் இல்லை.

அக்கா சாமான்களை ஒழித்து வைக்க ஆரம்பித்தாள். கும்பஸ்நானம் முடியும்வரை நாங்கள் அங்கே இருக்க வேண்டியவர்கள். ஏராளமான சில்லறைச் சாமான்கள் ஒவ்வொன்றாகத் தலை காட்டின.

புது இடத்துக்கு வந்ததும் ஒரே இடத்தில் விழுந்து கிடக்க மனம் ஒப்புவதில்லை. குளித்துவிட்டுத் தலையை உலர்த்திக்கொண்டே சற்று வெளியே வந்தேன். பாண்டு வாத்தியங்களுடன் ஒரு பெரிய கூட்டம் தெருவில் சென்றது. சாமந்திப் பூமாலை சாத்திக்கொண்டு, காஷாய ஜண்டாக்களுடன் நூற்றுக்கணக்கான சாதுக்கள் வரிசையாகச் சென்றார்கள். இவர்களிடையே சிங்காரித்த யானைமீது வெள்ளி மஞ்சத்தில் ஒரு மடத்து மகந்து வீற்றிருந்தார். யானை அசைவதும், மஞ்சம் ஆடுவதும், மகந்து உருள்வதும் பார்க்க விநோதமாக இருந்தன.

நடுப் பகலில் ஆசிரமத்திலேயே உண்டோம். பருப்புச் சாதம், ரொட்டி, பொரியல், சட்னி; பிரம்மசாரிகளே தயாரித்தவை. என்ன சுத்தமாக மடைப் பள்ளியை வைத்துக்கொண்டிருந்தார்கள்! யாத்திரிகர்களுக்காக உள்ளூறப் பாடுபடுபவர்கள் இந்தத் தொண்டர்கள். ஆசிரமத் தோட்டத்தில் ஒரு மா மரம் ஓங்கி வளர்ந்திருந்தது. அதன்மீது படர்ந்திருந்த ஒரு கொடியில் காவி நிறப் பூக்கள் ஏராளமாகப் பூத்துக் குலுங்கின. ஒரு சந்நியாசியின் காஷாய ஆடை போலவே அது தோன்றியது.

ஹரித்வாரம் சாதுக்கள் சேரும் இடம். அவர்களில் உடல் நலங் குன்றியவர்களும் உண்டு. இத்தகையவருக்கு இலவச வைத்தியம் செய்யச் சேவாசிரமம் தனி ஆஸ்பத்திரி நடத்தியது. பல துறவிகள் இங்கே உயிர் துறந்தார்கள். இங்கே பத்திரப்படுத்தி இருக்கும் அத்தனை தென்னங் கப்பரைகளும் இதற்குச் சான்று.

சேவாசிரமத்துக்குப் பக்கத்திலேயே நிர்வாணிகள் விடுதி. அதில் இருந்த அறைகள் குச்சுப் போலவே இருந்தன. சாதுக்கள் மட்டும் தங்குவதற்கென அமைந்தவை. சிலவற்றுள் ஆள் இருப்பதற்கு அடையாளமாக நெகிடி எரிந்துகொண்டிருந்தது. இதற்கு

நேர் எதிரே ஹரிஹர மடம். அங்கே சிவனுடைய கோயில் இருந்தது. அதன் திரிசூலம் வானத்தைக் குத்துவது போல் இருந்தது. நான் போன சமயம் குச்சி போட்டிருந்தது. உள்ளே நிகு நிகு என்று எண்ணெய்க் காப்பிட்ட சிவலிங்கம், கணேசர், பார்வதி, விஷ்ணு, சூரியன் இவர்கள் உருவங்கள் எல்லாம் மங்கலாகத் தெரிந்தன.

"கோயிலைச் சுற்றி வரலாம்" என்றாள் அக்கா. பாதி வலம் வந்ததும், "திரும்பு, இது சிவாலயம் அல்லவா! இதுதான் நியமம்" என்றாள். கோயில் பிராகாரத்தில் எங்கும் மூன்று அடுக்குப் பொன் ஊமத்தை பூத்து விளங்கின.

மடத்தை விட்டு வெளியேறும் போது பெரிய ஊர்வலம் ஒன்று வந்தது. குதிரை, ஒட்டகம், பசு மாடு, ஆடு, சாதுக்கள், மகந்துகள், நாக சந்நியாசிகள் எல்லாரும் இருந்தார்கள். தெருவை அடைத்துக்கொண்டு சென்றது கூட்டம். 'ஸ்கெச்' வரையும் நோட்டு என் கையில் இருந்தது. இந்த விசித்திர மனிதர்களைக் கீற்று ஓவியமாக வரைந்துகொண்டே போனேன்.

இன்னும் நாங்கள் ஹரித்வாரத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. கனகல் என்ற இடத்தில் இருந்தோம். இது தட்சன் ஆண்ட இடமாம். சதியான தாட்சாயணி பிறந்து வளர்ந்து, திருமணம் செய்துகொண்டு கடைசியில் வைராக்கியம் பூண்டு உயிரை விட்டது இந்த இடத்தில்தான். தட்ச கட்டத்தின் அருகில் நின்ற போது என் மனம் பழைய உலகில் திரிந்தது. சதியின் நினைவு என் கண்ணில் நீரை வரவழைத்தது.

புனித தீர்த்தம்; புதிய சூழ்நிலை; அபூர்வமான காட்சிகள் கண் முன் சென்றன. சாதுக்கள் புரியும் அற்புதங்களைக் காணவேண்டுமென்பதுதானே என் அவா? அண்ணாவும் ஆசிரமத்து ஸ்வாமிகளும் என்னை ஒரே இடத்தில் நிற்க விடாமல், "நட நட" என்று துரிதப்படுத்தினார்கள். தட்ச கட்டத்திலிருந்து ஒரு கை குளிர்ந்த நீரை எடுத்து என் நெற்றியிலும் கண்ணிலும் தெளித்துக்கொண்டேன். கங்கை நதி அந்த இடத்தில் சற்று இளைத்தே ஓடியது. இன்னும் இரண்டு நாட்களில் 'சோ' என்று வரும் புது நீரை அதில் விடுவார்களாம். இதன் பக்கத்திலேயே சதி கட்டம். சிவனுடைய சதியல்ல; எத்தனையோ உத்தம பத்தினிகளின் ஞாபகார்த்தமாக எழுப்பிய படித்துறை தான். கணவனுடன் உயிர் துறந்த பத்தினிப் பெண்களுக்குச் சிறு சிறு மாடங்கள் இருந்தன. "அந்தக் காலத்தில் என்ன பதிபக்தி! எந்தப் புண்ணியவதிகளோ இவர்கள்!" என்று அக்கா பெருமூச்சு விட்டாள்.

"இங்கிருந்து கொஞ்ச தூரம் போனால் சதிகுண்டம். தட்ச யக்ஞம் நடந்த குண்டம் இதுவே" என்றார் ஸ்வாமிகள்.

கற்கள் சரிந்த ஒரு மேடை தெரிந்தது. புதர் சூழ்ந்த இடம்.

போகிற வழியில் கங்கையை அணைக்குள் தேக்கி இருந்தார்கள். அதன் நீர்விசையில் ஆடும் மில்கள் மூட்டை மூட்டையாக மாவை அரைத்துத் தள்ளின.

திரும்பும்போது கால்வாய் ஓரமாகவே வந்தோம். அதன் இரு புறமும் பச்சைப் பசேலென்று காய்கறித் தோட்டங்கள். செம்மண்

பூமியில் பச்சைக் கீரை வகைகள் போர்த்திருப்பதைப் பார்த்து, எனக்கு அந்த இடத்திலிருந்து வரவே மனம் இல்லை.

பாதைத் திருப்பங்களில் பட்சணக் கடைகள்தோறும் பெரிய இரும்புப் பாத்திரத்தில் எடு கட்டிய எருமைப்பால் காய்ந்து கொண்டிருந்தது. இங்கே தெருவில் திரியும் பிச்சைக்காரச் சிறுவர்கள்கூட என்ன புஷ்டியாக இருந்தார்கள் தெரியுமா?

கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று அக்கா ஒரே பிடிவாதம் பிடித்தாள். ''மலையிலிருந்து பனி உருகி வரும் நீரில் குளித்தால் உடம்புக்கு ஏதாவது வரும்'' என்று ஸ்வாமிகள் எச்சரித்தார்.

''கங்கையின் பெருமை இவர்களுக்கு என்ன தெரியும்!'' என்ருள் அக்கா. ஹரித்வாரத்து வாசலில் உள்ள பிரம்ம குண்டத்தில் ஸ்நானம் செய்யப் புறப்பட்டோம்.

''கும்பமேளாவுக்கு வந்திருக்கிருேம். இதைப்பற்றி விவரமாகச் சொன்னல் கேட்போம்'' என்றேன்.

அண்ணு விளக்கமாகச் சொன்ஞர்: ''சமுத்திரத்தைக் கடைந்த கதை தெரியுமா? அதிலிருந்து எழுந்த லட்சுமியையும் இரண்டு நிதிகளையும் பெறுவதற்காகத் தேவ அசுரர்களிடையே பலத்த போட்டி மூண்டது. லட்சுமியின் எழிலில் மயங்கிய அசுரர்கள் அமிர்தம் வெளியே வருவதைக் கவனிக்கவில்லை. இந்திரன் மெதுவாகத் தன் மகன் ஜயந்தனுக்குக் கண்ஜாடை செய்தான். அமிர்த கலசத்துடன் பையன் நழுவினன். அசுர குரு சுக்கிராசாரியரின் கண்ணில் இது பட்டுவிட்டது. 'பிடி, பிடி திருடனை! அமிர்த கலசம் போய்விட்டது' என்று அவர் கூவினர். அசுரர்கள் ஜயந்தனைத் துரத்திக்கொண்டு ஓடினர்கள். பையன் மூன்றுநாள் இரைக்க இரைக்க ஓடி, நடுவில் இளைப்பாறும்போது அமிர்த கலசத்தை நாலு இடங்களில் வைத்தானும். அந்தப் பெருமைக்குரிய இடங்கள் தான் ஹரித்வாரமும் நாசிகையும் பிரயாகையும் உஜ்ஜயினியும். மூன்று ஆண்டுக்கு ஒரு முறை வருவது 'கும்பம்.' பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருதரம் 'பூர்ண கும்பம்' நடைபெறும். பிரம்ம குண்டத்தின் விசேஷம் இது தான். அமிர்த கலசத்தைத் தரையில் வைத்தபோது, அதிலிருந்து கொஞ்சம் இந்த இடத்தில் சிந்தியதாம். கங்கை பகீரதனுடைய வேண்டுகோளுக்கு மனம் இரங்கிப் பூமியில் இறங்கினள். வரும் விசையில், வானலோகத்துப் பிராணிகளையும் அடித்துக்கொண்டு வந்தாளாம். தேவர்கள் நடுங்கினர்கள்; 'கங்கையின் வேகத்தைத் தடுப்பார் இல்லையா?' என்று ஓலமிடவே, பிரம்மா தம் கமண்டலத்தில் இவளைப் பிடித்துச் சாந்தப்படுத்தி, 'சற்று இங்கு இளைப்பாறு, தாயே' என்ருர். ஒரு பாட்டு உண்டே:

'நாரத கீர்த்தன புலகித
மாதவ விகலித கருணக்ஷரியா
ப்ரஹ்ம கமண்டுலு உச்சல
தூர்ஜடி ஜடில ஜடாபர் ஜரியா.'

இந்தத் துறையில் யாத்திரிகர்கள் எல்லாம் கங்கைக்குப் பால் வார்க்க வேண்டும்'' என்ருர்.

பிறகு பிரம்ம குண்டத்தை அணுகினேம். கடையில் பூவும் பழமும் வாங்கிக் கங்கைத் தாய்க்குப்

படைத்தோம். பிர்லா இங்கே மணிக் கூண்டு ஒன்றைக் கட்டியிருக்கிறார். அதன் பெயர் 'ஹர கி பவுடி' அதாவது 'சிவ பீடம்.' இரு கரைகளிலும் யாத்திரிகர்கள் ஸ்நானம் செய்யக் குண்டத்தைச் சௌகரியமாக அமைத்திருந்தார்கள். 'ஹர போம்! ஹர போம்' என்று முழக்கும் யாத்திரிகர் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. கங்கையின் இரண்டு கரைகளையும் இணைக்க, மரங்களை ஊன்றிப் பல இடங்களில் பாலம் எழுப்பி இருந்தார்கள். கும்பயோகம் இரண்டு மாதம் வரை இருக்கும். கும்பத்தில் மூன்று யோக நாட்கள். கடைசி யோகத்தின்போதுதான் பிரமாதமாக இருக்குமாம். பல பேர் கும்பலில் மிதிபட்டுச் சாவார்களாம். இந்த ஆபத்துக்குள் சிக்காமல் நாங்கள் முன்னாடியே புண்ணியம் சம்பாதிக்க வந்தவர்கள். "அடி, திவ்விய ஸ்தலத்தில் உயிர் விடுவது மகத்தான புண்ணியமாயிற்றே! கொடுத்து வைக்கவேண்டும்" என்றாள் அக்கா.

"இந்தத் தடவை பத்திரமாக வீடு போய்ச் சேருவோம். திரும்பி வந்தால் போகிறது" என்றேன் நான். பெண்கள் நீராடுவதற்குத் தனித்துறை. அங்கே விசேஷமாக, பஞ்சாபிகள்தான் இருந்தார்கள். மழுமழுவென்ற அந்த நாட்டுப் பெண்களின் உடல் அழகும், ஆரோக்கியமும் கண்கொண்டு பார்க்கவேண்டியவை. அங்கியைக் களைந்துவிட்டு அப்படியே நீரில் வெள்ளை வெளுக்க இறங்கி விடுகிறார்கள். துளியேனும் லஜ்ஜை கொள்ளவில்லை. அவர்கள் நீரில் திளைக்கும்போது அப்ஸரஸ்கள் கங்கையில் நீராடும் காவிய வர்ணனை என் ஞாபகத்துக்கு வந்தது.

பிரம்ம குண்டத்தின் கரையில் இரு சாரியிலும் பாத்திரக் கடைகள். அக்கா அங்கே புகுந்துவிட்டாள். ஊருக்குத் திரும்பும்போது புண்ணியம் நிறையுமோ, பாத்திரங்கள் நிறையுமோ என்று எனக்குத் திகில் வந்துவிட்டது. நல்லகாலம் அப்போது பாண்டு வாத்தியத்துடன் நாக சந்நியாசிகளின் கூட்டம் ஒன்று தடபுடலாக வந்தது. ஒவ்வொருவரின் பின்னாலும் பெரிய அளவு தண்டம் ஏந்திய ஆள்; வெள்ளி விமானத்தில் இவர்களுடைய மண்டலேசுவரர் இருபது பேர்களின் தோள் நெரிய வந்துகொண்டிருந்தார். மிகவும் கம்பீரமானவர். கையில் இருக்கும் வெள்ளை உருமாலினால் நெற்றி வேர்வையைத் துடைத்துக் கொண்டே இருந்தார். கண்ணில் மூக்குக் கண்ணாடி, கழுத்தில் மஞ்சள் நிறப் பூமாலை, அரையில் காவியாடை இவை எல்லாம் சேர்ந்து விநோதமாக விளங்கினார். மாயாதேவியின் ஆலயத்தண்டை ஊர்வலம் வந்து நின்றது. நாங்கள் இந்தக் கூட்டத்தில் திசை கெட்டுத் திரிந்தோம். முன்னால் பார்த்தால் நாக சந்நியாசிகள்; பின்னாலும் அவர்களே! அண்ணா எந்த மூலையில் எங்களைத் தேடி அலைந்தாரோ, பாவம்; கடைசியில் எவ்வளவோ சிரமப்பட்டுப் பிழைத்து வெளியேறி ஒன்று சேர்ந்தோம்.

கங்கை நீர் வர வரத் தெளிந்து கொண்டே வந்தது. அடியில் கற்கள் தெரிந்தன. எத்தனை வகையான மீன்கள் கொழு கொழு வென்று உள்ளே உலாவின! கோதுமை மாவு உருண்டைகளை விற்றார்கள். பைசாவுக்கு மூன்று

உருண்டைகளைப் போட்டோம். 'லபக் லபக்' என்று மீன்கள் விழுங்கின.

நடந்தே வாராவதியைக் கடந்து எதிர்க் கரையை அடைந்தோம். அங்கிருந்து நோக்கினல் ஹரித்வாரத்தின் காட்சி வெகு அழகாயிருந்தது. மலைச்சரிவில் வரிசை வரிசையாக மேடைகள், மண்டபங்கள், வீடுகள்; கங்கை சலசலவென்று படிகளைக் கழுவியும், மண்டபங்களில் புகுந்தும் ஓடியது.

எங்கள் கூடாரத்துக்குத் திரும்பினேம். அன்று முழுவதும் வெறுங் கதையிலும் வம்பளப்பிலும் பொழுதைப் போக்கினேம். ஒரே இடத்தில் உட்கார்ந்தால் கைகால் திமிர்த்துக்கொள்ளுமென்று நடுநடுவே ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

எத்தனையோ 'ஸ்பெஷல்'களில் யாத்திரிகர்கள் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். தெருக்களில் சந்தடி அதிகமாகிட்டது. டாங்கா வண்டியில் வரும் ஒரு கிழவி, "என்னை எங்கேயோ தனியாகக் கொண்டு வந்து விட்டாயே!" என்று கூவினள். டாங்காக்காரன் அவளை ஊர் முழுவதும் சுற்றி அடித்து, வாடகை தந்தால்தான் கீழே இறக்குவேனென்று பிடிவாதம் பிடித்தான். அண்ணு கிழவியின் உதவிக்குச் சென்ருர்; விஷயம் தெரிந்தது. கும்பலில் இந்தக் கிழவியை அவளைச் சேர்ந்தவர்கள் தனியாக விட்டுவிட்டார்கள். அவள் எத்தனையோ நாட்களுக்கு முன் இந்தப் பக்கம் வந்தாளாம். ஏதோ தெரிந்தது போல் டாங்கா வண்டியில் ஏறினள், பாவம்; இடம் தெரியவில்லை!

"எங்கே போகவேண்டும், பாட்டி?" என்ருர் அண்ணு.

"அதுதான் அப்பா, பெரிய தெருவுக்குப் பக்கத்திலே சந்து வருகிறதே" என்ருள் அவள்.

'இதென்ன சங்கடம்!' என்று டாங்காக்காரனைப் பார்த்து அண்ணு, "பண்டாக்களுக்குத் தெரியும், புதிசாக வரும் ஆட்களை. இந்தக் கிழவியை அவர்களிடம் சேர்த்து விடு" என்ருர்.

'பண்டாரா' என்பது இங்கே நடக்கும் வேடிக்கைகளில் ஒன்று. விடுதியில் இருக்கும் வலுத்த மடாதிபதிகள் சாதுக்களுக்குச் செய்யும் விருந்து இது. எத்தனையோ சந்நியாசிச் சம்பிரதாயத்தார் இருந்தார்கள். இதில் இரு வகை. தனித்தனி மடத்துக்கு நடத்துவது ஒரு வகை; மொத்தமாக எல்லாருக்கும் நடத்துவது இன்னொரு வகை. 'சமஷ்டி பண்டாரா' என்பதை நான் பார்த்தேன். ஹரிஹர மடத்தில் பெரிய கூடங்களில் ஒரே வரிசையில் ஐந்நூறு சாதுக்கள் அமர்ந்திருந்தார்கள். சால இலையைப் பரப்பிப் பலவகையான பட்சண பரமான்னங்களை வைத்தார்கள். நல்ல பகல் வேளை. சாதுக்களின் கூம்பிய முதுகில் வெயில் காய்ந்தது. அத்தனை இலைகளுக்கும் பரிமாறியானதும் மண்டலேசுவரர் வந்து பார்த்தார். வெளியாட்களை உள்ளே விடுவதில்லை. நான் பக்கத்து வீட்டு மாடியிலிருந்து இதைக் கவனித்தேன். கீதையின் பதினைந்தாம் அத்தியாயத்தைச் சமஸ்வரத்தில் சாதுக்கள் ஓதினர்கள். காக்கைகள் இங்குமங்கும் பறந்து இலைகளில் உள்ளதைக் கொத்திச் சென்றன. அவைகளை விரட்டுவதற்கு முற்றத்தில் வெயிலில்

நிலைக்கண்ணாடியை வைத்து வெளிச்சம் காட்டினார்கள். அப்புறம் ஒரு காக்கை வரவில்லை.

"சரியான யுக்தியடீ! நாமும் காக்கை உபத்திரவத்துக்கு இப்படித்தான் செய்யவேண்டும்" என்றாள் அக்கா. திருச்சின்னம் ஊதியதும் அத்தனை சாதுக்களும் 'அவுக்' 'அவுக்' என்று உண்ணத் தொடங்கினார்கள். சாப்பிட்டானதும் திடுமென்று எழுந்துவிடவில்லை. எல்லாரும் சாப்பிட்டாயிற்று என்று மறுபடியும் மண்டேலேசுவரர் பார்வை இட்டார். திருச் சின்னம் ஊதியதும் வரிசையாகக் கையை அலம்பச் சாதுக்கள் எழுந்து சென்றார்கள். எத்தனை ஒழுங்கு, என்ன கட்டுப்பாடு இவர்களிடத்தில்! கங்கையின் கரையில் ஓர் இடத்தில் ஒரே கூட்டம். என்னவென்று எட்டிப் பார்த்தோம். படிகள் தண்ணீர் மட்டத்துக்கு இறங்கின. அங்கே அகலமான மேடை ஒன்றில் ஒரு நாக சந்நியாசி ஈட்டி முனையில் பயங்கரமான சாதனைகளைச் செய்து காட்டினார்.

"இந்த ஹடயோகக் கண்ணராவியை ஏன் பார்க்கிறீர்கள்?" என்றார் அண்ணா.

கடைசி வரைக்கும் நானும் அக்காவும் அந்தச் சந்நியாசி செய்யும் 'கசர'த்தைப் பார்த்துவிட்டே திரும்பினோம். பிறகு அவர் கங்கையில் இறங்கி முகத்தைக் கழுவிக்கொண்டு ருத்திராட்ச மாலையைப் பூணூலைப்போல் உடலில் போட்டுக்கொண்டார். இடுப்பில் வெளுப்புக் கயிறு கட்டியிருந்தார். வலது கையில் வளையம். வெளிச்சத்தில் அது பளபளத்தது. அவர் ஈட்டியை வேகமாகச் சுழற்றியபடி ஏறி வரும்போது கும்பல் கலைந்துபோயிற்று.

சிவபீடத்துக்கு வந்தோம். கங்கைக்கு ஆரத்தி சுற்றும் வேளை. துறையில் இருள் கவியக் கவியப் பிரம்ம குண்டத்தின் கரையில் ஆரத்தி தீபம் ஒளிர்ந்தது. மூன்று பண்டாக்கள் மூன்று கை கொடுத்து மூன்று பெரிய விளக்குகளை ஏற்றிக் கீழே இறங்கிப் படியில் நின்றார்கள். நெய்த் தீபம்; காற்றில் அதன் கொழுந்து நின்று சுடர்விட்டது. இந்தக் கரையிலிருந்து நோக்கும்பொழுது மூன்று கிளையான ஒளிக்கொழுந்து இருளைக் கிறிக்கொண்டு போயிற்று. ஆரத்தியைக் கையால் தொட்டு ஒத்திக்கொள்ள எங்களுக்கும் அளித்தாள் அக்கா.

அன்று கும்பயோகத்தில் முதல் ஸ்நானம். இருள் பிரியுமுன்பே பிரம்ம குண்டத்தை அடைந்தோம். யாரும் துறையில் இருக்க மாட்டார்கள், நிம்மதியாக அமிழ்ந்து ஸ்நானம் செய்யலாமென்று போனோம். அவ்வளவு சுலபமாக முடியவில்லை. எங்களுக்கு முன்னாலேயே லட்சக்கணக்கான பேர் அங்கே நெரிபட்டார்கள். போலீஸ் பாராவும் அதிகமாக இருந்தது. சாது சந்நியாசிகள் ஒவ்வொரு சம்பிரதாயமாக வந்து ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிய பிறகே யாத்திரிகர்களை அநுமதித்தார்கள். அந்தச் சமயம் என்ன நெருக்கடி! ஒருவரை ஒருவர் துவைத்துக்கொண்டு சென்றார்கள். அன்று முழுவதும் யோகமானதால் குளிப்பவர் எண்ணிக்கை குறையவே இல்லை. மடத்து ஸ்வாமிகள் மட்டும், "அம்மா, கங்கை எப்போதுமே புனிதந்தான். சௌகரியமாகக் குளித்தால் போகிறது" என்று எச்சரித்தார்.

பிரம்ம குண்டத்தின் நடுவே அகலமான ஒரு கம்பத்தின் உச்சியில் கங்கா தேவியின் கோயில். எத்தனையோ பேர் நீந்தி அதை அடைந்து வலம் வந்தார்கள்.

உண்மையில் அது ராஜா மான் சிங்கினுடைய 'பஸ்ம ஸ்தம்பம்'. அக்பர் மான்சிங்கிடம், "எனக்கு எவ்வளவோ நீ செய்திருக்கிறாய். உனக்கு நான் என்ன செய்யப் போகிறேனோ?" என்றாராம். "நான் இறந்த பிறகு என் அஸ்தியையும் சாம்பலையும் இங்கே கரைத்ததும், ஒரு ஞாபகச் சின்னத்தை எழுப்புங்கள்" என்றாராம் மான்சிங். அதுதான் இந்த ஸ்தம்பம். இந்தப் பிரம்ம குண்டத்தில் எவருடைய சாம்பல் விழுந்தாலும் சரி, அவருடைய ஆத்மா முக்தி அடைகிறதென்று சொல்கிறார்கள்.

கரையெங்கும் படிக்குப் படி குட்டிக் குச்சுக்குள் கங்காமாயீ, சிவசம்பு, ராமசந்திரஜீ, வீர ஹநுமான், கல்கத்தா காளி, பழைய கேதாரநாதர், பதரிநாதர் இப்படிப் பல தேவதேவிகளின் மூர்த்திகள் இருந்தன. இரண்டு கமண்டலம் நிறையப் பாலும் கங்கையும் கலந்து எங்கள் ஒவ்வொருவர் தலைமீதும் தெளித்துக்கொண்டே போனாள் அக்கா. அவளுடன் நாங்கள், "சிவாய நம:, சிவாய நம:" என்று உச்சரித்தோம்.

எத்தனை நேரம் ஈரப் புடைவையுடன் இருப்பது? நாக சந்நியாசிகளின் கூட்டம் வர இன்னும் அதிக நேரம் இருக்கவே உலர்ந்த ஆடையைக் கட்டிக் கொள்ளத் திரும்பினோம். எந்தத் தெருவில் சென்றாலும் வழி அடைத்திருந்தது. ஒரே கும்பல். போலீசார் ஜனங்களை மூலைக்கு மூலை விரட்டினார்கள். எங்கிருந்தோ திபு திபுவென்று நாக சந்நியாசிகள் வருவார்களாம். ஜனக்கூட்டம் அவர்களைப் பார்க்கச் சரியுமாம். அப்போது எத்தனையோ பேர் குழைந்து போய் இறப்பது வழக்கம். இதைத் தடுக்க இரண்டு பக்கமும் போலீசார் முள்வேலி போட்டிருந்தார்கள். எங்கள் இடத்துக்குத் திரும்ப முடியாமல் நாங்கள் திண்டாடும்போது போலீஸ் சேவகன் ஒருவன் இரக்கங் கொண்டு எங்களை முள் வேலியைத் தாண்டி மெல்லத் தள்ளிவிட்டான்; பிழைத்தோம். மேல் அதிகாரி அவனைக் கண்டித்தார். இருந்தாலும் அவன் ஏதோ சொல்லிச் சாமர்த்தியமாக மழுப்பிவிட்டான்.

கும்பல் துறைப்படிகளை மொய்த்துக்கொண்டு நின்றது. வீட்டுக் கூரைமீது ஏறிப் பார்த்தார்கள் பலர். அநேகம் பேர் மரக்கிளைகளில் தொங்கினார்கள். எங்கே திரும்பினாலும் தலை, தலை, தலை! இடை இடையே பச்சையும் சிவப்புமாக முக்காடிட்டுப் பெண்கள் எத்தனையோ நேரமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் என் 'ஸ்கெச்' புத்தகத்தில் வரைய உட்கார்ந்தேன். கெட்ட சகுனம்போல் பென்ஸிலின் முனை உடைந்துவிட்டது. இந்தச் சங்கடத்தில் எங்கள் பக்கத்தைச் சேர்ந்த ஓர் அம்மாள் வள வளவென்று பேச ஆரம்பித்துவிட்டாள். இரைச்சல் கேட்டது. ஜனசமுத்திரம் நெளிந்தது. முன்னால் இருப்பவர்களைப் பின்னால் உள்ளவர்கள் நெட்டித் தள்ளினார்கள்.

சிலர் உருண்டார்கள்; வீரிட்டார்கள் பலர். 'டும் டும்' என்று தம்

பட்டம், பாண்டு வாத்தியங்களுடன் என்னவோ நெருங்கி வந்துகொண்டிருந்தது.

பார்த்துக்கொண்டிருக்கும்போதே அறையின் படிகள் எங்கும் ஒரே காவிநிறக் குழப்பமாகிவிட்டது. நாக சந்நியாசிகள் வேகமாக வந்து இறங்கினார்கள். மண்டலேசுவரரின் தலைமேல் பூக்களால் செய்த ஜரிகை ஜாலர் தொங்கும் குடை. இருபுறமும் சாமரம். சந்நியாசிகள் கழுத்தில் சாமந்தி மாலை. கழுத்து மாலையை அறுத்து நதியில் வீசினார்கள். பிரம்ம குண்டமே மஞ்சள்மாலைமயமாயிற்று. சிற்றலையில் அவை மெல்ல மிதந்தன. இன்னும் நீரில் அவர்கள் இறங்கவில்லை. எதையோ எதிர்நோக்கி ஒழுங்குக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள்.

கும்பலை ஒதுக்கிக்கொண்டே சிலபேர் சின்ன வெள்ளி ஆசனம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அதை நீரில் அமிழ்த்தினார்கள். ஜண்டாக்களை நீரில் தாழ்த்தினார்கள். திருச்சின்னம் ஒலித்தது. ''ஜய் ஜய்! கங்காமாயீ கி ஜய்'' என்றதும் அத்தனை சாதுக்களும் நீரில் மூழ்கினார்கள். பிறகு எழுந்து குளிரினால் நடுங்கும் தம் உடலில் விபூதியை அப்பிக்கொண்டார்கள். ''கும்ப யோகம், கும்பயோகம் என்றோமே; முடிந்தது. திரும்பலாம் வா'' என்றாள் அக்கா.

கடைசி யோகத்துக்கு இன்னும் நாட்கள் இருந்தன. ஹ்ருஷீகேசத்துக்குப் பயணமானோம். ஹரித்வாரம் பெரிய மலைகளின் அடியில் இருந்தது. ஹ்ருஷீகேசம் அந்த மலைகளின் மடியில் பசுமையாகப் படிந்திருந்தது. ரம்மியமான இடம். உண்மைச் சாதனையில் ஈடுபட்டவர்கள் இங்கேதான் வசித்தார்கள்.

திரிவேணி கட்டம் கங்கையைத் தொடக் கீழே இறங்கியது. ஆற்றில் நிறைய நீர் இல்லை. அதன் நடு நடுவே கறுப்புப் பாறைகள். கோதுமை மாவு உருண்டையைக் கூடி விற்கும் சிறுவர்கள் இங்கேயும் இருந்தார்கள்.

''மீன் எங்கே?'' என்றேன்.

''அந்தக் கறுப்புப் பாறைகள்தான் மீன்களின் கூட்டம்; மாவு உருண்டைக்குக் காத்திருக்கின்றன'' என்றார் அண்ணா.

கங்கையில் சோப்புப் போட்டுத் துணி துவைக்கக் கூடாதென்று கொட்டை எழுத்துக்களில் எச்சரிக்கை இருந்தது. பக்கத்திலேயே ராமர் கோயில். அதன் பண்டா எங்களுக்குப் பிரசாதமாக நுக்கல் என்ற பூ இதழைப் போன்ற தித்திப்புப் பண்டத்தை வழங்கினார். இங்கே குரங்குகள் விசேஷம். அவை நீந்துவது பார்க்கத் தமாஷாக இருந்தது.

இங்கே மூன்று சத்திரங்கள் பெயர் போனவை. அதில் பாபா கம்பளிவாலாவின் விடுதியே பெரிது. அதில் எத்தனையோ அறைகள்; சாதுக்கள் தங்கிச் சாஸ்திர அத்தியயனம் செய்யச் சௌகரியங்கள் செய்திருந்தார்கள். பாபா கம்பளிவாலாவின் கதை விசித்திரமானது. இவர் ஒரு வங்காளியாம். கல்கத்தாவில் ஹாரிசன் ரோடில் ஒரு லாந்தர்க் கம்பத்தின்கீழ் ஒரே நிலையாக அசையாமல் தவம் கிடந்தாராம். ஜனங்கள், 'எந்த மகானோ!' என்று கும்பல் கூடினார்கள். வண்டிப் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக இருக்கவே, இவரைப் போலீசார் அதட்டியும் இவர்

நகரவில்லையாம். ஒரே பிடிவாதமாக, "இதோ என் காலின்கீழே என்றைக்கு ஒரு லட்சம் ரூபாய் சேருகிறதோ அன்றுதான் இந்த இடத்தை விட்டுக் கிளம்புவேன்" என்றாராம். பிடிவாதம் பலித்தது. எத்தனையோ லட்சம் வந்து குவிந்தன. இந்தச் சத்திரத்தைக் கட்டினார்.

குளிரில் நடுங்கும் சாதுக்களுக்குக் கம்பளி வழங்கினார். அவர்களின் பசிப்பிணியைப் போக்கினார். மற்றொரு விசேஷம்: இங்கே மர இலைகளையும் செடி கொடிகளையும், விரைவாக இறங்கி ஓடும் கங்கை, பாறைச் சிப்பல்களாக (Fossil) மாற்றிவிடுகிறதாம். என் கண்ணாலேயே பார்த்தேன். என் மகன் நம்ப மாட்டானே என்று மாதிரிக்கு ஏழெட்டு எடுத்து வைத்துக்கொண்டேன்.

'டாக்ஸி'யில் ஹரித்வாரத்துக்குத் திரும்பினோம். ஊரே முற்றும் மாறிப் போயிருந்தது. ஒரே ஜன வெள்ளம். ஆனந்தக் கூச்சல். வற்றலாக நின்ற மரங்கள் தளிர்த்திருந்தன. "இந்தப் பூர்ணகும்ப ஸ்நானம் மிகவும் புண்ணியமானது" என்றார் எங்கள் பண்டா. கூட்டத்தில் எள் போட இடமில்லை. குடங்குடமாகப் பாலைப் பொழிந்தார்கள் கங்காதேவிக்கு. இந்தயோகத்தில் எத்தனை தம்பதிகள் புடைவையையும் வேஷ்டியையும் முடி போட்டுக்கொண்டு தர்ப்பணம்விட்டார்கள் தெரியுமா! தெய்விகத்தின் மணம் எங்கும் பரவியது. 'தள்ளிப் போ, தள்ளிப் போ' என்று சாரணர்களின் குரல் கேட்டது. லேசாகத் தடியால் தீண்டிப் போலீசார் ஜனங்களைக் கட்டுக்கு உட்படுத்தினார்கள்.

பூர்ணகும்பம் முடிந்தது. ஊருக்குத் திரும்பும் படலம். அலைச்சல், சலிப்பு இருந்தும் மனத்தில் மகிழ்ச்சி ததும்பியது. என் வைஷ்ணவித் தோழியைக் கண்டேன். "வாழ்க்கையின் கணக்கைச் சரி பார்க்க வெளியே சென்றாயே? கிடைத்ததா விடை?" என்றேன்.

"எப்படிக் கிடைக்கும்?" என்று அவள் சிரித்தாள். பிறகு, "குலம் பொல்லேன்; குறியும் இல்லேன்; என்னுள் புகுந்து உள்ளம் நிறைந்த அச்சுரு மணியைக் காணேனே" என்று கண்ணீர் உதிர்த்தாள்.

விதி ராட்சசன்

மனிதர்கள் தாங்கள் புரியும் தவறுகளையெல்லாம் ஒன்றாய்க் குவித்து ஒரு ராட்சசனைச் சிருஷ்டிக்கிறார்கள். அவனுக்கே தலைவிதி என்று பெயர் சூட்டுகிறார்கள்.

—ஜான் ஆலிவர் ஹாப்ஸ்

கடலைப் பார்; அலையைப் பார்க்காதே. எறும்புக்கும் தேவதூதனுக்கும் எவ்வித வேற்றுமையும் பாராதே.

—விவேகானந்தர்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

கடமை

லோகமான்ய திலகர், 'மிருகசிர்ஷம்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலே ஒரு நூல் எழுதியிருந்தார். இதில் வான சாஸ்திரத்தின்படி வேதகாலம் எது என்பதை விரிவாக ஆராய்ந்திருந்தார். புகழ்பெற்ற மேல்நாட்டு ஆராய்ச்சியாளரான மாக்ஸ் முல்லரின் கைக்கு இந்தப் புத்தகம் கிடைத்தது. இதைப் படித்து அவர் பிரமித்துப் போனார். இவ்வளவு சிறந்த அறிவாளியிடம் தம்முடைய ரிக்வேத மொழிபெயர்ப்பைக் காண்பிக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று.

அப்பொழுது திலகர் சிறையிலே இருந்தார். மாக்ஸ் முல்லர் தமது கையெழுத்துப் பிரதியைச் சர்க்கார் மூலமாக அவருக்கு அனுப்பி, அதை அவர் படிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் செய்வித்தார். சிறையில் வேதங்களைப் படித்த போது, ஆரியர்களின் பிறப்பிடம் வடதுருவப் பிரதேசந்தான் என்று திலகருக்குத் தெரிந்தது. மாக்ஸ் முல்லரின் மத்தியஸ்தத்தினால் குறித்த தண்டனைக் காலத்துக்கு ஆறு மாதம் முன்னமே அவர் விடுதலை அடைந்தார்.

சிறையிலிருந்து வெளிவந்ததும் பல மும்முரமான வேலைகளினிடையே, 'வேதங்களில் வடதுருவப் பிரதேசம்' என்ற நூலைத் திலகர் எழுதினார். அவருடைய புகழ் மேல்நாடுகளில் பரவியது. "நீங்கள் அரசியலை விட்டு உயர்ந்த நூல்கள் எழுத வேண்டும்" என்று பல நண்பர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

"நாட்டுக்காகப் போராடுவதே என் கடமை. இந்த நாட்டிலே உயர்ந்த நூல்கள் எழுதும் புலவர்கள் பலர் இருக்கிறார்கள்" என்று அவர் பதில் சொன்னார்.

"சுயராஜ்யம் கிடைத்ததும் நீங்கள் எந்தத் துறைக்கு மந்திரியாவீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"எனக்கு அரசியலில் தனிப்பற்று எதுவும் இல்லை. சுயராஜ்யம் கிடைத்ததும் நான் கணித ஆசிரியாகி, கவலையில்லாமல் படித்துக்கொண்டு மகிழ்வேன்" என்றார் திலகர்.

நாட்டுக்கு விடுதலை கிடைக்காதவரையில் படிப்பினால் ஒருவன் மகிழ முடியாது என்பது அவர் கொள்கை.

—'வாழ்க்கையே காவியம்', காலேல்கர்.

March '54 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - பங்குனி

நம் உலகமும்		1
தாயின் அவசரம்	பேரெண்ட்ஸ் மகஸீன்	3
ஹிட்லரின் குழந்தையா?		6
செல்வம்	வழித் துணை	9
ரசிகர் டி. கே. சி.		11
என்னைக் கேளுங்கள்	காப்டன் சேஷாத்திரிநாதன்	15
விருத்திரன் கதை		18
வேர்வை விடும் மணி		23
பல மதம் கண்ட கோயில்	பாரதி	25
நீதியும் பஞ்சாயத்தும	ஹிந்துஸ்தான் டைம்ஸ்	29
அரண்மனையில் ஏலம்		33
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	ஃபில்மிண்டியா	38
சாவுக்கு அஞ்சாத மக்கள்	விசால பாரத்	40
கார்ட்டூன் கதம்பம		44
சந்தடி இல்லாத நகரம்		46
திரிதோஷங்களும் உணவும்	பிரகிருதி	50
அபூர்வப் பாலங்கள்		53
குளத்து ராட்சசன்	அமிர்த பஜார் பத்திரிகை	57
சிருங்கேரி ஜாகீர்	ஃப்ரீ இந்தியா	62
வில்வம்	இண்டியன் ஃபார்மிங்	67
அம்மா (கன்னடக் கதை)	ஸ்ரீ வாணி-ஜயலட்சுமி ஸ்ரீநிவாசன்	69
கும்ப மேளா (வங்கப் புத்தகச் சுருக்கம்)	ராணி சந்தா	77
கடமை	காகா காலேல்கர்	(3-ஆம் அட்டை)